REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 11 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வருட. 91 இல. 241 | Wednesday 11, October, 2023 | 20பக்கங்கள் | 50/-

## இஸ்ரேலிலுள்ள இலங்கையரை தேவை ஏற்படின் அழைத்து வரலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

காஸா எல்லை மோதல்கள் காரணமாக தற்போது இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான அவசியம் ஏற்படவில்லையென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இதுபற்றி அப்பணியகம் தெரிவித்ததாவது: இஸ்ரேலில் 06

### மனித வளம், பூகோள அமைவிடம் என்பவற்றைப் பயன்படுத்தி

# நாட்டை துரித பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்வேன்

## SLIIT கண்டி கிளையை திறந்து வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் பூகோள ரீதியான அமைவிடமும் மனித வளமும் மட்டுமே பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கான ஒரே வழியென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை கட்டியெழுப்புவதற்கு மனித வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதே முக்கிய நோக்கமாகுமெனவும் தெரிவித்தார்.

சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகள் மனிதவளத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் 06




தொழில்நுட்ப அறிவைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில், புதிய அரச மற்றும் தனியார் பல்கலைகள் ஸ்தாபிக்கப்படும்

## சபாநாயகருக்கு ஜனாதிபதியின் பிறந்தநாள் வாழ்த்து



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (10) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேக் வெட்டி அவரை கௌரவித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## முதலீட்டு உடன்படிக்கையை நீடிக்க அமைச்சரவை இணக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை, அவுஸ்திரேலியா வர்த்தக மற்றும் முதலீட்டு வரைபுக்கான ஒப்பந்தத்தின் காலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கையின் முக்கிய நேரடியான வெளிநாட்டு முதலீட்டு தரப்பாக அவுஸ்திரேலியா உள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளின் வருகையும் ஐந்தாவது இடமாக காணப்படுவதாக 06

## IORA மாநாட்டில் கலந்துகொள்வதற்கு பிரிட்டன் அமைச்சர் இலங்கை வருகை

### அமைச்சர் அலி சப்ரியுடன் நேற்று சந்திப்பு



ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ பசிபிக் பிராந்தியத்துக்கான வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அன்னேமேரி ட்ரெவெல்யன் (AnneMarie Trevelyan) மூன்று நாள் பயணமாக நேற்று இலங்கை வந்தடைந்தார்.

ஐக்கிய இராச்சியத்துக்கும் இலங்கைக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 வருடங்கள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் அமைச்சர் ட்ரெவெல்யன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக கொழும்பிலுள்ள 06

## கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி சீனா பயணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 14ஆம் திகதி சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சீனாவில் தங்கியுள்ள நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பல மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இந்த சீன விஜயத்தின் போது சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங் உடன் விசேட சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் முக்கிய நாடாக சீனா விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாகபட்டிணம் - காங்கேசன்துறை கப்பல்சேவையில் திடீர் தாமதம்

### நாளை முதல் ஆரம்பிக்கப்படுமென தெரிவிப்பு

நாகபட்டிணம் இலங்கை கப்பல் போக்குவரத்து சேவை நாளை 12 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாகபட்டிணம் துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான



சோதனை ஓட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. 06

## 2023 சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட 53,965 விவசாயிகளுக்கு இழப்பீடு

### நிதியை ஒதுக்க அமைச்சரவை அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சீரற்ற காலநிலையால் சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நிதியொதுக்கப் பட்டுள்ளது.

நிலவிய சீரற்ற காலநிலையால் இவ்விவசாய செய்கைகளுக்கு போதுமானளவு நீர் வழங்க முடியாமல்போனது. இதனால், 58,770 ஏக்கர் நெற்செய்கை மற்றும் வேறு பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டன. இதில் 53,965 விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகினர். இவ்வாறு 06

## பொருளாதார சீர்திருத்தத்துக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக்கள்

### IMF மற்றும் உலக வங்கியும் உறுதியளிப்பு



இலங்கையின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் உறுதியளித்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக 06

### க.பொ.த உயர் தரத்தில்

## சித்தியடைந்தவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்பு

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், சுங்கப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் இது பற்றிய மேலதிக விபரங்களை பார்வையிடலாம். 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 06

## டியூசன் வகுப்புக்களால் இலவசக் கல்வி பாதிப்பு

### பரீட்சை அனுமதிகளுக்கு வருகை புள்ளிகளும் கட்டாயம்



மாணவர்களுக்கு பாடசாலை வருகை கட்டாயமெனவும் பரீட்சை பெறுபேறுகளுடன் எதிர்காலத்தில் பாடசாலை வருகைக்கான புள்ளிகளும் சேர்க்கப்படுமென கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். .

புதிய கல்வி மாற்றத்தின் கீழ், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு கூட பாடசாலை வருகையில், குறிப்பிட்ட புள்ளிகளைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரமே, எதிர்காலத்தில் மாணவர்கள் 06

### 31 வருடங்களுக்கு முன் நடந்த கொலை

## களுத்துறையில் மூவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

(பொதுப்பிட்டிய நிருபர்)



நபர் ஒருவரை 31 வருடங்களுக்கு முன்பொல்லுகளால் தாக்கி கொலை செய்த மூவருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன நேற்று (10) இந்த தீர்ப்பை வழங்கினார். இதில், குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூவருக்கு 06

### இராணுவத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவு

## 314 அதிகாரிகள்-1565 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு

### ஜனாதிபதி ரணிலால் வழங்கப்பட்டது



இராணுவத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு (10)

இராணுவத்தின் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்த 314 அதிகாரிகள் மற்றும் 1,565 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் பரிந்துரையின்படி, முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 06



## 03 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை: மேலதிக வகுப்புகளுக்கு தடை

### வவுனியாவில் அதிகாலை கோரவிபத்து

## மாடு ஒன்றுடன் மோதியதில் STF ஜீப் வண்டி தடம்புரள்வு



### இரு வீரர்கள் மரணம், அறுவருக்கு காயம்

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விசேட 06

## புத்தளத்தில் ரூ.02 கோடி மதிப்புள்ள பீடி இலை கடத்தல் முறியடிப்பு

### லொறியுடன் ஒருவரை பொலிஸார் மடக்கிப்பிடிப்பு

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)



தும்புச்சோறு என்ற போர்வையில் கொண்டு வரப்பட்ட 18 மூடை பீடி இலைகளை மதுரங்குளி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். 06

## ஆண், பெண் பாலினம் சார்ந்த வன்முறைகள்

### தடுப்பதற்கு மிகமுக்கிய 03 சட்டங்கள்

நாட்டில் ஆண், பெண் பாலினம் சார்ந்த வன்முறைகளை தடுப்பதற்கான மிக முக்கிய 03 சட்டங்களை கொண்டுவர ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியிருக்கும் அதேநேரம், 10 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் பெண்கள் பாதுகாப்புக்கான மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் 06



அரசாங்க வர்த்தமானி

15 ஆம் திகதி முதல்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

பத்திரிகையுடன் வாரம்தோறும்

இலவசமாக வெளிவரும்

பிரதிகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள பத்திரிகை முகவர்களை நாடுங்கள்

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்






மின்சாரத்தை துண்டித்த

## இ.மி.ச ஊழியர்கள் இருவர் மீது தாக்குதல்; பொலிஸார் விசாரணை

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

மதுரங்குளி முக்குத் தொடுவா பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவர் மீது மணல் விற்பனை செய்யும் வர்த்தகர் உள்ளிட்ட சிலர் கடுமையாக தாக்கியுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான புத்தளம் மின்சார சபை அலுவலகத்தில் மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபடும் இரண்டு ஊழியர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மணல் விற்பனை செய்து வரும் வர்த்தகரின் வியாபார தளத்தில் மின்சாரத்தை துண்டித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போதே சந்தேக நபர்கள் குறித்த இருவரையும் மறைத்து தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரத்தை துண்டிக்கும் ஊழியர்கள் இருவரும் குறித்த இடத்திற்கு மின்சாரத்தை துண்டிப்பதற்காக சென்றபோது, அங்கிருந்த பெண்ணொருவரிடம் தெரிவித்துவிட்டே மின்சாரத்தை துண்டித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

எனினும், மின்சார பட்டியலை செலுத்திவிட்டு தங்களுக்கு அறியத்தந்தால் மீண்டும் வந்து மின் இணைப்பை வழங்குவதாகவும் அந்த ஊழியர்கள் அங்கிருந்த பெண்ணிடம் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்;

# காட்டு யானைகளின் அச்சுறுத்தலை தடுக்க 07 புதிய மின்வேலிகளை அமைக்க திட்டம்

## மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவிப்பு



திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் உடைமைகள், பயிர்கள், மற்றும் சொத்துக்களை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாக்கும் வேலைத்திட்டமாக மின்சார வேலிகளை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு 07 புதிய மின்வேலிகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தெரிவித்தார்.

மின்சார வேலியின் மொத்த தூரம் 342.8 கி.மீ. ஆகும். இங்கு அநுராதபுரம் வனவிலங்கு வலயம் மற்றும் வவுனியா வனவிலங்கு வலயம் என இரண்டு வலயங்களை அடிப்படையாகக் கொண்டு 07 மின்வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அநுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் கிரால்பதியாவஓயாமடுவ, கிவுலேகடவண்ணம்குளம், வெலங்கஹவுல்பத்தகிவுலேகட, கும்புக்வெவமடவல, நல்லமுதாவசங்கத்தாவ ஆகிய 05 பிரதேசங்களிலும், வவுனியா வன விலங்கு வலயத்தில் அருணகமதங்கொல்ல மற்றும் பாலயவெவ ஆகிய பகுதிகளில் 02 மின்வேலிகளும் அமைக்கப்படவுள்ளன.

மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) சந்தியா என்.ஜி.அபேசேகர, பிரதம கணக்காளர் எல்.எஸ். பிரதிராஜா, மாவட்ட பொறியியலாளர் எம்.பி.பி.தில்ஹானி, தள வன உத்தியோகத்தர் ரத்னசிறி பெரேரா, மின்வேலி நிர்மாணிக்கப்படும் பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அடங்கிய குழுவினரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.



ஆன்மிகம் இசை நாடக முப்பெரும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விவேகானந்த சபை மண்டபத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொன். பத்மநாதனுக்கு "முத்தமிழ் வித்தகர்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

பன்னல பிரதேசத்தில் சுற்றிவளைப்பு;

## 310 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைது

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

பன்னல, தலம்மெஹர பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 310 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவரை பன்னல பொலிஸார் (07) கைது செய்துள்ளனர்.

பன்னல பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் குறித்த வீட்டினை சுற்றி வளைத்த பொலிஸார், ஹெரோயினுடன் பெண்ணை கைது செய்துள்ளனர். இதன் போது பெண்ணின் கணவன் தப்பித் தலைமறைவானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் .

மேலும், கைது செய்யப்பட்ட பெண்ணுடைய வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போலரோ வகையைச் சேர்ந்த கெப் மோட்டார் வண்டியையும் மற்றும் பெண்ணின் கையடக்க தொலைபேசியையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேக நபரான குறித்த பெண் 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேற்படி தம்பதியினர் மீரிகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் எனவும் தற்காலிகமான வசிப்பிடமாக பன்னல தலம்மெஹர பிரதேசத்தில் வாடகை வீடொன்றை பெற்றுக் கொண்டு மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதை வஸ்து வியாபாரத்தை செய்து வருவதாகவும் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்டமான விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. தலைமறைவாகியுள்ள சந்தேக நபரான பெண்ணின் கணவனைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர் .



ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுஷ் ஷாதுலி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி) பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரை அவரது கொழும்பு இல்லத்தில் அண்மையில் சந்தித்தார். இதன் போது பாராளுமன்ற உறுப்பினரால் அண்மையில் வெளியிடப்பட்ட ஸிதமு (சிந்திப்போம்) எனும் நூலின் பிரதியொன்றை அவரிடம் கையளித்தார்.

## இத்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னவின் மீலாத் நிகழ்வு கொழும்பில்

(ருஸைக் பாரூக்)



இத்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத் ஏற்பாடு செய்த மீலாத் விழா கடந்த சனிக்கிழமை (07) அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அதன் தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அஷ்ஷெய்ஹ் முஸ்தபா ரீஸா விசேட பேச்சாளராக கலந்து கொண்டதோடு முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்ற 19ஆவது வருட விருது விழா





கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்றம் அதன் 19ஆவது வருட விருது விழாவின் முதலாவது நிகழ்வை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (7) நடத்தியது . தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பதக்கம் அணிவித்து, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேற்படி மாணவர்களின் தகவல்களை உள்ளடக்கிய 'புலமைத் தாரகை' எனும் சஞ்சிகையின் முதல் பிரதியை வைபவத்தில் பிரதம அதியாகக் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியை பரீனா ருசைக்குக்கு மன்றத்தின் தலைவர் கலாநிதி எஸ்.எல். மன்சூர், செயலாளர் சட்டத்தரணி எம்.யூ.எம். முன்சிர் ஆகியோர் கையளிப்பதையும், கௌரவ அதிதியாக கலந்துகொண்ட ஓ.ரீ. நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.எம். பஸீர் மாணவரொருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காண்க.

(படங்கள்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

## இலங்கை முதலீட்டு சபை ஏற்பாட்டில் விசேட கூட்டம்




இலங்கை முதலீட்டு சபையின் கீழ் இயங்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கும் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களுக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பது தொடர்பாக புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் விநியோகத்தர்கள் அனைவரும் முதலீட்டு சபையின் கீழ் தம்மை பதிவு செய்ய வேண்டியுள்ளதோடு இவர்களுக்கான விஷேட அடையாள அட்டையும் முறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட நிகழ்வு அண்மையில் கொழும்பில் உள்ள இலங்கை முதலீட்டு சபையின் தலைமையகத்தில் நடைபெற்றது.

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விஷேட விருந்தினராக கலந்து கொண்ட ஓமான் நாட்டு முதலீட்டு நிறுவனமான அல் உபைதான் எபரல் நிறுவனத்தின் பணிப்பாளர் யாஸிர் லஹீர் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் முதலீட்டு சபையின் பணிப்பாளர் ரேணுகா வீரகோன் மற்றும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹம்பாந்தோட்டை ஸாஹிரா மாணவி முதலிடம்



ஹம்பாந் தோட்டை குறூப் நிருபர்

அகில இலங்கை தமிழ் மொழித் தின (தென் மாகாணப்) போட்டியில் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவி எம். எஸ். பாத்திமா ஷஸ்பா பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தினைப்பெற்று, அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம். எம்.எம். ரிஸான் (09) தெரிவித்தார். ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய கல்லூரியில் தரம் 07 இல் கல்வி கற்று வரும் இம்மாணவி பாடசாலை, மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டார். இவர் எம். எஸ்.எம். ஸுல்பிகார், ஆசிரியை எம்.எம்.எஸ். சுதாரா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

வீதியில் தூங்கிக்கொண்டிருந்த

## இளைஞனை மோதிய வாகனம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் யாழ்ப்பாணம் ஏ 9 வீதியில் கனந்தராவ பகுதிக்கு அருகாமையில் வீதியில் தூங்கிக் கொண்டிருந்த 23 வயதுடைய இளைஞனை மோதி விபத்தை ஏற்படுத்தி தப்பிச் சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்வதற்கு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிரிகந்த மதவாச்சி பகுதியைச் சேர்ந்த திமுது பியந்த குமார 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்துள்ள இளைஞன் சம்பவதினமான (07) இரவு 11.00 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் மதவாச்சியில் இருந்து அவரது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது துவிச்சக்கர வண்டியை கனந்தராவ பகுதிக்கு அருகாமையிலுள்ள வீதியில் ஓரமாக நிறுத்தி விட்டு வீதியில் தூங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தவேளை, மிஹிந்தலை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த வாகனம் தலைக்கு மேல் ஓடியதால் பாரிய காயம் ஏற்பட்டு உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கும் கடன் ஒத்துழைப்பின் இரண்டாம் தவணை கொடுப்பனவு தொடர்பில், முக்கிய பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே மேற்படி சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.



இக்குழு நாட்டின் பொருளாதார நிலைமைகள், நடைமுறையில் உள்ள வரி கொள்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தையின்போது கவனம் செலுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் மொரோக்கோவில் ஆரம்பமாகியுள்ள நிலையிலே, இக்குழு இலங்கை வருகிறது.

பல்வேறு நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கியின் ஆளுநர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த உயரதிகாரிகள், இம் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தில், இலங்கை ஏற்படுத்தியுள்ள நம்பிக்கையை மேலும் பலப்படுத்துவதற்கு இம்மாநாடு சிறந்த சந்தர்ப்பமாக அமையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாநாட்டில் இலங்கையின் சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டுள்ளனர்.

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை:
# மேலதிக வகுப்புக்கள் இன்று நள்ளிரவு முதல் தடை

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கான மேலதிக வகுப்புகளை இன்று நள்ளிரவின் பின்னர் நடத்தவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நிறைவடையும் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்குமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, பரீட்சை மத்திய நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 2,888 பரீட்சை மத்திய நிலையங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளது.



சிங்கள திரைத்துறையின் பிரபல நடிகர் ஜெக்சன்அந்தனியின் பூதவுடலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தியபோது பிடிக்கப்பட்ட படம்.

# மனுஷ, ஹரீனின் விசாரணை ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமது கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்வதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க இந்த மனுக்களை எதிர்வரும் 12 ஆம் திகதி நடத்துவதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனுமீதான விசாரணை மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைத்தார்.

சம்பந்தப்பட்ட மீள் ஆட்சேபனையை தாக்கல் செய்வதற்கு காலம் பெற்றுத்தருமாறு அவர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார். அதேவேளை, பிரதிவாதியின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் விடயங்களை முன்வைத்ததுடன் அரசியலமைப்புக்கிணங்க மேற்படி மனுதாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மனுவை விசாரணை செய்து நிறைவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயங்களை கருத்திற்கொண்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், மேற்படி மனுவுடன் தொடர்புடைய மீள்ஆட்சேபனை இருந்தால் அதனை இன்றைய தினத்திலேயே நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுள்ளது.

இதையடுத்து மேற்படி மனுமீதான விசாரணையை எதிர்வரும் 12 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# விமான பயண வசதிகள் கட்டணத்தை திருத்த அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023–01ஆம் இலக்க விமான பயண வசதிகள் கட்டண கட்டளைகளை, திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கிணங்க, கொழும்பு விமானப்பயண தகவல் வலையத்தின் ஊடாக பறக்கும்

விமானங்களுக்காக விமானப் பயண வசதிகள் கட்டணம் ஒன்றை நியமிப்பதற்கு ஏதுவான வகையில், 1981 ஆம் ஆண்டின் விமான பயண வசதிகள் கட்டண கட்டளைகளில் திருத்தம் செய்யப்படுகிறது. நீண்டகாலமாக இந்த கட்டளையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லையென

06



சிங்கள திரைத்துறையின் பிரபல நடிகர் ஜெக்சன்அந்தனியின் பூதவுடலுக்கு லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர், இறுதி மரியாதை செலுத்தியபோது பிடிக்கப்பட்ட படம்

# முதலீட்டு ஒத்துழைப்பு ஊக்குவிப்பு இலங்கை – சீனாவுக்கிடையில் ஒப்பந்தம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் சீன அரசாங்கத்தின் தேசிய மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கிடையில், புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. உற்பத்தி அளவை அதிகரித்தல் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை

06

# காலி மற்றும் மாத்தறை மாவட்ட பாடசாலைகள் இன்று மீண்டும் திறப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீரற்ற காலநிலையால், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள தென் மாகாண கல்வி செயலாளர்,நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் மேற்படி இரண்டு மாவட்டங்களும் அதிக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. இதனைக் கவனத்திற்கொண்டு இரண்டு நாட்கள் பாடசாலை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தவகையில் நேற்று முன்தினம் மற்றும்

06

# ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் நூற்றாண்டு விழா



அரச தொழிற்சங்கங்களில் மிகவும் பழமையான சங்கமான இலங்கை ரயில்வே அதிபர்கள் சங்கத்தின் நூற்றாண்டு விழா கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டலில் நடைபெற்றது.

06


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

## விவசாய டிரக்டர்களை கொள்வனவு செய்வோரிற்கான பெறுமதி சேர் வரி (VAT) மீளளிப்பு

இவ் அறிவித்தல் ஆனது உயர் நீதிமன்ற விண்ணப்ப இலக்கம் SC/FR/236/2017 இற்கு இணங்க பிரசுரிக்கப்படுகின்றது.

2015, ஒக்டோபர் 30 ஆம் திகதி மாண்புமிகு சனாதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்டதும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதுமான 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் 2015, சனவரி 01 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் விவசாய டிரக்டர்களின் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரியானது விலக்களிக்கப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது. 2015, சனவரி 01 முதல் 2015 ஒக்டோபர் 29 வரையிலான காலப்பகுதியில், கீழ்வரும் வகுப்புகளுக்கு வகைபிரிக்கப்பட்ட விவசாய டிரக்டர்களின் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரியினை சுங்க பணிப்பாளர் நாயகம் அறவிடுசெய்துள்ளார்.

- கையால் கட்டுப்படுத்தும் டிரக்டர்கள்
- அரை – பெட்டிக்கான (டிரேய்லர்) வீதி டிரக்டர்கள்
- விவசாய டிரக்டர்கள்

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத்தின் விண்ணப்பத்திற்கு இணங்கவும் மாண்புமிகு சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் பேரிலும், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், கொள்வனவினை மேற்கொண்டபோது அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியின் ஆகுசெலவினை ஏற்றுக்கொண்ட பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு அவ்வாறு சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியின் அத்தகைய தொகைகளை மீள செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

இதன் சார்பாக, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அத்தகைய பெறுமதி சேர் வரித் தொகையினை மீளகொடுப்பனவு செய்வதற்கான கோரிக்கையினை மேற்கொள்வதற்கு, குறிப்பிட்ட காலப்பகுதியின் போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வியாபார டிரக்டர்களை கொள்வனவு செய்தோருக்கு ஆணையாளர் நாயகம் அழைப்புவிடுக்கின்றார்.

அதற்கமைவாக, அத்தகைய நபர்கள், நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கீழ்வருவனவற்றை சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர்.

- பெறுமதி சேர் வரி மீள்கொடுப்பனவிற்கான கோரிக்கை (இணைப்பிலுள்ளவாறு)
- மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
- வியாபார டிரக்டரின் கொள்வனவு பட்டியலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
- தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
- வங்கிப் புத்தகத்தின் / கூற்றின் (விபரங்களை உள்ளடக்கிய பக்கம்) பிரதி

பெறுமதி சேர் வரி மீள்கொடுப்பனவிற்கு தகுதி பெற, இந்த அறிவித்தல் திகதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் முறையாக பூரணப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி மீள்கொடுப்பனவு கோரிக்கைப் படிவம் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றை கீழ்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பிரதி ஆணையாளர் நாயகம் (பாரிய வரி நிருவாகம்),
8 ஆவது மாடி (தெற்கு கட்டிடத்தொகுதி), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு 02.
தொலைபேசி: 0112134800

இணைப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
பெறுமதி சேரி வரி (VAT) மீள்கொடுப்பனவு கோரிக்கை

1. கோருபவரின் விபரங்கள்
   i. கோருபவரின் பெயர் : ..............................
   ii. முகவரி : ..............................
   iii. வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) (ஏதும் இருப்பின்) : ..............................
   iv. தொடர்பு இலக்கம்/மின்னஞ்சல் முகவரி: : ..............................
   v. தே.அ.அ. இல. : ..............................
2. விற்பனையாளரின் விபரங்கள்
   i. பெயர் : ..............................
   ii. முகவரி : ..............................
   iii. பெறுமதிசேர் வரி பதிவு இல. (ஏதும் இருப்பின்) : ..............................
3. கொள்வனவு விபரங்கள்
   i. பட்டியல் இல : ..............................
   ii. கொள்வனவுத் திகதி : ..............................
   iii. கொள்வனவு விலை : ..............................
4. வாகனப் பதிவு விபரங்கள்
   i. பதிவு இல : ..............................
   ii. சேஸிஸ் இல : ..............................
   iii. முதல் பதிவுத் திகதி : ..............................
   iv. வாகன வகுப்பு : ..............................
5. வங்கிக் கணக்கு விபரங்கள் (மீள்கொடுப்பனவு தேவைப்பாட்டிற்கு)
   i. கணக்கு இல : ..............................
   ii. வங்கி : .............................. குறியீடு: ..............................
   iii. கிளை : .............................. குறியீடு: ..............................

.............................. ..............................
திகதி கோருபவரின் கையொப்பம்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 25

**குறள் தரும் சிந்தனை**



நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று

வெறுக்கப்படுகின்றவரிடம் குவிந்துள்ள செல்வமும், ஊர் நடுவே நச்சுமரத்தில் காய்த்துக் குலுங்குகின்ற பழமும் வெவ்வேறானவையல்ல.

# யுத்தத்தினால் சர்வதேசம் எதிர்கொள்ளும் நெருக்கடி!

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. கடந்த சனியன்று ஹமாஸ் அமைப்பினர் தென் இஸ்ரேலுக்குள் ஊடுருவி மேற்கொண்ட திடீர்த் தாக்குதலைத் தொடர்ந்து இந்த யுத்தம் ஆரம்பமானது. இந்த யுத்தநிலையைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நிலைமை கொதிநிலையை அடைந்துள்ளது. இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடிகளும் தாக்கங்களும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

ஏற்கனவே உக்ரைன்_ ரஷ்யா போர் வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கின்றது. அதேநேரம் முழு உலகிற்கும் பெரிதும் சவாலாக விளங்கிய கொவிட் 19 பெருந்தொற்றும் இந்நாடுகளின் பொருளாதாரத்தில் பெரிதும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் உலக நாடுகளுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயுவை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது யுத்தம் மூண்டிருக்கின்றது. இந்த யுத்தம் ஏற்கனவே பொருளாதார ரீதியில் அழுத்தங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்துள்ள வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு மேலும் தாக்கங்களை ஏற்படுத்தவே வழிவகுக்கும். அதன் காரணத்தினால் இது தொடர்பில் உலகளாவிய பொருளாதார நிபுணர்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

குறிப்பாக எரிவாயு மற்றும் எரிபொருள் விலையில் கடுமையான தாக்கம் ஏற்பட இந்த யுத்தம் வழிவகுக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான சூழலில் மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் உயரத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் வெளியான தகவலின்படி மசகு எண்ணெய் விலையில் ஐந்து சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த யுத்தநிலை நீடிக்குமாயின் எரிபொருட்களின் விலைகளில் நீண்ட கால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதையும் இப்பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதனால் இலங்கையிலும் எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆனால் இம்மாதத்தின் முதலாம் திகதி இந்நாட்டில் எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டமை தெரிந்ததே.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது இஸ்ரேல் ஹமாஸ் யுத்த நெருக்கடி நிலை உலகளாவிய எரிபொருள் விலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அதனால் ஆபிரிக்க ஒன்றியத்தின் பரிந்துரையின்படி, இந்த மோதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரும் இக்கோரிக்கையை வரவேற்கக் கூடியவர்களாக உள்ளனர்.

உலக மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் வேண்டுகோளும் இதுவாகவே உள்ளது. ஏனெனில் எந்தவொரு யுத்தமும் அழிவுகளையும் சேதங்களையும் இழப்புக்களையுமே கொண்டு வருமேயொழிய மக்களுக்கு நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய ஒன்றல்ல. அதனால் இந்த யுத்தநிலையும் இலங்கை போன்ற வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும்.

கொவிட் 19 பெருந்தொற்று, உக்ரைன் ரஷ்யா போர் என்பன ஏற்கனவே வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் பெரிதும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவ்வாறான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் இலங்கையும் கூட முகம்கொடுத்தது. அந்தத் தாக்கங்களில் இருந்து எந்தவொரு நாடும் இன்னும் முழுமையாக மீட்சி பெற்றிடவில்லை. அதற்கிடையில் மற்றொரு யுத்தம் ஏற்பட்டிருப்பது உலகின் பலரதும் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. அதிலும் எரிபொருள், எரிவாயு உற்பத்தி பிராந்தியத்தில் இந்த யுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவற்றின் விலைகளில் நீண்ட கால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்த யுத்தம் காரணமாக வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகள் பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளக்கூடிய தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இம்மோதலை நிறுத்துவதைத் தவிர வேறுவழியில்லை.

அதேநேரம் உள்நாட்டு எரிபொருள் மற்றும் எரிவாயு பாவனையாளர்களும் உலகளாவிய நிலமைகளைக் கருத்தில் கொண்டு அவற்றைப் பயன்படுத்தவும் தவறக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் மிகுந்த பொறுப்போடு விரயமற்ற வகையில் பயன்படுத்த வேண்டியதே எரிபொருட்கள். அதன் ஊடாக உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டாலும் அதன் தாக்கங்கள் பாதிப்பாக அமையாத வகையில் பொருளாதார நிலைமைகளை பேணிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# மனிதனது அன்றாட கருமங்களில் பிரதானமானது வாசிப்புப் பழக்கம்

ஒரு மனிதன் அன்றாட கருமங்களை ஆற்றுவதைப் போல், வாசிப்பென்பதும் அன்றாட கடமைகளில் ஒன்றாக மாறும் போதே அவன் உயிருள்ளவனாகின்றான். மனிதனைப் புடம் போடுவதற்கு அவனைத் தூண்டுவது வாசிப்பு ஆகும்.

'நினைத்த இடத்திற்கு செல்லவும், வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்' என்பதே இவ்வருட வாசிப்பு மாதத்திற்கான கருப்பொருளாகும்.

வாசிப்பானது பாடசாலைப் பருவத்திலிருந்து விதைக்கப்பட வேண்டியதாகும். இதனால் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகக் கல்வியமைச்சு பிரகடனம் செய்து பல்வேறு செயற்றிட்டங்களை




## 'நினைத்த இடத்திற்குச் செல்லவும், வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்' என்பது இவ்வருட வாசிப்பு மாதத்திற்கான கருப்பொருள்



வருடந்தோறும் முன்னெடுத்து வருகின்றது. ஒக்டோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக கல்வியமைச்சு பிரகடனம் செய்துள்ள போதிலும், ஒக்டோபர் 23 முதல் 27 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை பாடசாலை நூலக வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அதனை 23 ஆம் திகதி பாடசாலை நூலக தினமாகவும், 24 ஆம் திகதி நூலகச் சூழல் சுத்தம் செய்யும் தினமாகவும், 25 ஆம் திகதி நூல்களைப் பாதுகாத்தல் தினமாகவும், 26 ஆம் திகதி நூல் சேகரிப்பு தினமாகவும், 27 ஆம் நாள் நூலகப் பயன்பாட்டு மாணவர்களை கௌரவிக்கும் தினமாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

வாசிப்பு மாதத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் 110 பக்கங்களைக் கொண்ட பாடசாலை நூலக மற்றும் கற்றல்வள நிலையங்களின் திருத்தப்பட்ட ஆலோசனைக் குறியீடொன்றை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது. பாடசாலை அதிபர், நூலகப் பொறுப்பாசிரியர் ஆகியோரின் வழிகாட்டலுடன் இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நல்ல ஆளுமை கொண்ட சிறார்களை நாட்டிற்கு வழங்குவதற்கு இலங்கையின் பாடசாலை முறையினூடாக ஆற்றும் பணி முக்கியமானதாகும். வகுப்பறைக்கு மேலதிகமாக பாடசாலை நூலகத்தை பேணவேண்டியது அவசியமாகும்' என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் 'பாடசாலை வகுப்பறைக்கு வெளியே பாடசாலை வளாகத்திற்குள் மாணவர்களைக் கவர்ந்த ஆசிரியராக விளங்குவது நூலகமாகும். பிள்ளைகளுக்கு இலக்கியத்தை ரசிக்கவும், வாழ்க்கையை கற்றுக் கொடுக்கவும் அறிவை இற்றைப் படுத்தவும் தாளாளமாகக் கைகொடுப்பது பாடசாலை நூலகமாகும்' என கல்வியமைச்சின் செயலாளர் என்.எம். ரணசிங்கவும் ஆலோசனைக் குறியீட்டில் வழங்கியுள்ள செய்திகள் முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்றன. போதைப்பொருள் பாவனை, ஊடகக் கலாசார சீர்கேடு, கட்டுபாடற்ற வாழ்வு, ஒழுக்கமின்மை முதலிய காரணிகளால் திசைமாறிச் செல்லும் மாணவர் சமூகம் கட்டுப்பாடுகளுடன் ஒழுங்கமைக்கப்படுவதற்கு வாசிப்பின் மீதான மாணவர் ஆர்வத்தினை ஏற்படுத்துவது இன்றிமையாத் தேவையாகும். அதற்கென பாடசாலை நூலகங்கள் கவர்ச்சியாக வடிவமைக்கப்படுவதுடன் மாணவர்களைத் தூண்டும் வகையிலான தேடலுடன் கூடிய செயற்றிட்டங்கள் பாடசாலைகளில் வடிவமைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பிறந்த நாள் பரிசாக நூல்களை அன்பளிப்புச் செய்தல், புத்தகக் கண்காட்சியை நடத்துதல், புத்தக நன்கொடை தினமொன்றை அறிமுகம் செய்தல், வாசிப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலான போட்டிகளையும் விரிவுரைகளையும் ஏற்படுத்துதல், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், வாசிப்பு முகாம்களை நடத்துதல் ஆகியன வாசிப்பினைத் தூண்டுவதற்கான சிறந்த ஆலோசனைகளாகும்.

'கருவுற்றிருக்கும் தாய் நல்ல நூல்களை வாசிக்கும் போது அக் குழந்தைகளின் மூளை விருத்தி உந்தப்படுகின்றது' என்கின்ற உளவியலாளர்களின் கூற்றினையும் 'குழந்தையின் முதல் ஆசான் தாய். அக்குழந்தை தாலாட்டிலிருந்தே கற்கவும் அறியவும் ஆரம்பிக்கிறது' என்கின்ற இலக்கிய ஆய்வாளர் தமிழ் அண்ணலின் கூற்றினையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது வாசிப்புக்கான கரு வீட்டிலிருந்தே விதைக்கப்பட வேண்டுமென்பது வெளிப்படுகின்றது. அதற்கான சூழல் அங்கு கிடைக்காத போது, ஒரு குழந்தையின் புகுந்த வீடாக அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலையின் மூலமே இதனைக் கட்டியெழுப்ப முடியும். அதற்கான மிக நல்லதொரு களத்தை வழங்குவது பாடசாலைகளின் நூலகங்களேயாகும்.

அந்நூலகங்களை வளப்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான பங்காளிகளாக மாற வேண்டியவர்கள் மாணவர்களே. பாடசாலைப் பரீட்சைக் கல்வியோடு மட்டுப்பட்டு விடுகின்ற மாணவர்களைவ விட நூலகங்களை சிறுபராயம் முதலே வசமாக்கி மேன்மையடைந்த மாணவர்களே சமூக மதிப்புமிக்க அடையாளங்களாக சமூகத்தில் திகழ்கின்றனர்.

அறிவாளியையும் அறிவிலியையும் வேறுபடுத்துவது வாசிப்பேயாகும். உளரீதியான பாதிப்புக்களிலிருந்து வாசிப்பு பாதுகாப்பளிக்கின்றது. மொழி விருத்தி அடைவதுடன் தன்னம்பிக்கை வளர்கிறது. ஞாபக சக்தி விருத்தி பெற்று, கௌரவம் உயர்ந்து, தொழிலில் தேர்ச்சி அடைந்து, பல்துறை ஆளுமையுள்ள மனிதனாகத் தன்னை அடையாளப்படுத்த வாசிப்பே வழிகோலுகிறது.

மகாத்மா காந்தியிடம் 'உங்களிடம் ஒரு கோடி ரூபாய் தரப்பட்டால் என்ன செய்வீர்கள்' எனக் கேட்ட போது 'ஒரு நூலகம் அமைப்பேன்' எனக் கூறியமை நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவல்ல அம்சமாகும்.

'புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் நூலகங்களே' என்கிறார் லெனின்.

'வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தகங்களை வாசிக்க அனுமதியுங்கள்' என்றார் நெல்சன் மண்டேலா.

வாசிப்பை வழக்கமாக்க வீட்டுச் சூழலை வாசிப்பின் முற்றங்களாகவும் வாசிப்பின் முகாங்களாகவும் மாற்றியமைக்க வேண்டும். நவீன ஊடகங்களின் வருகையினால் வாசிப்புத்திறன் தூரமாகிச் செல்கிறது. ஆகவே நூலகங்களை நோக்கி மாணவர்கள் ஒவ்வொருவரும் நகர வேண்டும்.

**ஜெஸ்மி எம். மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# தத்ராத்ரேயஅவதாரி ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபரின் பாதுகைபூசை சாயிநாதனின் சரணாலயத்தில்

குருபிரம்மா, குருவிஷ்ணு, குரு மஹேஷ்வரர் ஆகியோரின் இணைந்தவடிவமான குரு ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் மானுடஅவதாரமான ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர் அவர்கள் பாதுகைரூபத்தில் இலங்கை விஜயம் செய்ய இருக்கிறார். எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாயிநாதனின் சரணாலயத்தில் ஸ்ரீ ருத்ரதத்த பாதுகாஅபிசேகமும் பூசையும் நடைபெற்று, அன்பர்கள் பாதுகை தரிசனமும் ஆசிகளும் கிடைக்கப் பெறுவார்கள்.

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் காக்கிநாடாவில் அமைந்துள்ள 18 சக்திபீடங்களில் ஒன்றான பீடாபுரம் என்ற திருத்தலத்தில் திருஅப்பலராஜ சர்மாவுக்கும் அகண்டசௌபாக்கியவதி மாதாசுமதிக்கும் குழந்தையாக 13 ஆம் நூற்றாண்டில் அவதரித்த ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பல அதிசயங்களை அடியார்களுக்கு நிகழ்த்தினார், அவர் இன்னும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

தனது 32 ஆவது வயதில் குருவபுரம் என்னும் தலத்திற்குஅருகில் ஓடும் புனித கிருஷ்ண நதியில் ஜலசமாதியில் மறைந்தார். இன்றுவரை சூட்சும உருவில் தன்னை மனதார நினைப்பவருக்கு நொடியில் பிரத்யட்சமாக தனது அருளை வழங்கி அவர்களது கஷ்டங்களை நீக்குகிறார். இவரது திருமூர்த்தி அண்மையில் தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் அருகில் உள்ள மேல்சிறுணை மற்றும் மாருதிபுரம் எனும் கிராமங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோயில்கள் அமைக்கப்பட்டன.

ஸ்ரீ சக்ரதத்ராத்ரேயர், அக்கல்கோட் மஹராஜ் மற்றும் சீரடிசாயிபாபா ஆகியோரும் இங்கு வீற்றிருப்பது இத்தலங்களின் விசேடமாகும். மேல்சிருணையிலே 16 அடி உயர பஞ்சலோக ஸ்ரீ பாதவல்லபரும் ஒருகோடி ஸ்ரீ சக்கரங்களும் பிரதிஷ்டை செய்ய தெய்வஅருள் கூடியுள்ளது. இப்பிரமாண்டமான நிகழ்வுக்கு பக்தர்களை தயார் செய்யும் முகமாக ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் பாதுகைபூசை தமிழ்நாட்டின் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முதன்முதலாக, கடல் கடந்து இலங்கைக்கு வந்து கொழும்புமாநகரில் உள்ள சாயிநாதனின் சரணாலயத்தில், தமது பாதுகைதரிசனம் மற்றும் பூசையை அடியவர்களுக்கு அருள ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் திருவுளம் கொண்டுள்ளார்.



சென்னை திருவாளர் சுந்தர் சாய், ஆத்மார்த்தசாய் சேவகர்,காஞ்சிபுரம் ஸ்ரீ சக்ர தத்தக்ஷேத்ரபீடத்தின் அறங்காவலர் மற்றும் மாருதிபுரம் (உத்திரமேஷரூர்) ஸ்ரீ சுவாமிசமர்த்தசேவாசமஸ்தானம், ஸ்ரீ குருதத்த பாதுகாக்ஷேத்ர அறங்காவலராக விளங்குபவர். சென்னைஅன்பர் ஸ்ரீ நாராயணன் ஆன்மீகபணியில் 'யூ டியூப் நாராயணன்'என்றுஅறியப்படுபவர்.

அவர் ஸ்ரீ குருதத்த அவதாரங்களின் சரித்ராம்ருதம் பற்றிய சொற்பொழிவாளர், தினசரி பூஜைகள் மற்றும் தத்தபாதுகை ருத்ராபிஷேகம் செய்பவர். இவ்வன்பர்கள் இருவரும் அத்திமரத்தாலான சுவாமிஸ்ரீ பாதரின் பாதுகைகளுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வருகிறார்கள். சனிக்கிழமைகாலை 9 மணிக்கு, சாயிசரணாலயத்தில் பாதுகை பூசையும்,தொடர்ந்து மகாபிரசாதமும் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். தத்தகுருவின் அருளாசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்பர்களை பணிவுடன் அழைக்கிறோம்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# கல்விப்பணியை தனது வாழ்வின் இலட்சியமாக கொண்டு சேவையாற்றியவர் அகிலா கனகசூரியம்

கல்விச் சேவையே தன் வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்டு, கல்வித்துறையில் பல்வகை பதவி நிலைகளில் கடமையாற்றி சிறந்த சேவையினை வழங்கிய கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளரும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியவருமான அகிலா கனகசூரியம் தனது 60 ஆவது வயதில் கடந்த 2023.09.30 அன்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

மட்டக்களப்பு குருமண்வெளி கிராமத்தில் கனகசூரியம்_ ஜோசம்மா தம்பதியரின் இரண்டாவது மகளான அகிலா கனகசூரியம் சிறுவயதுமுதல் கல்வி அறிவு நிரம்பப் பெற்றவராக காணப்பட்டார். தனது ஆரம்பக்கல்வியினை குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்திலும் அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா பாடசாலையிலும் கற்றதுடன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளையும் அவர் பெற்றிருந்தார்.

இடைநிலை கல்வியை மட் / வின்சென்ட் பெண்கள் பாடசாலையில் கற்று உயர்நிலை கல்வியை மட் / சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றார். 1982 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இணைந்து 1985 ஆம் ஆண்டு தனது பட்டப்படிப்பினை நிறைவு செய்தார்.

அதன்பின் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட இவர், 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் இரசாயனவியல் மற்றும் விஞ்ஞான



## கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு

பாட ஆசிரியையாக கடமையாற்றியதுடன் 1991 இல் இருந்து 1998 வரை மட்/ இந்துக்கல்லூரியில் இரசாயனவியல், கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியையாக கடமையாற்றியிருந்தார்.

1996 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவைக்கான திறந்த போட்டிப்பரீட்சையில் தமிழ் மொழிமூலம் தோற்றிய பரீட்சார்த்திகளில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக் கொண்டார். 1999 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவையில் தரம் III இல் இணைந்து கொண்ட இவர் 1999_ 2002 வரை மட்டக்களப்பு கல்வி வலயத்தில் திட்டமிடல் மற்றும் விஞ்ஞான பாடத்துறைக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார்.

இதன்பின் 2002 இல் இல் இருந்து 2014 வரை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக சேவையை தொடர்ந்த இவர், பிரதி திட்டமிடல் கல்விப் பணிப்பாளராக மாகாணத்தில் நீண்ட காலம் கடமையாற்றியிருந்தார்.

பின்னர் 2014_ 2016 வரை மூதூர் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியதுடன் அக்கல்வி வலயத்தின் உயர்ச்சிக்காக அரும் தொண்டாற்றினார். பின் ஒருவருடம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் சேவையாற்றியதுடன் 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளராக 2023 வரை கடமை ஆற்றினார். 2023 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையேற்று சிறந்த கல்விச் சேவையினை ஆற்றியிருந்தார்.

இவ்வருடம் மாகாணக்கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டு கடமையாற்றி வந்த நிலையில் தனது 60 வயதில் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் 1ஐ சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியாகிய இவர் 24 வருடங்கள் கல்வி நிர்வாக சேவையில் கடமை புரிந்துள்ளார்.

அதிகஷ்ட கஷ்ட பாடசாலைகளை மாத்திரம் உள்ளடக்கிக் காணப்படும் இலங்கையிலுள்ள ஒரே ஒரு கல்வி வலயமாக காணப்படும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளராக இருந்து அவர் ஆற்றிய சேவைகளும் நடைமுறைப்படுத்திய திட்டங்களும் அக்கல்வி வலயத்தை கல்வித்துறை சார்ந்தோரை திரும்பிப்பார்க்க வைத்தன எனலாம். இதற்கு அண்மைக்காலத்து பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு சான்றாகும்.

நாட்டில் காணப்பட்ட 98 கல்வி வலயங்களில் தேசிய பொதுப்பரீட்சை பெறுபேறுகளில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 98 ஆவது கல்வி வலயமாகவே காணப்பட்டு வந்தது. பின்னர் அகிலா கனகசூரியம் தொடர்ச்சியாக முன்னெடுத்த செயற்பாடுகளால் படிப்படியான வளர்ச்சியை கண்ட குறித்த கல்வி வலயம் தேசிய பரீட்சைகள் அனைத்திலும் தரப்படுத்தலில் முன்னேற்றம் காண ஆரம்பித்தது.

இவ்வருடம் வெளியாகிய உயர்தரப்பரீட்சைப் பெறுபேற்றில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் நிலை வலயமாக காணப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தில் மூன்றாம் நிலையை அடைந்திருந்தமை இவரது திட்டமிடலுக்கும் செயற்படுத்தலுக்கும் நிருவாகத்திறனுக்குமான சான்றுகளாகும்.

**செல்லையா பேரின்பராசா...**
(துறைநீலாவணை நிருபர்)

# அமைச்சரவை முடிவுகள்



## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட

**பல்கலைகளில் மருத்துவ பட்டத்தை இலங்கையில் ஏற்க தேசிய கொள்கை**

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் வழங்கப்படுகின்ற மருத்துவப் பட்டப்படிப்பை இலங்கையில் ஏற்றுக்கொள்வதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டிய தர நியமங்கள் மற்றும் அளவுகோல்கள் உள்ளடங்கிய தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காகவும்,சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காகவும் பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகள் உள்ளடங்கலான அறிக்கையின் அடிப்படையில்,சர்வதேச தரப்படுத்தலுக்கமைய இலக்கம் 01 தொடக்கம் 1000 வரையான பல்கலைக்கழகங்களால் வழங்கப்படுகின்ற மருத்துவப் பட்டங்களை எமது நாட்டில் அங்கீகரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை விதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மண்டாவில, லேக் க்ரெஸ்ட் றெசிடன் சீஸ்

**வீடுகள் அறுதி உறுதி அடிப்படையில் உரிமையாளர்களுக்கு விற்பனை**

நகரஅபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட 500 வீட்டு அலகுகளுடன் கூடிய அங்கொடை, மண்டாவில, லேக் க்ரெஸ்ட் றெசிடன் சீஸ் வீட்டுத்திட்ட வீடுகளின் இருப்பாட்சி 2018 ஆம் ஆண்டில் வீட்டுரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் வீடுகளுக்கான அனைத்துக் கட்டணங்களும் செலுத்திப் பூர்த்தியடைந்துள்ள குடியிருப்பாளர்களுக்கு கூட்டாட்சி ஆதன உரித்துச் சட்டத்துக்கமைய அறுதி உறுதிகளை வழங்குவதற்கும், ஏனைய குடியிருப்பாளர்களுக்கு ஏற்புடைய கட்டணங்கள் முழுமையாகச் செலுத்திய பின்னர் அறுதி உறுதியை வழங்குவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நாராஹேன்பிட்டி, ஹத்போதியவத்த

**காணியிலுள்ள குடும்பங்களுக்கு நகர மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வீடுகள்**

நாராஹேன்பிட்டி கிருல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹத்போதியாவத்த எனும் பெயரிலான 01 ஏக்கர் 03 றூட் 10 பேர்ச்சர்ஸ் அரசுக்கு சொந்தமான காணியில் குறைந்த வருமானம் கொண்டவர்களின் குடியிருப்பொன்று காணப்படுவதுடன், இக்குடியிருப்பில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, காணியிலுள்ள குடியிருப்பாளர்களை நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களில் வீடுகளை வழங்குவதற்கும், பின்னர், இக்காணியில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்ட மொன்றை நடைமுறைப்படுத்துவதற்காகஅரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் நகரஅபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பெருந்தோட்ட காணிகள் அளவீடு

**2027 வரை கால எல்லைகள் நீடிப்பு**

பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள், இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டக் காணிகளில் சுற்று அளவைகள் மேற்கொள்ளப்பட்டு எல்லைகளைத் தயாரித்துக் கொள்வதற்கான திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இக் காணிகளில் குறிப்பிடத்தக்களவு பூர்த்தியாகும் வகையில் அளவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் அளவைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ள காணிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டத்தை 2027 ஆம் ஆண்டு வரைக்கும் நீடிப்பதற்காக பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தேசிய காணி ஆணைக்குழு சட்டத்தை தயாரிக்க அனுமதி**

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையின் 01 ஆம் பட்டியலில் ii ஆம் வாசகத்துக்கமைய காணிஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இப்பணிகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்தின் அடிப்படையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சுற்றுலாத்துறை மற்றும் காணிஅமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நுண்நிதி, கடன் ஒழுங்குபடுத்தல்

**அதிகாரசபைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அங்கீகாரம்**

2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தை இரத்துச் செய்து நுண்நிதியளிப்பு மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல்அதிகாரசபைச் சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021.03.23 அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி,பொருளாதாரஉறுதிப்பாடுமற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பிணை பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்

**வாங்கல்' எனும் பெயரில் புதிய சட்டமூலம்**

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் சட்டத்தை இரத்துச் செய்து பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் பதிவு அதிகார சபையைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளை விதித்து புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், அதற்கு இணையாக கீழ் காணும் சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- ★ காலவிதிப்பு (திருத்தச்) சட்டமூலம்
- ★ நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம்
- ★ அடகு (திருத்தச்) சட்டமூலம்
- ★ குத்தகைநிதி (திருத்தச்) சட்டமூலம்
- ★ உள்ளூர் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம்
- ★ கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம்
- ★ ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம்

அதற்கமைய,சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளசட்டமூலம் தொடர்பாகமேலும் அந்தந்தஅதிகாரிகளுடன் கவனத்திலெடுக்குமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்குஆலோசனைவழங்கப்பட்டுள்ளது.

இச் சட்ட மூலம் சட்டவரைஞரால் காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தி,அதற்காக சட்ட மாஅதிபரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி,பொருளாதாரஉறுதிப்பாடுமற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சமுத்திர நீரியல் துறையை விருத்திக்கு

**தேசிய நீரியல் சட்டமூலம் தயாரிப்பு**

இலங்கையை தெற்காசிய வலயத்தில் சமுத்திர கேந்திர நிலைமாக மேம்படுத்தும் நோக்கில் சமுத்திர நீரியல் துறையை விருத்தி செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை விதிப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனைவழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, இச்சட்டமூலம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் பாதுகாப்புஅமைச்சராக ஜனாதிபதியும் நீதி,சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



மத்துகம கலைமகள் வித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு வருகை தந்தபோது.....

# ஜனரஞ்சக எழுத்தாளர் கலாபூஷணம் மொழிவாணனுக்கு பொன்விழா

ஜனரஞ்சக எழுத்தாளர் கலாபூஷணம் மொழிவாணன் எழுத்துலகில் பிரவேசித்து 50வருடங்களாகின்றன. இதனையொட்டி இம்மாதம் 22.10.2023ஆம் திகதி அன்று பொன்விழா நிகழ்வொன்று முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனின் ஏற்பாட்டில் டவர் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.31க்கு நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். சிவாஜி சாஹிட் மௌலானா முன்னிலை வகிக்கின்றார்.

பல பிரபலங்கள் கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக கலந்து நிகழ்ச்சியை சிறப்பிக்க உள்ளனர். அத்தோடு நந்தகுமார், டிஸ்கோ ராஜா, பேராசிரியை பாலிகா சமந்தி குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் முனிவர், காளி, நந்த குமார்மா கிரட் குழுவினரின் நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறும்.



# அல்பஹ்ரியா மத்திய கல்லூரி புலமைப்பரிசில் சாதனையாளர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டம்

அல்பஹ்ரியா மத்திய கல்லூரியில் முப்பதாண்டுக்கு முன்னர் கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் குழாமொன்று, கல்லூரியின் அடுத்த மாணவர் பரம்பரையினரைப் பாராட்டி பாரிய செலவுடன் மேற்கொண்டுள்ள கல்வி ஊக்குவிப்பு பாராட்டு வேலைத்திட்டம் மகிழ்ச்சிக்குரியதும் போற்றத்தக்கதுமாகும் என முன்னாள் கல்விப் பணிப்பாளர் என்.எம். அஹமத் யாசீன் தெரிவித்தார்.

பாணந்துறை அல்பஹ்ரியா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) க. பொ. த உயர்தர (1992) பழைய மாணவர் குழாம் ஏற்பாடு செய்த 2020_ 22 ஆண்டுகளின் ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பிரதம உரை நிகழ்த்தும்போதே இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான கலைமதி யாசீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் தலைமையில் இடம்பெற்ற மாணவர் பாராட்டு விழாவில் கல்விப் பணிப்பாளர் அஹமத் யாஸீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார். உளவள ஆலோசகர் பஸ்லான் ஏ. காதர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். கல்லூரியின் பழைய மாணவர் குழாம்_ 92 தலைவர் ரியாஸ் முஹம்மத், செயலாளர் எம். ஐ.எம்.ஸிராஜ், தனாதிகாரி ஏ.ஸீ. எம்.ஸாதாத் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அஹமத் யாசீன் தொடர்ந்தும் உரையாற்றுகையில் "பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மாணவர்கள் தொடர்பிலான கல்வி ஊக்குவிப்பு வேலைத் திட்ட நிகழ்வுகள் அத்தியாவசியமானதுடன் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டியவையுமாகும். சமூகத்தில் எவ்வித பிரதியுபகாரத்தையும் எதிர்பாராது இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்" என்றார்.



அல்பஹ்ரியா மத்திய கல்லூரியில் முப்பதாண்டுக்கு முன்னர் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் தான் கடமையாற்றியதுடன், தனது காலத்தில் இப்பாடசாலை மத்திய கல்லூரியாக தரமுயர்வு பெற்றதையும் அவர் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சைசாதனையாளர்கள்நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த வேலைத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க தமது பழைய மாணவர் குழாம் எதிர்பார்ப்பதாக குழாத்தின் பிரமுகர் எம்.முன்சிப் மஹ்ரூப் தெரிவித்தார்.

**– எம்.எஸ்.எம்.முன்தஸிர்**
***(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)***

# கொழும்பு வலய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவிக்கரம் நீட்ட "SAEEDA" நிறுவனம் முன்வருகை





கொழும்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் கொழும்பு வலய கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் வலய கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கையின் "SAEEDA" நிறுவனத்தின் ஸ்தாபகரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி அதிதியாக கலந்து கொண்டார். இக்கலந்துரையாடலில் கல்விப்பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், திட்டப்பணிப்பாளர்கள், நிர்மாணத்துறை பொறியியலாளர்கள், சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட வலய, திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது கொழும்பு பிரதேச பாடசாலைகளின் குறைபாடுகள் முதலில் இனங்காணப்பட்டதோடு அதற்கு நிதியுதவி வழங்கி அபிவிருத்தி செய்ய தான் தயாராக இருப்பதாக மேற்படி நிறுவன ஸ்தாபகரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி இதன்போது தெரிவித்தார்.



கொழும்பு வலயத்தில் இனங்காணப்பட்ட பின்வரும் பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்திக்கவும் அவர் முன்வந்துள்ளார்.

சென் அந்தனிஸ் பெண்கள் கல்லூரி (கொழும்பு 03), ஹம்ஸா வித்தியாலயம், பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி, சென் செபஸ்தியன் பெண்கள் வித்தியாலயம், ஸேர் ராசிக் பரீட் முஸ்லிம் வித்தியாலயம், அல்ஹிரா வித்தியாலயம், கைரியா பெண்கள் வித்தியாலயம், புனித செபமாலை தமிழ் வித்தியாலயம், மோதர ஆனந்தா வித்தியாலயம், மகாபோதி வித்தியாலயம்,

மர்யம் பெண்கள் கல்லூரி, மஹவத்த சென் அந்தனிஸ் தமிழ் வித்தியாலயம், இராஜசிங்க வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம், ஹேமமாலி வித்தியாலயம், ஸ்ரீ சங்கராஜா வித்தியாலயம், பாரொன் ஜயதிலக்க வித்தியாலயம், ரீ.பி ஜாயா ஸாஹிரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே அபிவிருத்திக்காக இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆண், பெண்...

திட்டமிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று(10) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விசேட ஏற்பாட்டுக்கமைய பெண்களின் பிரச்சினைகளை அறிவிப்பதற்காக தற்போதும் 24 மணித்தியாலங்கள் இயங்கும் 1938 என்ற தொடர்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் விட்டுச் செல்லப்படும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக "கவுலுவ" என்ற வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பெண்களின் சுகாதார பாதுகாப்பு மிக முக்கியமானது என்ற வகையில், அதற்காக பயன்படுத்தப்படும் பெண்களுக்கான செனிட்டரி துவாய்களின் வரியை குறைக்கும் முயற்சிகளில் அமைச்சு தலையீடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## விமான ... (03ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் தெரிவிக்கின்றது. சர்வதேச சிவில் விமான அமைப்பின் கொள்கை மற்றும் நடைமுறை பூகோள முறைமைகளில் கவனம் செலுத்தி, விமானப் பயண வசதிகள் கட்டண கட்டளைகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது 2023 – 01ஆம் இலக்க கட்டளைக்கிணங்க திருத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## காலி ... (03ஆம் பக்கத் தொடர்)

நேற்றைய தினமும் பாடசாலைகள் மூடப்பட்டன. தற்போது இவ்விரண்டு மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி குறைவடைந்து இயல்புநிலை திரும்பியுள்ளது. இதனால் இன்றைய தினம் முதல் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரயில் ... (03ஆம் பக்கத் தொடர்)

1923 ஆம் ஆண்டு 'சிலோன் ரயில் நிலைய மாஸ்டர்ஸ் யூனியன்' என ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சங்கம் பின்னர் இலங்கை ரயில் நிலைய அதிபர் சங்கம் என பெயர் மாற்றப்பட்டது. இவ்விழாவின் பிரதம அதிதியாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன கலந்து கொண்டார்.

## முதலீட்டு ... (03ஆம் பக்கத் தொடர்)

ஊக்குவித்தலுக்காக இவ்வொப் பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இது தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய சிதமு (சிந்திப்போம்) நூலின் பிரதியை, இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு நேற்று (10) கையளித்தபோது.

## சித்தியடைந்தவர்களுக்கு...

இருபாலாரும் மூன்று மொழிகளிலும் இதற்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 16 என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலிலுள்ள...

தங்கியுள்ள இலங்கையர்களிடமிருந்து இதுவரை இவ்வாறான எத்தகைய வேண்டுகோளும் முன்வைக்கப்படவில்லை. அங்கு தங்கியுள்ள இலங்கையர்கள் எவராயினும் நாடு திரும்புவதற்கான தேவை ஏற்பட்டால் இதற்கான சகல வசதிகளையும் மேற்கொள்ள பணியகம் தயாராகவுள்ளது.

இஸ்ரேலில், காணாமலானதாகக் கூறப்படும் இலங்கைப் பெண் உயிரிழந்துள்ளதாக சமூக வலைத் தளங்கயில் வெளியிடப்படும் தகவல்கள் தொடர்பில் தெரிவித்துள்ள செனரத் யாப்பா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி விடயம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதுடன் இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வெ ளிவிவகார அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார். இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் எவரும் பயப்படத் தேவையில்லை. கிடைக்கும் தகவல்கள் அவ்வப்போது வெ ளியிடப்படும்.

இலங்கையைச் சேர்ந்த இருவர் காணாமற் போயுள்ளதாக நேற்று தகவல்கள் வெளியிடப்பட்டன. அதேபோன்று நேற்றும் முன்தினம் பிற்பகலில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாகவும் சமூக வலைத் தளங்கள் மூலம் காணமுடிந்தது. எவராவது ஒருவர் அவ்வாறு மரணித்திருந்தால் அதனை உறுதிப்படுத்த ஒரு முறைமை காணப்படுகிறது. தூதுவராலயத்திலுள்ள அதிகாரிகள் அதுதொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வர்.

## டியூசன் வகுப்புக்களால்...

வருகை கட்டாயமாக்கப்பட்டுள்ளது, இது அனைத்து தரங்களுக்கும் பொருந்தும் என்றார்.

1,500 க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஒரு மண்டபத்தில் கூட்டி சொற்பொழிவு செய்வதன் மூலம் அடையக்கூடியதல்ல

கல்வி.தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் உட்பட ஆரம்ப வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இவ்வாறான கற்பித்தல் முறைகளை பிரயோகிப்பது நடைமுறைச் சாத்தியமற்றதெனவும் அவர் சுட்டிக்காட்டினார். "கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் தேவையான உதவியைப் பெறுவது தவறல்ல. ஆனால் அது வணிக அடிப்படையிலான தொழிலாக உருவானது விரும்பத்தக்க சூழ்நிலை அல்ல. பெற்றோர்கள் கஷ்டப்பட்டு தங்கள் குழந்தைகளை டியூஷன் வகுப்புகளுக்கு அனுப்பினால் பாடசாலைகள் இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை,

தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சவால்களுக்கு முகங்கொடுத்து சிரமங்களை எதிர்நோக்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக பெரும் தொகையை ஒதுக்க வேண்டிய இக்கட்டான நிலையை உடனடியாக தவிர்க்க வேண்டும் என்றும் அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார்.

## களுத்துறையில்...

மரண தண்டனையும் மற்றுமொரு குற்றவாளிக்கு 10 வருட கடுங்காவல் சிறைத் தண்டனையும் விதித்து களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன நேற்று (10) தீர்ப்பளித்தார்.

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் நவுத்துடுவ கீரந்திடிய பிரதேசத்தில் மேகமவத்த கொலணி, 5ஆம் கட்டை பிரதேசத்தில் வசித்து வந்த தனபால பெர்னாண்டோ என்பவரை கம்புகளாலும் தடிகளாலும் இவர்கள் அடித்துக் கொலைசெய்ததாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில், 03, 04 மற்றும் 05 ஆவது பிரதிவாதிகளான வலகெதர, பல்லேகொடவைச் சேர்ந்த மல்முத்துகே தயாரத்ன என்ற ஒலிவர், நாவுத்துடுவ, கீரந்திடிய பகுதியைச் சேர்ந்த அனகிபுர ஆரியரத்ன என்ற லொக்கா மற்றும் 05 ஆவது நபரான கிரிமெட்டிய பகுதியைச்சேர்ந்த பிரேமதிலக்க அல்லது தர்மதிலக்க என்ற மூவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது. 01ஆம் பிரதிவாதியான பேருவளை, கலவில பகுதியைச் சேர்ந்த ரத்னா என்ற அனகிபுர பிரேமதிலக என்பவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் மூன்று இலட்சம் ரூபா நட்ட ஈடும், மேற்படி நட்டஈட்டை செலுத்தத் தவறினால் மேலும் இரண்டு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில்இரண்டாவது குற்றவாளி புற்றுநோயால் மரணமடைந்துள்ளதாக நீதிமன்றத்தில்தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர், நாவுத்துடுவ கீரந்திடிய பிரதேசத்தில் கம்புகளால் அடித்து நபர் ஒருவரைக் கொலைசெய்த சம்பவம் தொடர்பில் வெலிப்பன்ன பொலிஸாரால் சந்தேகநபர்கள் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## முதலீட்டு...

அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இரு நாடுகளுக்கிடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு எதிர்கால நோக்குடன் 2017 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கிடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வரைபு ஒப்பந்தம்

கைச்சாத்திடப்பட்டது.

இதில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க வர்த்தக மற்றும்

முதலீட்டு ஒத்துழைப்புக்களை எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில் நேற்யைய தினம் முதல் எதிர்வரும் 05 வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில், இந்த உடன்படிக்கை கால நீடிப்புச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## 314 அதிகாரிகள்...

இவர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்கினார்.

பிரிகேடியர் நிலையிலிருந்த 07 அதிகாரிகள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 12 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 37 லெப்டிணட் கேர்ணல்கள், கேர்ணல் நிலைக்கும் 41 மேஜர்கள் லெப்டிணட் கேர்ணல் நிலைக்கும், 50 கெப்டன்கள் மேஜர் நிலைக்கும் 84 லெப்டிணட்கள் கெப்டன் நிலைக்கும் மற்றும் 83 இரண்டாம் லெப்டிணட்கள் லெப்டிணட் நிலைக்கும் (நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின்) அதிகாரிகள் பிரிவில் இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

83 அதிகாரவாணையற்ற அதிகாரிகள் II, அதிகாரவாணையற்ற அதிகாரிகள் I நிலைக்கும், 183 பணிநிலை சார்ஜன்கள் அதிகாரவாணையற்ற அதிகாரிகள் II நிலைக்கும், 203 சார்ஜன்கள் பணிநிலை சார்ஜன் நிலைக்கும், 414 கோப்ரல்கள் சார்ஜன் நிலைக்கும், 374 லான்ஸ் கோப்ரல்கள் கோப்ரல் நிலைக்கும், மற்றும் 248 சிப்பாய்கள் லான்ஸ் கோப்ரல் நிலைக்கும் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் நிலை உயர்வு பெற்றுள்ளனர்.

07 பிரிகேடியர்கள் இராணுவத்தின் இரண்டு நட்சத்திர மேஜர் ஜெனரல் நிலைக்கு நிலை உயர்வு பெற்றவர்கள் வருமாறு மேஜர் ஜெனரல் டி.எ அமரசேக்கர யூஎஸ்பீ, மேஜர் ஜெனரல் ஆர் எல்விட்டிகல யுஎஸ்பீ, மேஜர் ஜெனரல் ஐ.எச்.எம்.ஆர்.கே ஹேரத் யுஎஸ்பீ, என்டிசி, பீஎஸ்சி, மேஜர் ஜெனரல் டபிள்யூ.எம்.பி.எம் விஜயசூரிய ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ என்டியூ, மேஜர் ஜெனரல் டபிள்யூ.பீ காரியவசம், மேஜர் ஜெனரல் கே.எம்.பீ.எஸ்பி குலதுங்க ஆர்ஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ மற்றும் மேஜர் ஜெனரல் எச்.எச்.கே.எஸ்.எஸ் ஹேவகே ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ ஆர்சிடிஎஸ் பீஎஸ்சீ ஆகியோர் பதவி உயர்வுபெற்றுள்ளனர்.

## நாகபட்டினம் ...

கேப்டன் பிஜு ஜார்ஜ் தலைமையில் 14 ஊழியர்கள் இந்த சோதனை ஓட்டத்தை நடத்தினர்.

நேற்று செவ்வாய்க்கிழமை கப்பல் போக்குவரத்து தொடங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் திங்கட்கிழமை இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நிர்வாக காரணங்களால் கப்பல் போக்குவரத்து ஒத்தி வைக்கப்பட்டுள்ளதென்றும், நாளை12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 07 மணிக்கு இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என்றும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## IORA மாநாட்டில்...

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் இந்தியப் பெருங்கடல் ரிம் மன்றத்தின் (IORA) மாநாட்டில் கலந்துகொள்ள இவர், இலங்கை வந்துள்ளார்.

நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிவை வெளிவிவகார அமைச்சில் சந்தித்த அன்னேமேரி ட்ரெவெலியன் , இருநாட்டு அரசியல், சமூக, பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார் .

இப்பிராந்தியத்துக்கான இங்கிலாந்தின் நீண்ட கால அர்ப்பணிப்பை அமைச்சர் அலி சப்ரி பாராட்டியிருந்தார். இலங்கையின் சுற்றுச்சூழல் பணிகளுக்கான இங்கிலாந்தின் ஆதரவை அமைச்சர் அன்னேமேரி ட்ரெவெலியன் இதன்போது வெளிப்படுத்தினார். IORA போன்ற முக்கிய பிராந்திய மன்றங்கள் மூலம், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்கான மேம்பட்ட பாதுகாப்பை நோக்கிய முன்னேற்றத்தை விரைவுபடுத்த முடியும். காலநிலை இலக்குகள் மற்றும் கடல் பாதுகாப்பை அதிகரிப்பதில் ஒத்துழைக்க முடியுமெனவும் அமைச்சர் அன்னேமேரி ட்ரெவெலியன் வலியுறுத்தியுள்ளார்.

## மாடு ஒன்றுடன்...

அதிரடிப்படையினர் இருவர் பலியானதுடன் 06 பேர் படுகாயமடைந்து வைத்தியசாயைில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து நேற்றிரவு

9.30 மணியளவில் இடம்பெற்றது. இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மடுகந்தை பகுதியிலுள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அதிரடிப்படை ஜீப்வண்டி, வெளிக்குளம் பகுதியில் பயணிக்கும் போது வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது ஜீப் வண்டியில் பயணித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையை சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர். இதில், இருவர் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்காகொண்டு வருகின்றனர்

## 2023 சிறுபோகத்தில்...

பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக விவசாய அமைச்சர் யோசனை சமர்ப்பித்திருந்தார். இதைக் கருத்திற்கொண்டு விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், இவர்களுக்கான நிதியை ஒதுக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## பொருளாதார...

மொரோக்கோ சென்றுள்ள நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன், இந்நிறுவனங்களின் தலைவர்கள் நடத்திய கலந்துரையாடலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அங்கு உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு, இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார மற்றும் சீர்திருத்தங்களின் வெற்றிக்கு உலக வங்கி வழங்கிய ஆதரவுக்கு செஹான் சேமசிங்க இங்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இராஜாங்க அமைச்சருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே. சுப்பிரமணியத்துக்கும் இடையில் சந்திப்பும் இடம்பெற்றுள்ளது. பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இலங்கையின் பொருளாதாரம் எதிர்நோக்கு சவால்கள் உள்ளிட்ட தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கூட்டம் மொரோக்கோவில் ஆரம்பமானது. இந்நிலையில், இவ்வாரத்துக்குள் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கும் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி அடைவதற்கும் எமது பங்காளிகள் அனைவரையும் சந்திக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மொரோக்கோ மரகேச்சில் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறும் மாநாட்டில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளார்கள்.

## புத்தளத்தில்...

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இவற்றின் பெறுமதி ரூபா இரண்டு கோடிக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. கற்பிட்டி, மாம்புரி பிரதேசத்திலிருந்து லொறி மூலம் குளியாப்பிட்டிக்கு கொண்டு வரப்பட்டபோது இவற்றைக் கைப்பற்றிய பொலிஸார், லொறியின் சாரதியையும் கைது செய்தனர்.

குருநாகல் அலவ்வ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளரென பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (10) அதிகாலை 1.00 மணியளவில் மதுரங்குளி நகரில் வைத்து லொறியொன்றை சோதனை செய்த போதே பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் லொறியை பொலிஸார் சோதனை செய்தனர். லொறியினுள் மிகவும் சூட்சமான முறையில் தும்புச்சோறு சாக்குகளை லொறியின் பின்புறமாக வைத்து உள்ளே 78 மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

## நாட்டை துரித...

முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கை தகவல் தொழினுட்ப நிறுவகத்தின் (SLIIT) கண்டி கிளையை (09) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஏழு மாடிகளைக் கொண்ட இந்த தனியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வக வசதிகள், மாநாட்டு அரங்கு , ஆராய்ச்சி கூடங்கள் மற்றும் விடுதி வசதிகள் உள்ளன.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து, பல்கலைக்கழகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, பின்னர் பல்கலைக்கழக வளாகத்திற்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதுடன் மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபட்டார்.

அவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, மாணவர்களின் திறமைகளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், வேகமாக வளர்ந்து வரும், அதிக போட்டித்தன்மை கொண்ட, தொழில்நுட்ப அடிப்படையிலான பொருளாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் என்பனவே இலங்கையின் எதிர்கால வேலைத் திட்டம் என்றார்.

இலங்கையில் பல்கலைக்கழக அமைப்பை நவீனமயமாக்கும் அதே வேளையில், தேவையான தொழில்நுட்ப அறிவைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில், புதிய அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:

இன்று உலகில் தொழில்நுட்ப புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த தொழில்நுட்ப புரட்சியின் பெரும் பகுதி மேற்கத்திய நாடுகளுக்கு சொந்தமானது. ஒரு சிறிய பகுதி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சொந்தமானது. அதிலிருந்து சீனாவை நீக்கினால், அந்த எண்ணிக்கை இன்னும் குறையும்.

1977ஆம் ஆண்டு ஆடைத் தொழிலைக் கொண்டு இந்த நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப ஆரம்பித்தோம். இன்று ஆடைத் தொழிலை மேலும் விரிவுபடுத்த வேண்டும்.

இப்போது நமது எதிர்காலம் தொழில்நுட்பம் சார்ந்த கைத்தொழில்துறையிலே உள்ளது. தொழில்நுட்பம் சார்ந்த விவசாயத் துறை மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான சேவை முறை ஆகிய இலக்கை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

கடன் மீட்சித்திட்டம் முடிவடைந்த பின்னர் அரசாங்கத்தின் எதிர்காலப் பயணம் குறித்து அறிவிக்க எதிர்பார்க்கிறோம். முதலில், வேகமாக வளர்ந்து வரும், அதிக போட்டித்தன்மை கொண்ட தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். இரண்டாவதாக, டிஜிட்டல் முறைமை அடிப்படையிலான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும், மூன்றாவதாக, பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

இன்று இலங்கை பசுமைப் பொருளாதாரத் திட்டங்களுக்குள் பிரவேசித்துள்ளதுடன் அதற்கான பரந்தளவிலான பணிகளை முன்னெடுத்துள்ளது .

இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நமக்கு புதிய கல்வி முறையும் அறிவும் தேவை. அதற்கு, தற்போதுள்ள பல்கலைக்கழகங்களை நவீனமயமாக்கி, புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும்.

அரசு மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் இந்தப் பல்கலைக்கழகங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு இலாபத்தை மீள முதலீடு செய்யும் முறை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், லாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் பல்கலைக்கழகங்களை நிறுவ முடியும்.

இந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடிப்பதற்காக மாணவர்களுக்கு மானிய வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தையும் தொடங்க திட்டமிட்டுள்ளோம்.

தற்போது அரசாங்கத்துடன் தொடர்பற்ற துறைகளில் இருந்து பல பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவ பீடங்களை ஆரம்பிக்கும் திட்டம் உள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். புதிய பல்கலைக்கழகங்களை அரசாங்கத்தின் ஊடாக தொடங்க எதிர்பார்க்கப்படுகிறது. குருநாகல், சீதாவக்க மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அந்த பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது இரண்டு வளாகங்களை உள்ளடக்கியது. இதற்கான திட்டங்கள் இந்த ஆண்டே தயாரிக்கப்பட்டு முடிக்கப்படும் .

இப்பணிகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை கண்டி தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கைப் பல்கலைக்கழகம் இந்தக் கண்டிப் பகுதியில்தான், நிறுவப்பட்டது. ஆனால் அதன் இன்றைய நிலை குறித்து மகிழ்ச்சியடைய முடியாது.

அப்போது ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கிய இலங்கைப் பல்கலைக்கழகம், முதல் மூன்று நான்கு தசாப்தங்களில் நாட்டின் சுதந்திரத்தை முன்னேற்றுவதற்கு பரந்த பங்களிப்பைச் செய்தது. எனவே இந்த பல்கலைக்கழகத்தை மீண்டும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

மேலும், கண்டியில் சென்னை IIT வளாகம் ஆரம்பிப்பது குறித்து இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். பின்னர், அதனை தனியான பல்கலைக் கழகமாக மாற்றலாம். அத்துடன், கொத்மலை பிரதேசத்தில் காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொல்கொல்ல பிரதேசத்தில் மற்றுமொரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வேலைத்திட்டங்களினால் கண்டி தொழில்நுட்ப மையமாக மாறும் என்றே கூற வேண்டும். மேலும், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பதிலாக தொழிற்கல்லூரிகளை நிறுவ திட்டமிட்டுள்ளோம். பட்டதாரிகள் மட்டுமின்றி, அனைத்து துறைகளுக்கும் உள்ள பணியாளர்கள் தேவை. அந்த வளர்ச்சியுடன் நாம் முன்னேற வேண்டும்.

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

### மேஷம்:

ராகு 12ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

### ரிஷபம்:

ராகு 11ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. எதிர்பார்த்த இடத்தில் இருந்து தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். சொந்தங்கள் உங்களைத் தேடி வரும்.

### மிதுனம்:

ராகு 10ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. சுப நிகழ்ச்சிகளுக்கான வாசல் திறக்கும். எதிர்பாராத நற் செய்திகள் மனதை நிறைக்கும். புதிய நட்பு மலரும். பழைய நட்பு தொடர்பு கொள்ளும்.

### கடகம்:

ராகு 9ம் ,கேது 3ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தேவையான பணம் புரட்டிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். வெகு காலமாய் வர வேண்டிய பணம் ஓரளவு வசூல் ஆகிவிடும்.

### சிம்மம்:

ராகு 8ம் ,கேது 2ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. உதவிகளும் கிடைக்கும். நிதிப் பற்றாக்குறை அகலும். ஐ.டி தொழில், பத்திரிகைத் தொழில், ஆடிட்டர் தொழில், ஆசிரியர் தொழில் செய்பவர்கள் நல்ல வாய்ப்பு பெறுவார்கள்.

### கன்னி:

ராகு 7ம் ,கேது 1ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. 7 ஆம் இடத்தில் இராசியின் பார்வை வலுவாகப் பதிவதால் கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்லபடியாக இருக்கும்.

### துலாம்:

ராகு 6ம் ,கேது 12ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. வீடு, வாகன வசதிகள் சிறப்பாக இருக்கும். புது வாகனங்களை வாங்கும் வாய்ப்பு உண்டு.

### விருச்சிகம்:

ராகு 5ம் ,கேது 11ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. புது வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. அதற்கான தடைகள் நீங்கும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டு.

### தனுசு:

ராகு 4ம் ,கேது 10ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. சிரமங்கள் வந்தாலும் அது சீக்கிரம் விலகிவிடும். குரு 5 எல் இருப்பது மட்டுமல்ல, 9 ஆம் பார்வையும் உண்டு. குரு சாதகமான நிலைகள் உள்ளதால் புதிய முயற்சிகள் பலிக்கும்.

### மகரம்:

ராகு 3ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில், வணிகம் நல்லபடியாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். செல்வாக்கும் உயரும்.

### கும்பம்:

ராகு 2ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. பண வரவு அதிகரிக்கும். கோயில் புண்ணிய ஸ்தலம் தரிசனம் அமையும். உறவினர்கள் வருகை தருவார்கள்.

### மீனம்:

ராகு 1ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. கடன்களின் அளவு குறையும். வரவேண்டிய பாக்கிகள் வந்துவிடும்.

# உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றவர்களுக்கு மக்கள் வங்கி மடிக்கணினிகளை வழங்கி கௌரவிப்பு



2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையில், அனைத்து பாட பிரிவுகளிலும் உச்ச ஸ்தானங்களைப் பெற்ற மிகச்சிறந்த மாணவர்களின் சாதனைகளை மக்கள் வங்கி பெருமையுடன் கொண்டாடியுள்ளது. மாணவர்களின் கடின உழைப்பைக் கௌரவப்படுத்தும் அடையாளமாக, வங்கி இந்த உச்ச சாதனை படைத்த ஒவ்வொருவருக்கும் புத்தம் புதிய மடிக்கணினியை வழங்கியது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரிஃ பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோரின் தலைமையில் கொழும்பு 05 இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

மக்கள் வங்கியானது தத்தமது துறைகளில் சிறந்து விளங்கிய பின்வரும் மாணவர்களை அங்கீகரித்து, கௌரவித்துள்ளது: உயிரியலில் முதலாம் இடத்தைப் பெற்ற மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரமுதி பாஷினி முனசிங்க.

பௌதீக விஞ்ஞான பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ள கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த மனேத் பானுலா, வர்த்தகப் பிரிவிற்கு கொழும்பு, சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த தில்சரணி தருஷிகா, கலைப் பிரிவில் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற கேகாலை புனித சூசையப்பர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சசினி சத்சரணி அதிபத்து, பொறியியல் தொழிநுட்ப பிரிவில் உச்ச ஸ்தானத்தைப் பெற்ற காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சமுதித நயனப்ரிய மற்றும் உயிர்முறைமைகள் தொழினுட்பவியலில் நாட்டில் முதல் இடத்தைப் பெற்ற கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருச்சினி அஹின்சா விக்ரமரத்ன ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் உரையாற்றிய மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, "இந்த அசாத்தியமான திறமைசாலிகளை அங்கீகரித்து அவர்களுக்கு வெகுமதி வழங்கும் பாக்கியத்தை மக்கள் வங்கி பெற்றிருப்பதில் பெருமையடைகிறது.

இந்த முயற்சி நமது தேசத்தின் எதிர்கால தலைவர்களை வளர்ப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் எமது உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது," என்று குறிப்பிட்டதுடன், மாணவர்களின் சிறப்பான திறமைகளை எதிர்காலத்தில் நாட்டுக்கு சேவை செய்ய பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

# இரட்டைத் திரை கொண்ட Lenovo Yoga Book 9i, Lenovo LOQ கேமிங் மடிகணினிகள் அறிமுகம்



கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப (IT) விநியோக சந்தையில் முன்னணி வகித்து வரும் IT Gallery Computers (Pvt) Ltd., இலங்கையில் Lenovo நுகர்வோருக்கும் மற்றும் கேமிங் ஆர்வலர்களுக்கும் சமீபத்திய புதிய தயாரிப்புகளை இன்று வெளியிட்டுள்ளது. மிகவும் ஈர்க்கும் வகையிலான இரட்டைத் திரை (dualscreen) கொண்ட Yoga Book 9i மற்றும் புதிய கேமிங் மடிகணினியான LOQ ஆகியன இங்கு காட்சிப்படுத்தப்பட்ட தயாரிப்புகளில் உள்ளடங்குகின்றன. இந்த அறிமுகத்தின் மூலம், இலங்கை சந்தையில் Lenovo நிறுவனத்தின் மிகவும் புத்தாக்கமான புத்தம் புதிய தயாரிப்புகளை வெளியிட்டு, தேசத்தை அதிவேக செயற்பாட்டுக்கு அழைத்துச் செல்ல IT Gallery Computers தயாராகியுள்ளது. வெளிநாட்டு சந்தைக்கு அதிநவீன தொழில்நுட்பத்தை கொண்டு சேர்க்கும் Lenovo நிறுவனத்தின் உறுதிப்பாட்டை இந்த கூட்டாண்மை கோடிட்டுக் காட்டுகிறது. Lenovo வர்த்தகநாமம், சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்த செயற்றிறன் ஆகிய அம்சங்களைக் கொண்ட ஒப்பற்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

## சிறந்த கல்வித் திட்டங்களுடன்

# தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க இலங்கை காப்புறுதிச் சங்கம் அழைப்பு

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு மிகச்சிறந்த கல்வியை வழங்கவும், அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை நிறைவேற்றவும் விரும்புகிறார்கள். அதிகரித்து வரும் கல்விச் செலவைக் கருத்தில் கொண்டு, பெற்றோர்கள் உயர்கல்விக்கு பணம் செலுத்துவதற்கு அல்லது நேரம் வரும்போது பிள்ளையை வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு ஒரு முறையான திட்டத்தை வைத்திருக்க வேண்டும். இருப்பினும், தமது பிள்ளையின் எதிர்காலத்திற்கான சிறந்த சேமிப்புத் திட்டத்தைக் கண்டறிவதில் வளர்ந்தவர்கள் கூட குழப்பத்திற்கு ஆளாகலாம். இதற்காகவே சிறுவர் காப்புறுதித் திட்டம் உள்ளது. இது உங்கள் பிள்ளையின் உயர் கல்வி அபிலாஷைகளுக்கு பாதுகாப்பையும், சேமிப்பையும் உறுதி செய்கின்றது.

இலங்கை காப்புறுதிச் சந்தையில், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி, உயர் பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றின் அடிப்படையில், காப்புறுதியைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது. இத்தகைய நெருக்கடியான சூழலில், பிள்ளைகளை மேல்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவது கனவாகவே இருக்கும். இருப்பினும், பெற்றோர்கள் கல்விக் காப்புறுதித் திட்டமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது, அவர்கள் தமது பிள்ளைகளின் தொழில் வாழ்க்கைக் கனவுகளை நனவாக்கின்றனர்.

# வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

# செலிங்கோ லைஃப் புதிய 'பிரணாம' ஊடாக 22 மில்லியன் ரூபா புலமைப்பரிசில்



நாளைய எதிர்காலத் தலைவர்களாக அடையாளம் காணப்பட்ட நூற்றி ஐம்பத்திரண்டு இளம் இலங்கையர்கள் செலிங்கோ லைஃப் நிறுவனத்திடமிருந்து 22 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான புலமைப் பரிசில்களைப் பெற்றனர். இவர்கள் நாட்டை கட்டியெழுப்ப உதவ வேண்டும் எனவும் இது அவர்களின் எதிர்காலக் கடமையாகும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அதிகரித்து வரும் கல்விச் செலவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவு என பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை உணர்ந்து செலிங்கோ லைஃப் 'பிரணாம' புலமைப்பரிசில்களின் பெறுமதியை தானாக முன்வந்து இரட்டிப்பாக்கியமை இந்த ஆண்டு விழாவின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எச். டி. கருணாரத்ன, எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் இன்றியமையாத கருவிகளான திறன் மேம்பாடு, மொழிப் புலமை, ICT கல்வியறிவு மற்றும் நிதி அறிவாற்றல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தினார். மேலும் மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆங்கிலம் மற்றும் தாய்மொழிக்கு கூடுதலாக ஒரு சர்வதேச மொழியின் மதிப்பை புரிந்து கொள்ள வேண்டும், ஸ்மார்ட்போன்களின் 'ஸ்மார்ட் பாகத்தில்" மாஸ்டர்களாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

# புத்தாக்கமான Retirement Calculator ஐ அறிமுகம் செய்யும் யூனியன் அஷ்யூரன்ஸ்

ஒக்டோபர் 1ஆம் திகதி சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 'Union Assurance Retirement Calculator' ஐ அறிமுகம் செய்துள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் வேகமாக முதிர்வடைந்து வரும் சனத்தொகையினரை கொண்ட நாடாக இலங்கை மாறிவரும் நிலையில், பொது மக்களுக்கு தாம் பணியிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் நிதியளவில் தயார் நிலையில் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்த அறிமுகம் மேலும் உணர்த்தியுள்ளது. Union Assurance Retirement Calculator என்பது பாவனையாளருக்கு நட்பான ஒன்லைன் செயலியாக அமைந்துள்ளது. www.unionassurance.com/retirementcalculator எனும் இணையத்தளத்தில் இதனை பார்வையிட முடியும். தமது நிதிசார் தயார்நிலையை மதிப்பாய்வு செய்வதற்கு தனிநபர்களை வலுவூட்டும் வகையில் தமது தற்போதைய வயது, பணியிலிருந்து ஓய்வுபெற எதிர்பார்க்கும் வயது, தற்போதைய சூழலில், மாதாந்தம் எதிர்பார்க்கும் வருமானம் மற்றும் முதுமை காலத்துக்காக தற்போது கொண்டுள்ள சேமிப்பு (தெரிவுக்குரியது) போன்ற தகவல்களை உள்ளீடு செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

# Auto Miraj ஒத்துழைப்புடன் HNB FINANCE லீசிங் வாடிக்கையாளர்களுக்கு பல நன்மைகள்



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, வாகன சேவைத் துறையில் முன்னணி நிறுவனமான Auto Miraj உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதுடன், HNB FINANCE தனது லீசிங் வாடிக்கையாளர்களுக்கு பல தனித்துவமான நன்மைகளை வழங்குகிறது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஒக்டோபர் 4ஆம் திகதி இரு தரப்பினரும் நாவலையிலுள்ள HNB FINANCE தலைமை அலுவலகத்தில் கைச்சாத்திட்டனர்.

HNB FINANCEஇன் முகாமைத்துவ பணிப்பாளர் சமிந்த பிரபாத், Auto Miraj நிறுவனத்தின் பிரதித் தலைவர் ரமித் சரத்சந்திர, Auto Miraj நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் விராஜ் மெண்டிஸ், செயற்பாட்டுத் தலைவர் சுரேன் ரொட்ரிகோ, சந்தைப்படுத்தல் முகாமையாளர் யொஹான் காளிதாச மற்றும் HNB FINANCEஇன் பிரதி நிறைவேற்று அதிகாரி மதுரங்க ஹீன்கெந்த, பிரதி பொது முகாமையாளர் பெத்தும் சம்பத் மற்றும் லீசிங் பிரிவின் பிரதான முகாமையாளர் அரோஷ் ஷானுக ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். இந்த ஒப்பந்த காலத்தில் Auto Mirajக்கு வருகை தரும் HNB FINANCE வாடிக்கையாளர்களுக்கு HNB FINANCE பல பிரத்யேக தள்ளுபடிகள் மற்றும் வசதிகளை வழங்கும். இதன்படி, HNB FINANCE லீசிங் வாடிக்கையாளர்களின் முதல் வாகன சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது மற்றும் வாகனத்திற்கான இரண்டாவது சேவைக்கு கட்டணத்தில் 50% தள்ளுபடி வழங்கப்படும். மூன்றாவது சேவையின் போது உழைப்புக் கட்டணம் (Labour Charge) வசூலிக்கப்படாது. மேலும், இந்த தள்ளுபடிகள் கார் கீறல் பழுதுபார்த்து சரி செய்வதற்கு 25% தள்ளுபடியும், கார் பொலிஷ் மற்றும் உட்புற சுத்தம் செய்வதற்கு 25% தள்ளுபடி மற்றும் பிற சேவைகளுக்கு 50% தள்ளுபடி உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படும்.

# Riello Master HE UPS தொகுதியை அறிமுகப்படுத்தும் Hayleys Energynet



Hayleys Fentons இன் துணை நிறுவனமான Hayleys Energynet, சக்தி செயற்திறன் கொண்ட UPS தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான இத்தாலியின் Riello UPS உடன் இணைந்து, அண்மையில் அதன் புதிய Riello Master HE UPS தொடரை பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாக வளர்ந்து வரும் மின்சக்தி துறையில், புத்தாக்கம் மற்றும் முன்னேற்றத்தை செயற்படுத்துவதில் கூட்டாண்மைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. Riello Master HE 800 KVA UPS தொகுதியின் அறிமுகமானது, Energynet Partners Meet (Energynet கூட்டாளர்கள் சந்திப்பு) இன் முக்கிய அம்சமாக அமைந்தது. இது தொழில் வல்லுநர்கள், பொறியியலாளர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைத்திருந்தது. இலங்கையில் Riello UPS இன் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை பங்காளியாக Hayleys Energynet சேவையாற்றுகிறது. நிறுவனத்தின் UPS தயாரிப்புகளுடன் இணைந்தவாறு, Riello UPS தொகுதியானது இலங்கையில் ஒரு முன்னோடியான தீர்வாக அமைகிறது. அது கொண்டுள்ள உயர் மின்னழுத்த வழங்கல் உடன், ஒப்பற்ற சக்தி தரம், உச்சபட்ச பாதுகாப்பு, மேம்பட்ட செயற்றிறனையும் அது உறுதி செய்கிறது. Fentons Limited நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹசித் பிரேமதிலக இது தொடர்பில் தெரிவிக்கையில், "எமது Hayleys Energynet தயாரிப்புகளுக்கான எதிர்காலம் மிக நம்பிக்கைக்குரியதாக காணப்படுகின்றது. Riello UPS உடனான எமது புதிய கூட்டாண்மை மூலம், பாதுகாப்பான மற்றும் நிலைபேறான பணிச் செயன்முறைக்கான இடர் நேர மின்சக்தியை வழங்குவதன் மூலம் எதிர்காலத்திற்கான மின்சக்தி தொடர்பில் கவனம் செலுத்துகிறோம்" என்றார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கட்கிழமை 2023.10.09 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5262 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,725,072.00
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 3 5 3 2 1 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3504 — சீட்டிழுப்பு திகதி 09.10.2023 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,474,514.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 35 50 51 63 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26452

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1610 — 2023.10.09 — 45172 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,937,104.00
ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 15 18 38 68 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 — திகதி 09.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0088 — வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 1 5 8 2 4 6 — L7 இலக்கம் 1 1 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,498,532.96

ராசி சுப பலன் — திகதி 09.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 571 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,200,106.80
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 15 18 43 55 — விசேட இலக்கினம் சிம்மம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1292 — 09.10.2023 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,489,557.60
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 54 62 71 73 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 39542


## முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்

**வ/ப வீமான நிலையம் மற்றும் வீமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் விலைக்கோரல்**

**இல. 074/T/2023**

**இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு (CIAR) 04 எண்ணிக்கையான HF எயார் பேண்ட் டிரான்ஸ்சீவர்களை வழங்குதல்**

2023 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதிய ‘‘தினகரன்’’, ‘‘தினமின’’ மற்றும் ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகைகளில் பிரசுரமான மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபாக பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

மேற்கூறிய விலைக்கோரலின் முடிவுறுத்தல் திகதி 2023 ஒக்டோபர் 18ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனையவைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்

**வ/ப வீமான நிலையம் மற்றும் வீமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரல் இல. 075/T/2023**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட பொதுமக்கள் அறிவிப்பு முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்**

2023-09-23ஆம் திகதிய ‘‘தினகரன்’’, ‘‘தினமின’’ மற்றும் ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகைகளில் பிரசுரமான மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபாக பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

மேற்கூறிய விலைக்கோரலின் முடிவுறுத்தல் திகதி 2023 ஒக்டோபர் 18ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனையவைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

# கிழக்கின் குரல்



## வர்த்தக நிலையத்தினுள் கார் நுழைந்து பெரும் சேதம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் வந்துக் கொண்டிருந்த கார் ஒன்று வர்த்தக நிலையமொன்றுக்குள் நுழைந்து பெரும் பொருள் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதான வீதியில் நேற்று காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாட்வெயார் வர்த்தக நிலையமொன்றுக்குள் கார் புகுந்ததால் கடையில் இருந்த பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் காருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். தனியார் நிறுவனமொன்றில் விற்பனை பிரதிநிதியாக பணிபுரியும் ஒருவரின் காரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடைக்கு முன்னால் உள்ள யூ வளைவில் திரும்ப முற்பட்டபோதே வாகனத்தின் உதிரிப்பாகமொன்று உடைந்ததன் காரணமாக வாகனத்தை நிறுத்த முடியாமல் கடைக்குள் புகுந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதன்காரணமாக கடையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதுடன் காருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)





தேசிய அரச சார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதன்போது உயர்தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்ற அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட 200 பேர் பெறுமதிமிக்க நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம். றஹ்மத்துல்லாஹ், எம்.எஸ். சஹூதுல் நஜீம், எஸ்.எம்.எஸ். எம்.உமர் மௌலானா, எஸ். உதயக்குமார் உள்ளிட்ட கல்வியலாளர்கள் , துறைசார் உயர் அதிகாரிகள் போன்றோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 65 வர்த்தகர்களுக்கு அபராதம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 03 இலட்சத்தி 03 ஆயிரத்தி 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை,தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 100 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 65 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 03 இலட்சத்தி 03 ஆயிரத்தி 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

கூடுதலான விலைக்கு முட்டை விற்பனை செய்தல் அத்தியாவசிய பொருட்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான உணவுப் பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## காரைதீவில் அதிகாலையில் காட்டு யானை அட்டகாசம்!

(காரைதீவு குறூப் நிருபர்)



காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாக தெரிவிக்கின்றனர்.

அறுவடையை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (9) அதிகாலை புகுந்த தனியன் யானை காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையை துவம்சம் செய்தது.

சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகுவின் களஞ்சியசாலையிலுள்ள நெல் மூடைகளையே யானை அட்டகாசம் செய்துள்ளதாக தெரியவருகின்றது. இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன.

தென்னை வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன. இவ்வாறு மனிதன் யானை மோதல் தீவிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள 4ம் கட்டை பாலமுனை சந்தியில் விபத்துக்குள்ளான பாலமுனையைச் சேர்ந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். பாலமுனை சாஹூல் ஹமீத் வீதியைச் சேர்ந்த மர்சூக் முஹம்மட் மனாஸ் (18) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் 4ம் கட்டை பாலமுனை சந்தியில் மின்சார தூணோடு மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருகோணமலை மாவட்டத்தில் திடீர் சோதனை நடவடிக்கை; 10 பேர் கைது

திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது போதைப் பொருட்களை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைய திருகோணமலை மாவட்டத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 10 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் புலனாய்வுத்துறையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் கட்டுப்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 பேரும், கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா. காக்காமுனை பகுதியில் 1000 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஸ்ரீபுர பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பதவி ஸ்ரீபுர பொலிஸ்பிரிவிலுள்ள பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## விழிப்புணர்வு செயலமர்வு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா அமைப்புக்களின் அனுசரணையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அதிபர்களை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.ஜீ. எம்.றிசாத் தலைமையில் நடைபெற்றது. இதில் கல்முனை கல்வி வலயத்திலிருந்து முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட இருபது பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## உலக உளநல தின நடைபவனி







உலக உளநல தினத்தை முன்னிட்டு நேற்று சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உளநலப்பிரிவினால் பொது மக்களுக்கு 'உளநலம் என்பது அனைவரினதும் மனித உரிமையாகும்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வூட்டும் நடைபவனி மற்றும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஷாத் M ஹனிபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனிபா, சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயலத், உளநல பொறுப்பு வைத்திய அதிகாரி மு.டீ கசுன் கடுவல திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி நியாஸ் அஹமட் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கலாபூஷணம் அரச விருதுக்கு சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் தெரிவு



கலாபூஷணம் அரச விருதுக்கு சாய்ந்தமருதைச் சேர்ந்த சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான கலைஞர்களுக்கான மகுடம் சூட்டும் 38 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா 2023 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது சாய்ந்தமருதில் கோலாட்டம் எனும் பொல்லடிக் கலையை முறையாகப் பயின்று, சிறந்த முறையில் அதனை வளர்ந்து வரும் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் கலாபூஷணம் அரச விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். சிறு வயது முதல் இக்கலைக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றார். சாய்ந்தமருதில் இடம்பெறும் எந்த நிகழ்வுகளிலும் "பொல்லடி" எனும் பாரம்பரியக் கலையை வழங்கி, அக்கலையை மழுங்கடிக்கவிடாது உயிரோட்டம் கொடுத்து வருகிறார்.

(எம்.எஸ். எம். ஸாகிர்)

## சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விசேட நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிரதம தபாலகம் ஏற்பாடு செய்த சர்வதேச அஞ்சல் தின விசேட நிகழ்வு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு பிரதம தபாலதிபர் மயில்வாகனம் ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தார்.

இந்நிகழ்வில் இவ்வருடத்தில் தபால் சேவையை மேலும் வலுவூட்டும் பொருட்டு பணியாளர்கள், தபால் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சத்தியபிரகடனமும் இங்கு செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வினைத் தொடர்ந்து வீதியால் பயணித்த மக்களுக்கு சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாற்சோறு மற்றும் குளிர்பானங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாளேந்திரன் கலந்து சிறப்பித்தார்.



## விபுலானந்த மணிமண்டப திறப்பு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மீளப்புனரமைக்கப்பட்ட விபுலானந்த மணிமண்டபம் இன்று(11) புதன்கிழமை காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. கடந்த சில மாதங்களாக விபுலானந்தா மணி மண்டபம் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லண்டனில் வாழும் பாண்டிருப்பைச்சேர்ந்த திருமதி வனிதா இராஜகுமார் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் மணிமண்டபத்தை மீள அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

# வடக்கின் உதயம்

### வடக்கில் பல்வேறு கொள்ளைகளுடன் தொடர்புடைய

# சந்தேக நபரினுடைய காலில் துப்பாக்கிச்சூடு நடத்தி கைது

*நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்*



வடமாகாணத்தில் பல்வேறு பட்ட கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரின் காலில் துப்பாக்கிச்சூடு நடத்தி பருத்துத்துறை பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) கைது செய்துள்ளனர்.

அல்வாய் வடக்கு பிரசேத்தில் இச்சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கின் பல இடங்களில் கொள்ளை, சமூகச் சீர்கேடு ஆகிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 26 வயதுடைய இச்சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றங்களில் பல வழக்குகள் உள்ள போதும், இவர் தலைமறைவாகி இருந்துள்ளார்.

இந்நிலையில், இவரைக் கைது செய்வதற்காக கடந்த ஞாயிறு 08) அல்வாய் வடக்குக்கு பொலிஸார் சென்ற போது, பொலிஸாரின் ஜீப் வண்டி மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதனை அடுத்து பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

இதன் பின்னர் மீண்டும் நேற்று முன்தினம் மதியம் இவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் சென்ற போது, பொலிஸார் மீது கத்திக் குத்து நடத்த சந்தேக நபர் முற்பட்ட வேளையிலேயே, சந்தேக நபரின் காலில் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சந்தேக நபர் பொலிஸாரின் பாதுகாப்புடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதன்போது, சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை விசாரணையை மேற்கொண்டார்.

இதேவேளை, சம்பவ இடத்திலிருந்து கத்தியொன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். தடயவியல் பொலிஸார் தடயங்களை பெற்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பம்பைமடு இராணுவ முகாம் அருகில் விபத்து; பெண் பலி இளைஞர் காயம்

*வவுனியா விசேட நிருபர்*



வவுனியா - மன்னார் வீதியில், பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் நேற்று செவ்வாய்க் கிழமை (10) இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குருக்கள்புதுக்குளம் பிரதேசத்திலிருந்து வவுனியா நகர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் வீதியில் நின்ற மாடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக, பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 45 வி.ஜெயந்தினி உயிரிழந்துள்ளதுடன், இவரின் மகனான 22 வயதுடைய விஜயரட்னம் சிவரோஜன் காயமடைந்து, வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### வவுனியாவில் உளநல தினம்

# மறவன்குளம் பாடசாலையில் விழிப்புணர்வூட்டும் நாடகம்

*வவுனியா விசேட நிருபர்*



உலக உளநல தினத்தையொட்டி விழிப்புணர்வூட்டும் நாடகமொன்று வவுனியாவிலுள்ள மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலகமும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வின் போது, அரங்காலையா கலைக்கூடத்தின் கலைஞர்களினால் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் உளநல வைத்தியர் சுதாகரன், வைத்தியர் வைதேகி திலீபன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுகாசினி சிவதர்சன், உளநலத்துறை உத்தியோகத்தர் துஷாந்தன் பிரியதர்சினி, மறவன்குளம் பாரதிதாசன் பாடசாலை அதிபர் நா.இந்திரகுமார், ஈச்சங்குளம் கிராம அலுவலர் ஜே.அமலதாஸ், ஆசிரியர்கள் மாணவர்களெனப் பலரும் கலந்துகொண்டனர். உலக உளநல தினம் ஒவ்வொருடமும் ஒக்டோபர் 10ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது.

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



அகில இலங்கை சமாதான நீதவானாக மீராசாகிபு அப்துல் கபூர், மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எல்.எம். சாஜித் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மன்னார், பண்டாரவெளியை அவர் பிறப்பிடமாகக் கொண்டவராவார். அவர் மன்னார் மாவட்ட முன்னாள் காதி நீதிபதியாகவும் கடமையாற்றியிருந்தார்.

# தென்மராட்சி மீனவர்களுக்கு இலவச மண்ணெண்ணெய்

### அமைச்சர் டக்ளஸினால் நேற்று விநியோகம்





*சாவகச்சேரி விசேட நிருபர்*

சீன அரசாங்கத்தின் நன்கொடை மூலம் தென்மராட்சி கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை (10) பிற்பகல் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோக நடவடிக்கையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

கடற்றொழிலாளர்களுக்கு தலா 78 லீற்றர் எனும் அடிப்படையில் மண்ணெண்ணெய் உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உரும்பிராய் வீட்டில் திருட்டு; மூவர் பொலிஸாரால் கைது

### சந்தேகநபர்களிடமிருந்து ரூ. 7 இலட்சம் பெறுமதியான பொருட்கள் மீட்பு

*பருத்தித்துறை விசேட நிருபர்*



யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மூன்று கோயில் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார், இவர்களிடமிருந்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும் கைப்பற்றினர்.

இந்த வீட்டு உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிலுள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீட்டுக்கு வந்த போதே, திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, விசாரணை செய்த பொலிஸார், கடந்த ஞாயிறன்று இச்சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

இச்சந்தேக நபர்கள் சுன்னாகம், உரும்பிராய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் இவர்களைத் தேடி வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைக்காட்சிப்பெட்டி, மின் மோட்டர், மடிக் கணினி, தொலைபேசி, தோடு, மணிக்கூடு உள்ளிட்ட பொருட்களை சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றியதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வண்ணை ஸ்ரீவேங்கடவரதராஜப் பெருமாள் கோயில் புனரமைப்புக்காக யாசகர் நிதி உதவி

*பருத்தித்துறை விசேட நிருபர்*



யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வேங்கடவரதராஜப் பெருமாள் கோயிலில் யாசகம் பெற்று வரும் ஒருவர் அந்தக் கோயிலின் புனரமைப்புப் பணிகளுக்காக இரண்டு இலட்சம் ரூபா நிதி உதவியை அக்கோயில் நிர்வாகத்தினரிடம் வழங்கி வைத்துள்ளார். வண்ணை ஸ்ரீ வேங்கடவரதராஜப் பெருமாள் கோயிலில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக யாசகம் பெற்று வரும் பாபுஜி எனும் நபரே இந்த நிதி உதவியை வழங்கியுள்ளதாக, அக்கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

கோயிலில் யாசகம் பெறும் பணத்தில் தனது உணவுக்கான செலவு போக, ஏனைய பணத்தை அவர் சேமித்து வைத்த நிலையிலேயே, இந்த உதவியைச் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## கரம்பைக்குறிச்சி பாடசாலையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு



*சாவகச்சேரி விசேட நிருபர்*

யாழ். வரணி, கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புத்தகக் கண்காட்சி மற்றும் வாசிப்பு முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) நடைபெற்றது. சாவகச்சேரி பிரதேச சபையினுடைய வரணிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன. தேசிய வாசிப்பு மாதத்தையிட்டே வாசிப்பு முகாம் நிகழ்வு நடத்தப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாதம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வட்டவளையில் பவுசர் விபத்துக்குள்ளானதில் பால் முழுவதும் விரயம்

*அக்குறணை குறூப் நிருபர்*



வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லொனோக் தோட்டப் பிரதேசத்தில் பால் சேகரிக்கும் பவுசர் வண்டியொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) திடீரென்று விபத்துக்குள்ளானதால், பால் முழுவதும் விரயமாகியுள்ளது.

பால் சேகரித்துக்கொண்டு இந்த பவுசர் சென்றுகொண்டிருந்த போதே, இந்த விபத்துச் சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். பவுசர் வண்டி தனது வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானமை விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் எவருக்கும் எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லையாயினும், பால் விரயமாகியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையக சிறுவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



மலையகத்தைச் சேர்ந்த எதிர்கால சந்ததியினரினுடைய கல்விசார் நகர்வின் வேகம் மேன்மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமெனும் அவசியம் காணப்படுவதுடன், இந்த விடயத்தில் பேதங்கள் கடந்து சிந்தித்துக் கடமையாற்றுவது மலையக மக்கள் பிரதிநிதிகளினதும் புத்திஜீவிகளினதும் பாரிய கடமையென, கல்வி இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் மாதம் முழுவதும் கொண்டாடப்படும் நிலையில், அத்தினம் சிறுவர்களை மகிழ்விப்பது மாத்திரமன்றி, அவர்களது உத்வேகத்தை வெளிக்கொண்டு வருவதற்கான ஒருவித தூண்டல் காரணியாகவும் உள்ளது.

சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதும் சிறுவர்களை மகிழ்விப்பதும் அவர்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வதும் எமது கடமையாக உள்ளது" என்றார்.

"தற்போதைய காலகட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து, அது சமூகச் சீரழிவுக்கு காரணமாக அமைந்துள்ளது.

இளைஞர், யுவதிகளை சீரழித்துவரும் போதைப்பொருள் பாவனை தற்போது சிறுவர்களையும் சீரழிக்கின்றது. ஆகையினால், இந்த விடயத்தில் நாம் அஜாக்கிரதையாக இருந்துவிட முடியாது.

பிள்ளைகளுக்கு மாணவப் பருவம் மிகவும் பொக்கிஷமானதென்பதுடன், அப்பருவம் முறையாகவும் காத்திரமாகவும் இருக்க வேண்டும்.

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதுடன் பெற்றோரின் கடமை முடிந்ததாக எவரும் எண்ணக்கூடாது. ஏனெனில், பாடசாலையில் 6 மணித்தியாலங்களே ஆசிரியர்களுடன் மாணவர்கள் இருக்கின்றனர். மீதி 18 மணித்தியாலங்களும் பெற்றோருடனேயே பிள்ளைகள் இருக்கின்றனர். ஆகவே, தத்தமது பிள்ளைகளை பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் பாரிய கடமையாகும்.

தமது பிள்ளைகளின் பாதுகாவலராகவும் கண்காணிப்பாளராகவும் பெற்றோர் இருக்க வேண்டியது அவசியமாகும்" என அவர் தெரிவித்தார்.

# சமூகங்களிடையே சகவாழ்வை ஏற்படுத்த அவதரித்தவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்

★ கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் ஏற்பாட்டில் ஹபுகஸ்தலாவை அல் மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் நடைபெற்ற மீலாத் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.





இதில் கொத்மலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். இங்கர்சால், உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசாமி நடராஜா உள்ளிட்ட வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, வடமேல், மேல், மாகாண அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பாடசாலை மாணவர்களின் பொல்லடி, இஸ்லாமிய நடனம், ரபான் இசைப் பாடல்கள் போன்ற பல்வேறு இஸ்லாமிய பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

**இக்பால் அலி**



**"ஆண், பெண் இருவருக்கு சமமான கல்வி அறிவை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் இருந்து செயற்பட்ட ஒரு மகானாகவே நான் அவரைப் பார்க்கின்றேன். ஏனென்றால் கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை நிலையிலும் இன்றியமையாததொன்றாகும். அந்த அடிப்படையில் பார்க்கின்ற போது ஹிஜ்ரி 1400 ஆண்டுக்கு முன்பே அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வியைப் புகட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துச் செயற்பட்ட ஒரு பெரிய மகானைப் போற்றுவதில் எந்த மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை".**

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் சமூகங்களுக்கிடையே சகவாழ்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காகவும் ஆண், பெண் இருபாலார்களுக்கிடையே சமமான அறிவை வழங்குவதற்காக அரும்பணியாற்றியவர். இத்தகைய மகானைப் பற்றிப் பேசுவது இன்றைய காலத்தின் தேவையாகும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தும் இரண்டாவது வருடாந்த தேசிய மீலாத் விழா கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் கே. டி நஜ்முதீனின் வழிகாட்டலுடன் ஹபுகஸ்தலாவை அல் மின்ஹாஜ் மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் எம். எஸ். எம். ரிஷா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ஆண், பெண் இருவருக்கு சமமான கல்வி அறிவை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் இருந்து செயற்பட்ட ஒரு மகானாகவே நான் அவரைப் பார்க்கின்றேன். ஏனென்றால் கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை நிலையிலும் இன்றியமையாததொன்றாகும். அந்த அடிப்படையில் பார்க்கின்ற போது ஹிஜ்ரி 1400 ஆண்டுக்கு முன்பே அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வியைப் புகட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துச் செயற்பட்ட ஒரு பெரிய மகானைப் போற்றுவதில் எந்த மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

அதேவேளை, ஒற்றுமைக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் வழிகாட்டியாக நபிகளார் வாழ்ந்து விட்டுச் சென்றுள்ளார். எனவே நாம் இக்கால கட்டத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து நடத்தல் அவசியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.













# தெஹிவளையில் இன்று இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

**புத்தளம் தினகரன் நிருபர்**

கொழும்பு பம்பலப்பிட்டி அமேசன் உயர் கல்வி நிறுவனத்தினால் இன்று (11) புதன்கிழமை தெஹிவளை எஸ்.டீ.எஸ்.ஜயசிங்க மண்டபத்தில் இலவச கல்வி வழிகாட்டல் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இந்த இலவச கருத்தரங்கில் 2030ல் அதிகூடிய கேள்விமிக்க தொழில்கள், பட்டப் படிப்பின் முக்கியத்துவம், குறைந்த செலவில் வெளிநாடுகளில் படிப்பதற்கான வழிகாட்டல், வெளிநாடுகளில் மருத்துவத் துறையில் படிப்பதற்கான வழிகாட்டல், அவரவர்களின் வாழ்க்கைப் பாதையை எவ்வாறு தேர்வு செய்வது, மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புகளுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது, சிறந்த சீ.வீ. ஐ எவ்வாறு தயாரிப்பது போன்ற வழிகாட்டல்கள் இக்கருத்தரங்கில் வழங்கப்படவுள்ளன.

இக்கருத்தரங்கு உளவியல் ஆலோசகர், சீ.பீ.எஸ். நிறுவனத்தின் ஸ்தாபகர், அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர், பேராதனை பல்கலைக்கழகத்தின் பகுதி நேர விரிவுரையாளர் இல்ஹாம் மரிக்காரினால் நடாத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வின் பங்காளர்களாக *Active Counsellors Forum, All Ceylon Peace Foundation, CBS Foudation* மற்றும் *JMR Academy* ஆகிய நிறுவனங்கள் கைகோர்த்துள்ளன.

இந்த இலவச கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் இலவச சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு எதிர்கால சந்தேகங்களுக்கும் பதில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

117

**வேன்கள்**
விற்பனைக்கு

250-6918 NISSAN SERENA 1993, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 071 4 5 4 295 8 . 064571

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

YD-3693 BAJAJ 2010, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 071121081 0 . 064575


# SMB FINANCE PLC

## மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏலவிற்பனை

2023.03.31 வரையான திகதிக்குள் எமது நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் தெனியாய கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை விற்பனை செய்வதற்கான அறிவித்தல். அனைத்து தங்க நகைகளும் கீழுள்ள திகதியில் மு.ப. 10.00 முதல் பி.ப. 1.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**ஏலமிடும் திகதி 2023-10-16**

ஏலமிடும் இடம்: 282/1, CBS கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.

நடைமுறைக்கு : 0766 903 434
தங்கக் கடனுக்காக : 0768 281 339

முன்னறிவித்தலின்றி குறித்த ஏலத்தினை நிறுத்தவோ, ஒத்திவைக்கவோ, ஒன்றிணைக்கவோ அல்லது இடத்தை மாற்றவோ எஸ். எம். பி. ஃபைனான்ஸ் நிறுவனத்திற்கு அதிகாரமுள்ளது.

skills

SMB FINANCE PLC
முகாமையாளர்
இல. 282/1, சீ.பி.எஸ். கட்டிடம், கொழும்பு 3.


# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

### இலங்கை திரிபோஷ லிமிட்டட்டில் துருப்பிடிக்காத உலோக களஞ்சியப்படுத்தும் தாங்கிகளை நிறுவுதல்

Contract No.: SLTL/TB/14/2023

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு துருப்பிடிக்காத உலோக களஞ்சியப்படுத்தும் தாங்கிகளை வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கம்பனி பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டுமென்பதுடன் உற்பத்தியாளருடன் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விற்பனை உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் **CIDA** இன் தேவைப்பாட்டை சி-5 ஆம் தரத்தில் அல்லது மேற்பட்ட தரத்தில் கட்டிடத்தில் விஷேடத்துவத்தை பூர்த்தி செய்திருப்பவராகவுமிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
6. 2023.11.01 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 14,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் (இந்த விண்ணப்பமானது இந்த கேள்விக் காலத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரையும் தொடர்பு கொள்ளப்படும் சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவரின் தொடர்பு இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் விபரங்கள்) சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. 2023.11.02 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2023.11.02 ஆம் திகதியிலிருந்து 2024.02.01 ஆம் திகதி வரையும் ஒப்பந்தக் காலமானது ஒப்பந்தத்தின் உண்மையாக ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 900,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2023.11.02 ஆம் திகதியிலிருந்து 2024.02.29 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் சமுகமளிக்க விரும்பும் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2023.11.02 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**பிரதான பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த,**
**ஜா-எல.**


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


# பகிரங்க ஏல விற்பனை

மட்/வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் அடகு முகவரான மட்/கற்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கற்பிட்டி கண்டக்குளி, ஏத்தாளை, தலுவ, பள்ளிவாசல் துறை ஆகிய கிளைகளில் 2022.07.31ஆம் திகதிக்கு முன்னிருந்தும் இத்திகதி வரை அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் 2023.11.18ஆம் திகதி காலை 9.00 மணியளவில் கற்பிட்டி பிரதான காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**ம/ட் கற்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**கற்பிட்டி.**
**தொலைபேசி இல : 0322260420**

# கைத்தொழில் அமைச்சு

**(சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு)**

## இலங்கை கைப்பணிச் சபை

## ‘லக்சல’

LAKSALA
Art of Sri Lanka

**பொருள் வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024**

இலங்கை கைப்பணிச் சபைக்கு 2024ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வகுதி (A) - காகிதாதிகள்
02. வகுதி (B) - பொருட்களை கொள்வனவு செய்தல்
03. வகுதி (C) - சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்
04. வகுதி (D) - சிவில் நிர்மாணம் / உள்ளக அலங்கார விடயங்கள்

2023.10.11 முதல் 2023.12.15 வரை வாரத்தின் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) மு.ப 9.00 முதல் பி.ப 4.00 வரை இல 215, பௌத்தாலோக்க மாவத்த, தும்முல்ல, கொழும்பு - 07 இல் அமைந்துள்ள இலங்கை கைப்பணிச் சபையின் நிர்வாக பிரிவிலிருந்து மேற்படி (A),(B),(C),(D) வகுதிகளில் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ - 1000/= வீதம் பதிவுத் கட்டணத்தை கணக்குப் பிரிவிற்குச் செலுத்தி விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2023.12.20ம் திகதிக்கு முன்பு பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்க முடிவதுடன், விண்ணப்பங்களை உள்ளடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவைகள் பதிவு செய்தல் - 2024” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல**
**இல - 215, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு - 07**
**தொ.பே. இலக்கம் - 0112557132**


SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk


# கவனத்திற்கு

## சில்லறை மற்றும் நிதியிடல்சார் துறைகளில் பாரிய அளவிலான வர்த்தகம் சார்ந்த வசதிகள்/அமைப்புக்கள்

2023 ஜுலை 4 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட 2339/09 என்ற இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானியின் நடைமுறைகளின் பிரகாரம், பொருளாதார உப-துறைகளின் சர்வதேச தரநிலை தொழில் வகைப்பாட்டின் 471, 641 மற்றும் 649 ஆகிய குழுக்களின் கீழ் செயற்படும் அமைப்புக்களுக்காக, உதாரணமாக வளிச்சீராக்கப்பட்ட 5,000 M2 இற்கு மேலான மொத்தமாக சேவை வழங்கப்பட்ட பிரதேசங்களின் வசதிகளுக்காக மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள சக்தி பாவனையின் (Specific Energy Consumption) அளவுமட்டக்குறியின் கீழ் வசதிகளை செயற்படுத்துவதற்காக இப்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலேயுள்ள குழுக்களின் கீழான வசதிகள் பின்வருமாறு:

- குழு 471 - விஷேடத்துவமற்ற விற்பனைக் கூடங்களின் சில்லறை விற்பனை (நவீன சந்தைகள் போன்றவை)
- குழு 641 - நிதி இடைநிலை (அனைத்து வங்கிகள், நிதிசார் சேவை வழங்குநர்கள் போன்றவை)
- குழு 649 - காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதிய செயற்பாடுகள் நீங்கலான ஏனைய நிதிசார் சேவை செயற்பாடுகள்.

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் 36, 37, 38 மற்றும் 39 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் இந்த ஒழுங்குவிதியானது நடைமுறைப்படுத்துகின்றது. இதற்கமைவாக, மேலேயுள்ள வகுதிகளின் கீழான வசதிகள் அவைகளினால் செயற்படுத்தப்படும் வசதிகள் தொடர்பான அவைகளின் பொதுவான செயற்பாட்டு குறியீடுகள் மற்றும் சக்தி தகவல் ஆகியவற்றை இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கு வழங்கல் வேண்டும்.

மேலேயுள்ள வகுதிகளின் வசதியொன்றின் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள சக்தி பாவனையானது ஏற்றுக் கொள்ளவியலாத மட்டத்திலிருப்பதாக தெரிவிக்கப்படின் (SEC அளவுமட்டக்குறிக்கு மேற்பட்டது), வசதியின் (அமைப்பின்) முகாமையாளரானவர் ஒழுங்குவிதியில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு அளவுமட்டக்குறியுடன் அமைந்தொழுகும் தன்மையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்திற்கு சக்தியின் பாவனையை எவ்வகையில் குறைக்கலாமென்ற விபரமான சக்தி கணக்காய்வு அறிக்கையொன்றையும் நடவடிக்கை திட்டமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு, 011-2575030 நீடிப்பு: 411 என்ற இலக்கத்தினூடாக அல்லது energymanager.slsea@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை நிலைபெறு சக்தி அதிகாரசபை,
இல.: 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு-00700

தொலைபேசி : 0112575030
தொலைநகல் : 0112575089
இணையம் : www.energy.gov.lk

# ஊவா மாகாண சபை

## ஊவா மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் நலன்புரி அமைச்சு

### 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

ஊவா மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும், சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சில் 2024ம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களாக பதிவு செய்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உள்ளூர் நிறுவனங்களிலிருந்து மற்றும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு இலக்கத்தின் கீழ் உள்ள உருப்படி பொருட்களுக்காக மீளளிக்கப்படாத ரூ.500/= தொகையை (ஒரு பொருளுக்கு ரூ.500/= வீதம்) அறவிடப்படுவதுடன் குறித்த மாதிரி பத்திரங்களை http://healthmin.up.gov.lk என்ற இணையதளத்தின் மூலம் அல்லது ஊவா மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சில் கணக்காளரிடம் அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் உருப்படிகளை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்காக hminuvapacc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024 உருப்படிகளை பெற்றுக்கொள்ளல் என்று குறிப்பிட்டு E-Mail அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். உங்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை கொண்டு வந்து ஒப்படைக்கும் வேளையில் அல்லது இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பெற்று அனுப்பும் போது, செயலாளர், சுகாதார அமைச்சின் பெயரில் உள்ள கணக்கு இலக்கம் 260100198440347 மக்கள் வங்கி முதியங்கன கிளைக்கு காசு வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை எமக்கு அனுப்புதல் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து காசு செலுத்தலாம். விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக தபாலில் அனுப்பப்படும் காசோலைகள், காசுக்கட்டணங்கள் மற்றும் காசு ஏற்கப்படமாட்டாது.

உத்தேச விண்ணப்பங்களின் தாம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற பொருட்கள் மற்றும் சேவை விபரங்கள் விண்ணப்பங்களில் ஒன்றாக குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் வழங்குநர்களாக பதிவு செய்து கொள்ளும் சகல விண்ணப்பதாரிகளும் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதி ஒன்றையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த விண்ணப்பங்கள் 2023.10.11 முதல் 2023.11.15 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை அலுவலகத்தில் விநியோகிக்கப்படுவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.15 பி.ப 3.30 இற்கு முன்பு, தலைவர், பெறுகைக்குழு, சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு ஆர்.எச்.குணவர்த்தன மாவத்த பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளினதும் தகைமைகளை பரீட்சித்துப் பார்த்த பின்பு பதிவு செய்யப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பற்றிய இறுதித் தீர்மானம் அமைச்சு பெறுகைக் குழுவிற்கு உரியது.

**அமைச்சு செயலாளர் / பெறுகைக் குழு தலைவர்,**
**ஊவா மாகாண சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும்**
**சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார, சமூக நலன்புரி அமைச்சு,**
**ஆர்.எச். குணவர்தன அமைச்சு,**
**பதுளை**
**2023.10.11**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான சேவைகளை வழங்குதல்

1. **வீதி அபிவிருத்தி அதிகார சபையின்** நிட்டம்புவ நிர்வாக பொறியாளர் அலுவலகத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிட்டம்புவ நிர்வாக பொறியியளார் பிரிவிற்கு சொந்தமான மீரிகம மற்றும் பூகொடை வேலைத்தளங்களுக்கு வாடகை அடிப்படையில் 01 கியூப் டிப்பர் வாகனம் 02 மற்றும் பெக்கோ லோடர் இயந்திரமொன்றினை ஒருவருட காலம் வரை பெற்றுக்கொள்வதற்காக தகுதியான மனுதாரர்களினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

**Tender No - RDA/EE/NIT/TEN/2023/50**
**Tender No - RDA/EE/NIT/TEN/2023/51**
**Tender No - RDA/EE/NIT/TEN/2023/52**

02. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**நிட்டம்புவ.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல் (IFB)

இலங்கை வங்கியின் 08 கிளைகளுக்குச் சூரிய சக்தி நிகர கணக்கீட்டு அமைப்புக்களை வழங்குதல்,
விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

**ஏலவிலை கூறல் இலக்கம்.** P / PROC / 2023 / 215

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை வங்கியின் 08 கிளைகளுக்கு சூரிய சக்தி நிகர கணக்கீட்டு அமைப்புக்களை வழங்கி, விநியோகித்து, பொருத்தி, செயற்படுத்தி பராமரிப்பதற்கு உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து ஏலவிலைகூறல்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கிளை | அளவு (kW) |
|---|---|---|
| 1. | வாத்துவ | 40 |
| 2. | மாத்தறை மேற்தரக் கிளை | 100 |
| 3. | வலஸ்முல்ல | 40 |
| 4. | வீரகெட்டிய | 25 |
| 5. | எம்பிலிப்பிட்டிய | 75 |
| 6. | சியம்பலாண்டுவ | 40 |
| 7. | லக்கல | 40 |
| 8. | பொத்துவில் | 20 |

குறிப்பு : **CEB / LECO, என்பவற்றின் அனுமதிக்கமைய, வங்கிக் கிளைகளும் மின்வலுவும் வேறுபடலாம்.**

(i) இலங்கை பேண்தகு வலு அதிகாரசபையின் (SLSEA) கீழ் சூரியசக்தி அமைப்புக்களை வழங்குதல் தொடர்பில் கடந்த ஐந்து வருடத்திற்குள் பதியப்பட்டு, இலங்கையில் மொத்தமாக 05MW அல்லது அதற்கும் அதிகமான வலுவை வழங்கக் கூடிய அமைப்புக்களை விநியோகித்து, வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் இவ் ஏலவிலை கூறலுக்குத் தகுதியுடையவராயிருப்பர்.

(ii) கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளுக்கான (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) அல்லது (2020, 2021 மற்றும் 2022) சூரியசக்தி அமைப்புகளை பொருத்துவதில் ஏலவிலை கூறுபவரின் அல்லது ஏலவிலை கூறுபவரின் நிறுவனத்தின் அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூ. 100.0 மில்லியனாகக் காணப்பட வேண்டியதுடன் தேறிய மதிப்புடன் இலாபமீட்டும் நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

2. இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை வங்கி அல்லது சட்டபூர்வமான அரச கூட்டுத்தாபனம் அல்லது சபையினால் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலுள்ள ஏலவிலை கூறுபவர்கள் அல்லது நிறுவனங்களின் ஏலவிலை கூறல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. ஆங்கில மொழியிலான ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியையும் அதனுடன் தொடர்புடைய இதர விபரங்களையும் கீழ்க் காணும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை வேலை நாட்களில் **0900 மணி முதல் 1500 மணி வரை** சமர்ப்பித்தும் திருப்பிச் செலுத்தாக் கட்டணம் **ரூபா 15,800/-** (வரிகளுடன்) செலுத்தியும் பெற்றுக் கொள்ளமுடியும். திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தின் கொடுப்பனவு முறையானது கீழே குறிப்பிடப்பட்டவரினால் அனுமதிக்கப்பட்ட பணவைப்பாகும்.

4. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்ககளை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் பெற்ற **ரூபா 670,000/- (ரூபா ஆறு இலட்சத்து எழுபதினாயிரம்)** பெறுமதியானதும் **2024.02.28**ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியில் வழங்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாதத்தின் வடிவில் (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) வங்கிப் பிணை முறியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக் கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

5. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. நகலுடன் முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" எனும் முகவரியில் உள்ள இலங்கை வங்கியின் 14ஆம் தளத்திலுள்ள விலை மனுப் பெட்டியில் இடவும்.

| | |
|---|---|
| ஏல விலைகூறல் ஆவணங்கள் விநியோகிக்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் : | 2023.10.31 ஆம் திகதி 1500 மணி வரை |
| ஏல விலைக்கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் காப் பகுதி : | 0900 மணி 1500 மணி வரை வேலை நாட்களில் |
| முன்கூட்டிய ஏலவிலை கூறல் கூட்டம் நடைறெும் திகதியும் நேரமும் : | 2023.10.20 ஆம் திகதி 1130 மணிக்கு இலங்கை வங்கி தலையைகம் 14ம் தளம் |
| ஏல விலைக்கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்: | 2023.11.01 ஆம் திகதி 1000 மணி |
| ஏல விலைக்கூறல் திறக்கும் திகதியும் நேரமும்: | ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன். 2023.11.01 ஆம் திகதி 1000 மணி |
| ஏலவிலை கூறல் செல்லுபடியாகும் காலம் : | 2024.02.01 ஆம் திகதி வரை |

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01,
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 2204271 / 011 2544310 / 011 2434786

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு அப்பாடசாலை அதிபர் ஜே.எஸ்.எம்.பவாஹிதா தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.
*(படங்கள்: மாத்தளை சுழற்சி நிருபர்)*

# கதிரியல் புற்றுநோய் சிகிச்சையில் இளமாணி பட்டம் பெற்றார்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக பொதுப்பட்டமளிப்பு விழா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில் என். ஜே.செரோன் அனாஸ், கதிரியல் புற்றுநோய் சிகிச்சைத்துறையில் இளமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

இத்துறையில் கிழக்கு மாகாணத்தில் இளம் வயதில் இளமாணி பட்டத்தை பெற்ற முதலாவது நபராகவும் சாய்ந்தமருது மண்ணின் முதலாவது கதிரியல் புற்றுநோய் சிகிச்சையாளராகவும் இவர் உள்ளார். இவர், நூருல் ஜின்னா மற்றும் ஆமினா உம்மா ஆகியோரின் புதல்வராவார்.



இவர் தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கற்று 2018ஆம் ஆண்டு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார்.

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.07.28 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ.எஸ். கயானி அத்தாட்சிப்படுத்திய 2014.10.02 திகதியிட்ட ஈட்டு முறி இல 83 இன் பேரில் வத்தளை, ஹெந்தளை, பிரீதிபுர. இல.224 என்னும் முகவரியில் அமைந்த அரலிய ஹோட்டல் ஏக உரிமையாளர் திரு ஹேவா தந்திரிகே ரத்னசிறி என்பவரிடமிருந்து 1 ஆவது கடன் மீது 2023.06.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 77,549,001.93 (எழுபத்தேழு மில்லியன் ஐநூற்று நாற்பத்தொன்பது ஆயிரத்து ஒரு ரூபாய்களும் தொண்ணூற்று மூன்று சதங்களும்) அத்துடன் ரூ. 69,279,044.04 (அறுபத்து ஒன்பது மில்லியன் இருநூற்று எழுபத்தொன்பது ஆயிரத்து நாற்பத்து நான்கு ரூபாய்களும் நான்கு சதங்கள்) மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஐந்து (12.5%) வீதத்தில் 2023.06.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் 2 ஆவது கடன் மீது 2023.06.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.21,005,677.06 (இருபத்தொரு மில்லியன் ஐந்து ஆயிரத்து ஆறு நூற்று எழுபத்தேழு ரூபாய்களும் ஆறு சதங்களும்) அத்துடன் ரூ. 19,429,994.74 (பத்தொன்பது மில்லியன் நாநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்கு ரூபாய்களும் எழுபத்து நான்கு சதங்கள்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்று ஒன்று (6.11%) வீதத்தில் 2023.06.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட 2014.10.02 திகதியிட்ட ஈட்டு முறி இல 83 இன் பேரில் 1 ஆவது கடன் மீது ரூ. 77,549,001.93( எழுபத்தேழு மில்லியன் ஐநூற்று நாற்பத்தொன்பது ஆயிரத்து ஒரு ரூபாய்களும் தொண்ணூற்று மூன்று சதங்களும்) மற்றும் 2 ஆவது கடன் மீது ரூ.21,005,677.06 (இருபத்தொரு மில்லியன் ஐந்து ஆயிரத்து அறுநூற்று எழுபத்தேழு ரூபாய்களும் ஆறு சதங்களும்) அத்துடன் 2023.06.08 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கிரிபத்கொடை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் எனினும் கொழும்பு பதிவு மாவட்டத்தில் சியனே கோரளை, அதிகாரி பற்றுவில் களனிய பிரதேச செயலகப் பிரிவில் ஹுணுபிட்டிய கிழக்கு 256D இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் களனிய (தலுகம உப பிரிவு) பிரதேச சபை எல்லைகளுள் ஹுணுபிட்டியவில் "கிரிபத்கொட ரோட்டில் அமைந்த "நுககஹகுருந்துவத்த அல்லது நெடஉக்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜேசூரிய தயாரித்த 1987 ஜுன் 2 திகதியிட்ட வரைபடம் இல. 2577 இல் காணித்துண்டு 1A2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 142 இன் எல்லைகளாவன: **வடக்கில்** காணித்துண்டு 1A1உம், **கிழக்கில்** பாதையும் **தெற்கில்** உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜயசூரிய தயாரித்த 1986 நவம்பர் 15 திகதியிட்ட வரைபடம் இல2504 இல் காணித்துண்டு 1Bஉம் **மேற்கில்** உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜயசூரிய தயாரித்த 1986 நவம்பர் 15 திகதியிட்ட வரைபடம் இல 2504 இல் காணித்துண்டு 1C உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2577 இன் பிரகாரம் பத்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.10) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் C689/190 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய காணித்துண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பேர்ட்லி புத்திசேன தயாரித்த 2009.11.19 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.1290/2009 இல் பின்வருமாறு விபரித்துள்ளது.

மேற்கூறிய ஹுணுபிட்டிய கிராமத்தில் அமைந்த நுகஹகுருந்துவத்த அல்லது நெடஉக்கஹவத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. பேர்ட்லி புத்திசேன தயாரித்த 2009.11.19 திகதியிட்ட வரைபடம் இல 1290/2009 இல் காணித்துண்டு 1 A21 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு,அதாவது மேற்கூறிய காணித்துண்டு இன் எல்லைகளாவன: வடகிழக்கில் பிரதேச சபை றோட்டும், தென்கிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளா A.E. விஜேசூரிய தயாரித்த 1987 ஏப்ரல் 2 திகதியிட்ட வரைபடம் இல 2504 A இல் காணித்துண்டு 1B1உம் தென்மேற்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளா A.E. விஜேசூரிய தயாரித்த 1986 நவம்பர் 15 திகதியிட்ட வரைபடம் இல. 2504 இல் காணித்துண்டு 1 C உம் வடமேற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 2577இல் காணித்துண்டு 1A1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1290/2009 இன் பிரகாரம் பத்து தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.10.25) விஸ்தீரணமுடையது.

2. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளை அதிகாரி பற்றுவில் களனிய பிரதேச செயலகப் பிரிவில் ஹுணுபிட்டிய கிழக்கு 256D இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் களனிய பிரதேச சபை எல்லைகளுள் ஹுணுபிட்டிய கிராமத்தில் அமைந்த "நுககஹகுருந்துவத்த அல்லது நெடஉகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. பேர்ட்லி புத்திசேன தயாரித்த 2009.11.19 திகதியிட்ட வரைபடம் இல 1291/2009 இல் காணித்துண்டு X என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு X இன் எல்லைகளாவன: வடகிழக்கில் பிரதேச சபை றோட்டும், தென்கிழக்கில் B.J.பெர்ணாண்டோவின் காணியும் தென்மேற்கில் வரைபடம் இல2504 இல் காணித்துண்டு 1c உம் வடமேற்கில் வரைபடம் இல் 1290/2009 இல் காணித்துண்டு 1A2/1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1291/2009 இன் பிரகாரம் இருபது தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.20.5) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு X கீழ் விபரித்த காணிகளின் ஒன்றிணைத்த மீளளவை ஆகும். மேற்கூறிய ஹுணுபிட்டிய கிராமத்தில் அமைந்த "நுககஹகுருந்து வத்த அல்லது நெடஉகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜேசூரிய தயாரித்த 1987 ஏப்ரல் 2 திகதியிட்ட வரைபடம் இல 2504 A இல் காணித்துண்டு 1B1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1B1 இன் எல்லைகளாவன: **வடக்கில்** உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜேசூரிய தயாரித்த 1986 நவம்பர்15 திகதியிட்ட வரைபடம் இல. 2504 இல் காணித்துண்டு 1 A உம், **கிழக்கில்** பாதையும் **தெற்கில்** காணித்துண்டு 1B2உம் **மேற்கில்** வரைபடம் இல. 2504 இல் காணித்துண்டு 1C உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2504 A இன் பிரகாரம் பத்து (ஏ.0, றூ.0,பே.10) விஸ்தீரணமுடையது. இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/107இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஹுணுபிட்டிய கிராமத்தில் அமைந்த "நுககஹகுருந்துவத்த அல்லது நெடஉகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.E. விஜேசூரிய தயாரித்த 1987 ஏப்ரல் 2 திகதியிட்ட வரைபடம் இல 2504 A இல் காணித்துண்டு 1B2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1B2 இன் எல்லைகளாவன: வடக்கில் காணித்துண்டு 1B1 உம், கிழக்கில் பாதையும் தெற்கில் B.J. பெர்ணாண்டோவின் காணியும் மேற்கில் வரைபடம் இல. 2504 இல் காணித்துண்டு 1C உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2504 A இன் பிரகாரம் பத்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.10) விஸ்தீரணமுடையது. இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/106இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி. ஜே.டி. ஹெட்டிஆரச்சி**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**கிரிபத்கொடை.**

1975 BOC www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கட்டுகஸ்தோட்டையில் ஆணின் சடலம் மீட்பு

*அக்குறணை குறூப் நிருபர்*

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பிரதேசத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் காற்சட்டையிலிருந்து தொலைபேசி இலக்கமொன்று மீட்கப்பட்டு, அந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, உயிரிழந்தவரை அடையாளம் கண்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு உடைப்புச் சம்பவங்கள் பலவற்றுடன் உயிரிழந்தவருக்கு தொடர்பிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், சடலத்துக்கு அருகில் இருந்த பையொன்றிலிருந்து வீடு உடைப்பதற்காக பயன்படுத்தி வரும் சிறிய உபகரணங்களை மீட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே, காட்டு வழியாக வீடுகள் ஏதும் உடைப்பதற்காகச் சென்ற வேளையில் காட்டுப் பன்றிகளுக்காக வைக்கப்பட்ட மின் பொறியில் சிக்கி இவர் உயிரிழந்திருக்கலாமென்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்திய மாகாண ஆளுநருடன் பிரித்தானியத் தூதுவர் சந்திப்பு



*அக்குறணை குறூப் நிருபர்*

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேக்கும் பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர் அன்ட்ரூ பற்றிக்குக்கும் (Andrew Patrick) இடையில் சிநேக பூர்வமான சந்திப்பொன்று கண்டியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு தொடர்பாக அவர்கள் இருவரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் நினைவுச்சின்னங்களையும் பரிமாறிக் கொண்டனர்.

## இரத்தினபுரியில்

# 142,939 குடும்பங்கள் 'அஸ்வெசும' பெறத் தகுதி

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

இரத்தினபுரி மாவட்டத்தில் 3,420,027 குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில், 142,939 குடும்பங்கள் 'அஸ்வெசும' நிவாரண உதவியை பெற்றுக் கொள்வதற்கு தகுதி உடையவர்களாக உள்ளதாக, அம்மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்ன தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்கவினதும் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவளவினதும் இணைத் தலைமையில் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் 'அஸ்வெசும' நிவாரணத்தை பெற்றுக்கொள்ள 246,850 குடும்பங்கள் விண்ணப்பித்த போதும், இதற்கு தகுதி இல்லாத 95,912 குடும்பங்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

2,500 ரூபா நிவாரண உதவிக்காக 25,102 குடும்பங்களும் 5,000 ரூபா நிவாரண உதவிக்காக 21,919 குடும்பங்களும் 8,500 ரூபா நிவாரண உதவிக்காக 58,793 குடும்பங்களும் 15,000 ரூபா நிவாரண உதவிக்காக 34,045 குடும்பங்களும் தகுதி உடையவர்களாக உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

## 2024 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் /பணிகள் /சேவைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் என்பனவற்றைப் பெறுகைசெய்வதற்காக இலங்கை வங்கியுடன் தம்மைப் பதிவுசெய்ய விரும்பும் புகழ்பெற்ற வழங்குநர்கள் /ஒப்பந்தகாரர்கள் /சேவை வழங்குநர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருட்கள்:

தொகுதி இல.

**1.0 அலுவலக உபகரணங்கள் / இயந்திரங்கள்**
- 1.1 முத்திரையிடும் இயந்திரங்கள்
- 1.2 போட்டோ பிரதியிடும் இயந்திரங்கள்
- 1.3 நகலெடுத்தல் / சிறு துண்டுகளாக்குதல்
- 1.4 தராசுகள்
- 1.5 தொலைநகல் இயந்திரங்கள்
- 1.6 நாணயத்தாள் கட்டும் இயந்திரங்கள்
- 1.7 காசோலை வைப்பு இயந்திரங்கள்
- 1.8 இலத்திரனியல் தட்டச்சு இயந்திரங்கள்
- 1.9 கணிப்புப் பொறிகள் /கூட்டல் இயந்திரங்கள்
- 1.10 குறியீட்டு இயந்திரங்கள் / முத்திரையிடல் இயந்திரங்கள்
- 1.11 நாணயத் தாள்களையும் / நாணயக் குற்றிகளையும் எண்ணும் காசு வகைப்படுத்தும் இயந்திரங்கள்
- 1.12 கையொப்ப சரிபார்ப்பு /புற ஊதா விளக்குகள்
- 1.13 மல்டிமீடியா ப்ரொஜக்டர்
- 1.14 ஒலி முறைமைகள் / காணொளிக் கருத்தாடல் முறைமைகள் (Video conference)
- 1.15 ஆவண அச்சடித்தல்
- 1.16 புகைப்படக் கருவி / இணையப் புகைப்படக் கருவி / ட்ரோன் கமரா
- 1.17 EMV அட்டை பொறித்தல் / குறியீட்டு முறைப்படுத்தல் / செய்நிரலாக்க இயந்திரம்
- 1.18 வேறு வகையிலான அலுவலக இயந்திரங்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**2.0 தளபாடங்கள்**
- 2.1 மென் மரத்தினாலான / வன் மரத்தினாலான
- 2.2 உருக்கு
- 2.3 அலுமினியம்
- 2.4 சோபாக்கள்
- 2.5 வேறு வகையிலான தளபாடங்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**3.0 மின்சார, இயந்திரவியல் மற்றும் ஏனைய சேவைகள்**
- 3.1 மின்னியல் பொருத்துதல்கள் (நடுத்தர மின்னழுத்தம்)/வயரிங்
- 3.2 மிகக் குறைவான மின்னழுத்தப் பொருத்துதல்கள் (ஒலிபெருக்கி முறைமை, இசை அமைப்பு)
- 3.3 இயந்திரவியல் காற்றோட்ட மற்றும் வளிச் சீராக்கி
- 3.4 மின் உயர்த்திகள் மற்றும் நகரும் படிகள்
- 3.5 மின் பிறப்பாக்கிகள்
- 3.6 தடங்கல் ஏற்படாத சக்தி வழங்கி (UPS)
- 3.7 சூரிய சக்தி (PV) முறைமைகள்
- 3.8 நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் வடிகால்
- 3.9 உருக்கு வேலைப்பாடுகள்

**4.0 மின் உபகரணங்கள் / கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்**
- 4.1 தொலைக்காட்சி / LED திரைகள்
- 4.2 மேசை, நிறுத்தி, கூரையில் பொருத்தும், சுவர் மின்விசிறிகள் /மின்னழுத்த நிலைப்படுத்திகள்
- 4.3 மின்சார பொருத்துதல்கள் மற்றும் பிணைப்புகள்
- 4.4 வேறு வகையான மின்சார உபகரணங்கள் / கருவிகள் உதிரிப்பாகங்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**5.0 பாதுகாப்புப் பொருட்கள்**
- 5.1 தீயணைப்புக் கருவிகள் மற்றும் மீள்நிரப்பல் தீயணைப்புக் கருவிகள்
- 5.2 பாதுகாப்பு அபாய ஒலியெழுப்பும் முறைமைகள்
- 5.3 CCTV (கண்காணிப்புக் கமராக்ககள்) / IP (இணைய நெறிமுறை) முறைமைகள்
- 5.4 உள்நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமைகள் / நேர வருகை முறைமை / விரல் அடையாள உபகரணங்கள்
- 5.5 தீப் பற்றல் கண்டறியும் முறைமைகள்
- 5.6 தீப் பாதுகாப்பு மற்றும் கட்டுப்படுத்தல் முறைமைகள்

**6.0 பாதுகாப்புப் பெட்டகங்கள்**
- 6.1 பிரதான வங்கிப் பெட்டகங்கள்
- 6.2 அடகுப் பெட்டகங்கள்
- 6.3 காப்பறைக் கதவுகள்
- 6.4 தாழ் பெட்டகங்கள்
- 6.5 நேரப் பூட்டுகள்
- 6.6 தீப்பற்றா கோவை அலுமாரிகள்
- 6.7 பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள்

**7.0 அடகுத் தரகுச் சேவை**
- 7.1 உரை கற்கள்
- 7.2 தங்க மாதிரி போன்றன
- 7.3 இலத்திரனியல் தராசுகள்
- 7.4 அடர்த்தி மானிகள்

**8.0 கணினி உபகரணங்கள் / வன்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள்**
- 8.1 கணினிகள்
- 8.2 மடிக் கணினிகள் / நோட் புக்குகள் / ஐப்பேட்டுகள் (iPads)
- 8.3 ATM இயந்திரங்கள்
- 8.4 பண வைப்பு இயந்திரங்கள்
- 8.5 அச்சு இயந்திரங்கள்
- 8.6 ஆவண வருடிகள் / காசோலை வருடிகள் / கடவுச்சீட்டு வருடிகள் (scanners)
- 8.7 கணினி துணைப் பொருட்கள்
- 8.8 POS முனையங்கள் / செல்லிட POS
- 8.9 Digi pads
- 8.10 பண மீழ் சுழற்சி இயந்திரங்கள்
- 8.11 வழங்கிகள் (Servers)
- 8.12 KIOSK இயந்திரங்கள்
- 8.13 வேறு வகையிலான கணினி உபகரணங்கள் மற்றும் வன்பொருட்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**9.0 தகவல் தொழில்நுட்ப மென்பொருள் முறைமைகள்**
- 9.1 பிரயோக அமைப்பு
- 9.2 தரவுக் கடத்தல்கள்
- 9.3 பாதுகாப்புத் தீர்வுகள்
- 9.4 செயற்பாட்டு முறைமைகள்
- 9.5 மென்பொருள் பழுதுபார்த்தல்கள்
- 9.6 தரவுத்தள நிர்வாக மென்பொருள்கள்
- 9.7 வேறு வகையிலான கணினி மென்பொருள்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**10.0 தொடர்பாடல் கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள்**
- 10.1 தொலைபேசிகள்
- 10.2 கையடக்கத் தொலைபேசிகள்
- 10.3 PABX மற்றும் அதுசார்ந்த பாகங்கள்
- 10.4 அகப்பரப்பு வலைமையப்பு (LAN)
- 10.5 விரிபரப்பு வலையமைப்பு (WAN)
- 10.6 வானொலி (நடந்து கொண்டே பேசும் கருவி) (walkie-talkie)
- 10.7 வழிப்படுத்திகள் (Routers)
- 10.8 மாற்றிகள் (Switches)
- 10.9 தரவுத் தொடர்பாடல் உபகரணங்களும் துணைக் கருவிகளும்

**11.0 கணினி நுகர்பொருட்கள்**
- 11.1 அச்சிடும் நாடாக்கள்
- 11.2 ATM/CDM அச்சு இயந்திரங்களுக்கான கடதாசி உருளைகள் (Impact & Thermal Paper rolls)
- 11.3 காந்த நாடாக்கள், காட்ரிச்சுகள் (cartridges), பிளாஷ் டிறைவ்கள் (Flash Drives)
- 11.4 கணினிகள் மற்றும் போட்டோ பிரதியெடுக்கும் இயந்திரங்களுக்கான டோனர் காட்ரிச்சுகள்
- 11.5 சொடுக்கி, கணினி வன்வெட்டு, கணனி விசைப்பலகை, தரவு வடங்கள்
- 11.6 வேறு ஏதேனும் வகையிலான கணினி நுகர்வுப் பொருட்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**12.0 அச்சிடப்பட்ட பொருட்கள்**
- 12.1 படிவங்கள்
- 12.2 NCR படிவங்கள்
- 12.3 காகித உறைகள்
- 12.4 பதிவேடுகள்
- 12.5 கொண்டு செல்லும் தபால் உறைகள்
- 12.6 பிரசுரங்கள்
- 12.7 கணினிப் படிவங்கள்
- 12.8 சேமிப்புப் புத்தகங்கள்
- 12.9 பருவகால வெளியீடுகள் / சஞ்சிகைகள்
- 12.10 டிஜிட்டல், பிளெக்ஸ், கொருகேற்றட் அட்டை அச்சிடல்
- 12.11 ஓ.ஃப்செட் மற்றும் டிஜிட்டல் காகித அட்டை அச்சிடல்
- 12.12 இரகசியக் குறியீட்டுத் தாள்கள்
- 12.13 அச்சிடப்பட்ட வேறு வகை பொருட்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**13.0 பாதுகாப்பு அச்சிடல்கள்**
- 13.1 திகதியுடன் கூடிய நேரடித் தபாலுறைகள்
- 13.2 நிலையான வைப்புப் பற்றுச் சீட்டுகள்
- 13.3 அடையாள அட்டைகள்
- 13.4 இலத்திரனியல் அட்டைகள் (கடன் மற்றும் பற்று அட்டைகள்)
- 13.5 கணக்குக் கூற்றுகள் (அச்சுத் தரவுடன்)
- 13.6 காசோலைப் புத்தகங்கள் (தொடர்ச்சியான காசோலைகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு ஆவணங்கள்)
- 13.7 பரிசுக் கூப்பன்கள் / சேமிப்புச் சான்றிதழ்கள்
- 13.8 வேறு வகையான பாதுகாப்பு அச்சிடல்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**14.0 நானாவிதப் பொருட்கள் மற்றும் காகிதாதிகள்**
- 14.1 காகிதங்கள் (நகலெடுத்தல், தட்டச்சு, கொங்கரர், பேரேடு, புல்ஸ்கேப், ஸ்ரிக்கர்கள் போன்றன)
- 14.2 சகல வகையான நானாவிதப் பொருட்களும் காகிதாதிகளும் (கோவைகள், பிளாஸ்திரிக் கோவைகள் போன்றன)
- 14.3 பிளாஸ்திரிக் அட்டை உறைகள் (கடன் / பற்று அட்டைகள்)
- 14.4 ஏனைய அலுவலக உபகரணங்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**15.0 துணி மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்**
- 15.1 துணிகள்
- 15.2 சீருடைத் துணிகள்
- 15.3 சப்பாத்துகள்
- 15.4 வேறு வகையான துணிகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**16.0 பாராட்டு, விளம்பரப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருள் வகைகள்**
- 16.1 ரி-சேர்ட்கள் மற்றும் தொப்பிகள்
- 16.2 குடைகள்
- 16.3 பாடசாலை மற்றும் பயணப் பைகள்
- 16.4 கோப்பைகள்
- 16.5 உண்டியல் / விளையாட்டுப் பொருட்கள் / துவிச்சக்கர வண்டிகள்
- 16.6 புத்தகங்கள் / பொருட்கள் / தனித்துவப்படுத்தப்பட்ட பேனாக்கள்
- 16.7 மணிக்கூடுகள் / கைக்கடிகாரங்கள்
- 16.8 கல்வி மற்றும் நிறுவனப் பரிசுகள்
- 16.9 இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்பப் பரிசுப் பொருட்கள்
- 16.10 ஏதேனும் வேறு வகையான பரிசுப் பொருட்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**17.0 பாதுகாப்புச் சேவை**
- 17.1 ஆயுதம் தரித்த பாதுகாப்பு ஊழியர்கள்
- 17.2 ஆயுதம் தரிக்காத பாதுகாப்பு ஊழியர்கள்

**18.0 சிவில் / மின்சார ஒப்பந்ததாரர்கள்**
- 18.1 கட்டட நிர்மாணப் பணிகள்
- 18.2 உருக்கு கட்டட நிர்மாணங்கள்
- 18.3 இயந்திரவியல், மின்சார, குழாய் பொருத்து பணிகள்
- 18.4 நீர் / கழிவு நீர் சுததிகரிப்பு
- 18.5 திருத்துதல் மற்றும் சீரமைத்தல்
- 18.6 வடிவமைத்தல் மற்றும் கட்டுமான ஒப்பந்ததாரர்கள்
- 18.7 துளை பதித்தல் பணிகள்
- 18.8 அலுமினிய வேலைகள் மற்றும் அமைப்புக்கள்
- 18.9 உள்ளகப் பணிகள் (தரை/சுவர்/உட்கூரை பூரணப்படுத்தல் பணிகள்
- 18.10 நீர்க் காப்புகள்
- 18.11 நிலத்தோற்ற அழகுபடுத்தல் வேலைகள்
- 18.12 புவியியல் / மண் ஆய்வு (CIDA பதிவு தேவையில்லை)

**19.0 தகவல் தொழில்நுட்ப முறைமைகள் / உபகரணப் பழுதுபார்த்தல், சேவை மற்றும் பராமரிப்பு**

**20.0 பெயர்ப் பலகைகள், பதாகைகள்**

ஒளிப் பதாகைகள், LED பலகைகள், பதாதைகள் / விளம்பரப் பலகைகள், சட்ட அமைப்புகள், கோபுரம், கிளை வர்த்தக நாம விளம்பரம் மற்றும் வணிகப் பொருள் விற்பனை விதானம் / கொடிக் கம்பங்கள் விரிதல்கள், X வடிவ நிறுத்திகள், ஒளிரும் பெட்டிகள், A அட்டைகள், பதாகைகள் மற்றும் கொடிகள், கொடிக் கம்பங்கள் மற்றும் தளங்கள், முக்கோணக் கொடிகள், LED சுவர்கள், சுழலும் பதாகைகள், 3ஆக மடிக்கும் அட்டைகள், பின்னணித் திரைச்சீலை, நியோன் சமிக்ஞைப் பலகைகள்.

**21.0 பூமரங்கள், பூச் சட்டிகள் / சாடிகள் வழங்குதல் மற்றும் தோட்டத்தைப் பராமரித்தல்**

**22.0 வாகனங்களுக்கான ரயர்கள், ரியூபுகள் மற்றும் பற்றரிகள்**

**23.0 புத்தம் புதிய மோட்டார் வாகனங்கள் / மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை வழங்குதல்**

**24.0 சேவைகள்**
- 24.1 ஏலமிடல்
- 24.2 தூய்மைப்படுத்தல் சேவைகள்
- 24.3 பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள்
- 24.4 விரைவு அஞ்சல் பணி
- 24.5 அப்புறப்படுத்தல் மற்றும் அனுப்புதல்
- 24.6 அழைப்பு நிலையச் சேவைகள்
- 24.7 வாகன நன்நிலைப்படுத்தல்
- 24.8 சலவை
- 24.9 உணவு விநியோகச் சேவைகள்
- 24.10 பயனற்று அப்புறப்படுத்தப்பட்ட காகிதாதிகள் மற்றும் ஆவணங்களை அகற்றுதல்
- 24.11 தளபாடங்கள், தற்காலிகக் கொட்டில்கள், கூடாரங்கள் போன்றவற்றை வாடகைக்கு விடுதல்
- 24.12 வாகனங்கள் மற்றும் வாகனச் சேவைகளை வாடகைக்கு விடுதல்
- 24.13 இரும்புப் பெட்டகங்கள், அலுவலகத் தளபாடக் கருவிகள் என்பவற்றை இடம் மாற்றல்
- 24.14 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் குடிநீர்ப் போத்தல்கள் வழங்கல்
- 24.15 விளம்பரப்படுத்தல்
- 24.16 லெமினேட்டிங் / ஸ்கானிங்
- 24.17 கடன் அறவீட்டுச் சேவைகள்
- 24.18 இலத்திரனியற் கழிவுகளை அகற்றுதல்
- 24.19 நிழற்பட மற்றும் காணொளிப் பதிவு
- 24.20 நிழற்பட மற்றும் காணொளிப் பதிவு (டிஜிட்டல் தளங்கள்)
- 24.21 வேறு வகையான சேவைகள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**25.0 பழுதுபாத்தல்கள் மற்றும் பராமரித்தல்கள்**
- 25.1 தளபாடம்
- 25.2 மோட்டார் வாகனங்கள்
- 25.3 மின் பிறப்பாக்கிகள்
- 25.4 மின்னுயர்த்திகள்
- 25.5 வளிச் சீராக்கிகள்
- 25.6 தடங்கல் ஏற்படாத சக்தி வழங்கி (UPS)
- 25.7 அலுவலக இயந்திரங்கள், அலுவலகக் கருவிகள் / இலத்திரனியல் அலுவலகக் கருவிகள்
- 25.8 மின் மற்றும் நிலைப்படுத்திகள்
- 25.9 துப்பாக்கிகள் / பெட்டகங்கள்
- 25.10 குளிர்சாதனப் பெட்டிகள்
- 25.11 CCTV
- 25.12 உள்நுழைவுக் கட்டுப்பாட்டு அமைப்பு / நேர வருகை அமைப்பு / விரல் அடையாள உபகரணங்கள்
- 25.13 வேறு வகையான பழுது பார்த்தல்கள் (மேற்குறிப்பிட்ட பொருட்கள் தவிர)

**26.0 ஆலோசனைச் சேவைகள்**
- 26.1 கட்டட நிர்மாணம்
- 26.2 கட்டடக் கலை
- 26.3 கட்டமைப்புப் பொறியியல்
- 26.4 இயந்திரவியல், மின்சார, குழாய் பொருத்து பணிகள்
- 26.5 நிர்மாணக் கருத்திட்ட முகாமைத்துவம்
- 26.6 பசுமைக் கட்டடம்
- 26.7 நில அளவை
- 26.8 வலுசக்தி முகாமைத்துவம்
- 26.9 உள்ளக வடிவமைப்பு
- 26.10 புவிசார் பொறியியல்
- 26.11 தீ மற்றும் பாதுகாப்பு
- 26.12 செலவு முகாமைத்தவம்
- 26.13 பொறியியல் படம் வரைதல்கள்
- 26.14 நிலத் தோற்ற அழகுபடுத்தல் வேலைகள்
- 26.15 UIUX ஆலோசனைகள்

**27.0 அப்புறப்படுத்தல் முகவராண்மைகள்**

**28.0 நிகழ்வு முகாமைத்துவம்**

**பதிவு செய்வதற்கான விண்ணப்பத்திற்கு பின்வருவனவற்றுக்கான எழுத்துமூல ஆதாரங்கள் காட்டப்படல் வேண்டும்:**

1. வர்த்தகப் பெயர்களின் கீழான பதிவு. (வர்த்தகப் பதிவு 2021.01.01 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ இருத்தல் வேண்டும்).
2. கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் மின்சார, இயந்திரவியல் வேறு சேவைகளுக்குச் செல்லுபடியான CIDA பதிவு. (முன்னர் ICTAD பதிவு)
3. சூரிய சக்தி PV முறைமைகள் (3.7) வகையின் கீழ் பதிவு செய்ய எதிர்பார்க்கும் வழங்குநர்கள், அவ்வகைக்காக இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபையில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதுடன், அண்மைய பதிவு விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. இலத்திரனியற் கழிவுகளை (24.18) அகற்றும் பிரிவின் கீழ்ப் பதிவு செய்ய விரும்பும் வழங்குனர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையில் குறிப்பிட்ட பிரிவின் கீழ்ப் பதியப்பட்டிருக்க வேண்டியதுடன், அண்மைய பதிவு விபரங்களை இத்துடன் இணைக்க வேண்டும்.
5. அரசாங்க திணைக்களங்கள், சட்டரீதியான சபைகள் மற்றும் பிரபல தனியார் நிறுவனங்களிடமிருந்து இதனோடொத்த வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கான ஆணைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றைத் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல். ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்வனவு ஆணைகளின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் பதிவு செய்வதற்குத் தேவையானது.)
6. குறித்த ஆணைகளை நிறைவேற்றுவதற்கான நிதி மற்றும் ஏனைய வளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். (இதனை கணக்காய்வு நிதிக் கூற்றுகள் / வங்கி அறிக்கைகள் ஊடாக நிரூபிக்க வேண்டும்)

**நிபந்தனைகள்:**

1. இயந்திரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளைப் பழுதுபார்க்கும் /சீரமைக்கும் வழங்குனர்கள், பழுதுபார்த்தல் தேவைகளின் போது பயன்படத்தக்க வகையில், சொந்தப் பட்டறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
2. கோரப்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக மதிப்பிடத் தவறினாலோ அல்லது சரியான நேரத்துக்கு விநியோகிக்க/சேவை வழங்கத் தவறினாலோ குறிப்பிடப்பட்ட/மாதிரிக்கு ஒப்பானதல்லாதவற்றை விநியோகித்தல் / சேவை வழங்கலை மேற்கொண்டாலோ அல்லது பரிந்துரைக்கப்பட்ட பொருட்களை விடத் தரம் குறைந்த பொருட்களை விநியோகித்தாலோ பதிவிலிருந்து அகற்றப்படுவார்.
3. பொருட்கள் /சேவை வழங்கல்களுக்கான விலைகள், பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர் பட்டியலிலிருந்து கோரப்படும். எவ்வாறாயினும், தேவைப்படும்போது வேறு வழிமூலங்களில் இருந்து விலைகூறல், கொள்வனவு என்பவற்றைக் கோரும் உரிமை அல்லது புதிய வழங்குனரைப் பதிவுசெய்யும் உரிமை வங்கிக்கு உரியது.
4. ஒரு தொகுதி பொருட்களுக்கு அதிகமான பதிவுகளை மேற்கொள்ள விரும்பினால், ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.5,000/- இற்கான பணத்தை (மீளப்பெற முடியாத) செலுத்தி, தனித்தனியான படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. விண்ணப்பதாரிகள் /உரிமையாளர்கள் /பங்குதாரர்கள் /நிறுவனங்களின் பணிப்பாளர்கள் ஆகியோர் வங்கி ஊழியர்களின் மனைவி அல்லது பிள்ளைகளாக இருப்பின், அவ்வாறான விண்ணப்பதாரிகள் /வழங்குநர்கள் /ஒப்பந்தகாரர்கள் /சேவை வழங்குனர்கள் மற்றும் ஆலோசனை சேவை வழங்குனர்கள் ஆகியோர் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
6. எவ்வித காரணங்களும் கூறாமல் எந்தவொரு பதிவிற்கான விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. வங்கி விண்ணப்பதாரர்களை நிராகரித்தால், விண்ணப்பதாரர் விண்ணப்பக் கட்டணங்களைக் கோரத் தகுதியற்றவராவர்.
7. இலங்கை வங்கியின் போக்குவரத்துப் பிரிவு மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைவாகவே, மோட்டார் வாகனப் பழுதுபார்ப்பு மற்றும் வாகன சேவை வழங்குனர்களுக்கான சேவை வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவர்.

விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்ட படிவத் தொகுதிகளின் மூலமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவற்றை பின்வரும் அலுவலகங்களில் மீளளிக்கப்படாத ரூ.5,000/-க்கான கட்டணப் பணத்தைச் செலுத்தி ஒவ்வொரு தொகுதி பொருட்களுக்குமான விண்ணப்பப் படிவத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம். **இப்பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக, வாய்ப்பு மிக்க விண்ணப்பதாரிகள் தமது சேவையையும், வகை இலக்கத்தையும் கடிதத் தலைப்பில் குறிப்பிட்டு, கோரிக்கைக் கடிதம் ஒன்றை வழங்குமாறு கேட்கப்படுகிறார்கள்.** விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பரிசோதிக்கலாம்.

**விண்ணப்பப் படிவங்களை பின்வரும் மாகாண அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்:**

- **மத்திய மாகாண அலுவலகம்** - "சீபாங்க் ஹவுஸ்", இல. 88 தலதா வீதி, கண்டி
- **வட மாகாண அலுவலகம்** - இல. 476, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- **வடமத்திய மாகாண அலுவலகம்** - அனுராதபுரம்
- **சப்ரகமுவ மாகாண அலுவலகம்** - இல.227, கொழும்பு வீதி, இரத்தினபுரி
- **மேல் மாகாண தெற்கு அலுவலகம்** - இல. 175, ஹைலெவல் வீதி, நுகேகொட
- **மேல் மாகாண மத்திய அலுவலகம்** - இல. 41, பிறிஸ்டல் வீதி, கொழும்பு 01
- **கிழக்கு மாகாண அலுவலகம்** - இல. 115A, டீ.எஸ்.சேனாநாயக்க வீதி, அம்பாறை
- **வடமேல் மாகாணக் அலுவலகம்** - இல. 18, மிஹிந்து மாவத்தை, குருநாகல்
- **தென் மாகாண அலுவலகம்** - இல. 11, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை
- **ஊவா மாகாண அலுவலகம்** - இல. 17, ஹில் ட்றைவ், கெப்பட்டிப்பொல வீதி, பதுளை
- **மேல் மாகாண வடக்கு அலுவலகம்** - 2ம் மற்றும் 8ம் மாடி, இலங்கை வங்கி - மேர்ச்சன்ட் கோபுரம், புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

**பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல் : வங்கி வேலை நாட்களில் 2023.11.09ம் திகதி காலை 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.10 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

சகல விண்ணப்பங்களும், அவற்றின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2024ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் / ஒப்பந்தகாரர்கள் / சேவை வழங்குனர்கள் / ஆலோசனைச் சேவை வழங்குனர்களுக்கான பதிவு" எனக் குறிப்பிடப்பட்டு, இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பிரதம முகாமையாளர் - சொத்துக்களும் பெறுகைகளும் திணைக்களத்திற்கு, கீழ்க் காணப்படும் முகவரிக்கு, பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர்**
**சொத்துகளும் சேகரிப்பும் பகுதி,**
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 2204233, 2204272, 2204260 நேரடி : 2544310, 2430268 தொலைநகல்: 2449629
மின்னஞ்சல்: procurement2@boc.lk

1975 BOC CALL CENTRE

www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

**தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.**

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம்397) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.07.28ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு பி.டி.சமன்மாலி அத்தாட்சிப்படுத்திய 2019.12.19ஆம் திகதியிட்ட 05 ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவற்றின் பேரில் தேவாலய வீதி, துங்கலபிடிய, நீர்கொழும்பு எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட Jostein Viksund Design மற்றும் Model Centre தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்களான தேவாலய வீதி, துங்கலபிடிய, நீர்கொழும்பு எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜொஸ்டின் விக்சுந்த் மற்றும் திருமதி. சக்ரவர்த்திகே சித்ரா பெர்னாண்டோ ஆகியோர் பெற்றுக்கொண்ட கடன் வசதி மீது 2023.07.18ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 18,299,491.96 ரூபாயும் (பதினெட்டு மில்லியன் இருநூற்று தொண்ணூற்றொன்பதாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றொரு ரூபாய் தொண்ணூற்றாறு சதம்) அத்துடன் 2023.07.19ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 12,000,000.00 ரூபாய் (பன்னிரண்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு பி.டி.சமன்மாலி அத்தாட்சிப்படுத்திய 2019.12.19ஆம் திகதியிட்ட 05ஆம் இலக்க ஈட்டு முறியின் பேரில் நிலுவையாகவுள்ள 18,299,491.96 ரூபாயையும் (பதினெட்டு மில்லியன் இருநூற்று தொண்ணூற்றொன்பதாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றொரு ரூபாய் தொண்ணூற்றாறு சதம்) அத்துடன் 2023.07.19ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையில் மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர் டி அன்ட் எச் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கேற்ப இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பேலியகொட மேற்தரக் கிளையின் மூப்பு நிலை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணையானது**

“கொரககாஹாவத்த” என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.எஸ்.எஸ்.பெரேரா தயாரித்த 1993.05.27ஆந் திகதியிட்ட 2057ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை தசியா பற்று, நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, நீர்கொழும்பு பிரதேச செயலக எல்லைகளுள், 163B துங்கலபிடிய கிராம அலுவலர் பிரிவில், துங்கலபிடிய எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வீதியையும் (வி.சி), கிழக்கில் வீதியையும் (வி.சி), தெற்கில் ஜெ.எம்.எட்மண்ட் ஜெயமஹா மற்றும் எல்.எம்.ரணசிங்ஹ மற்றும் ஏனையோரின் காணிகளையும், மேற்கில் எல்.எம்.ரணசிங்ஹ மற்றும் ஏனையோரின் காணிகளையும், எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது குறிப்பிட்ட 2057ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அக்காணியிலுள்ள அனைத்துடனும் ஒரு ஏக்கர் ஒரு ரூட் மற்றும் பதினான்கு பேர்ச்சுகள் (A1.R1-P14) பரப்பளவைக் கொண்டுள்ளது.

**குறித்த காணியானது இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும் பிரிக்கப்பட்டதும்**

“கொரககாஹாவத்த” என்ற காணியியன் உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ.சிறிசேன தயாரித்த 1977.10.28ஆந் திகதியிட்ட 120/77ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள அடையாளமிடப்பட்ட எல்லை வரையறுக்கப்பட்டதுமான **காணியானது** மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை தசியா பற்று, நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, நீர்கொழும்பு பிரதேச செயலக எல்லைகளுள், 163B துங்கலபிடிய கிராம அலுவலர் பிரிவில், துங்கலபிடிய எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் கிராமசபை வீதியையும், கிழக்கில் கிராமசபை வீதியையும், தெற்கில் ஜெ.எம். எட்மண்ட் மற்றும் ஜெத்தா குருனாண்சே ஆகியோரின் காணிகளையும், மேற்கில் ஜெத்தா குருனாண்சே என்பவரின் காணியையும் கிராம சபை வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது குறிப்பிட்ட 120/77ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அக்காணியிலுள்ள அனைத்துடனும் ஒரு ஏக்கர் ஒரு ரூட் மற்றும் பதினைந்து பேர்ச்சுகள் (A1.R1-P15) பரப்பளவுடன் C888/268 என்ற இலக்கத்தின் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.**

**இலங்கை வங்கி**
**பேலியகொட கிளை**

**திரு.ஜி.எச்.எம்.என்.ஜெயதிலக்க**
**மூப்பு நிலை முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

எனது இலக்கம் : මහ/ඉ/අත්/UDA/335

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கம் கொண்ட காணிகள் கையகப்படுத்தும் (திருத்தம்) சட்டம் காணிகள் கையகப்படுத்தும் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இங்கு பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்படுகின்ற காணி அரசாங்கத்திற்கு பெறுவதற்கு உத்தேசித்துள்ளேன். மேலதிக தகவல்களுக்காக 24.08.2023ஆம் திகதி இலக்கம் 2346/46 கொண்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III1 ஐ பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கொழும்பு |
| பிரதேச செயலக பிரிவு | : மஹரகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 531, பன்னிபிட்டிய வடக்கு |
| கிடைப்பட இலக்கம் 10015 | : கொழும்பு |
| துண்டு இலக்கம் | : 01 |

**எம்.எம்.கே. தில்ருக்ஷி வல்பொல**
**பிரதேச செயலாளர்/ காணிகளை கையகப்படுத்தும் உத்தியோகத்தர்**
**மஹரகம.**

**பிரதேச செயலகம்**
**மஹரகம**
2023, 10 மாதம் 04ஆம் திகதி

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk
Your dream job awaits you...
OBSERVER JOBS
Newspaper
Web
Social media
Networking
Headhunting
At your fingertips
Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.07.28 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு B.B. ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2011.08.25ஆம் திகதிய 6445ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு MDIK கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2013.06.25ஆம் திகதிய 496ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு D. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2016.09.08ஆம் திகதிய 3257ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிகப்பற்றின் மீது 2023.07.11 வரையான வட்டியும் முதலுமாக 12,090,920.97 ரூபாயும் (பன்னிரண்டு மில்லியன் தொண்ணூறாயிரத்துத் தொள்ளாயிரத்து இருபது ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) அத்துடன் 2023.07.12ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து வீதப்படி (29.25%) 7,200,000.00 ரூபாய் (ஏழு மில்லியன் இருநூறாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 54, ஹெனேகம வீதி, கந்தலாம, மீரிகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ராமநாயக்க கங்காணமலாகே துமிந்த ராமநாயக்க (ராமநாயக்க கொன்ஸ்றக்‌ஷன்ஸின் ஏக உரிமையாளர்) என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த 6445, 496, 3257 முதலான இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிகப்பற்றின் மீதான மேற்குறித்த 12,090,920.97 ரூபாயையும் (பன்னிரண்டு மில்லியன் தொண்ணூறாயிரத்துத் தொள்ளாயிரத்து இருபது ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) அத்துடன் 2023.07.12ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரி.கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மீரிகம மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

“குக்குருமனெக்கெலே” என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. விஜித்த K பிரியரத்ன தயாரித்த 2013.03.21ஆம் திகதிய 1399ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹப்பிட்டிகம் கோரளை உடுகஹ பற்று மீரிகம நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 06 கந்தலாம கிராம சேவகர் பிரிவிலுள்ள மினிஒலுவ மற்றும் ஹெனேகம கிராமங்களில் அமைந்துள்ளதோடு வடக்கில் பீற்றர் ரணசிங்கவின் வாரிசுகளின் காணியையும் பாதையையும் (பி.ச) கிழக்கில் முன்னர் எச்.ஏ. சரடியல் அப்புஹாமிக்குச் சொந்தமாகவிருந்த காணியையும் தெற்கில் மயானத்தையும் மேற்கில் ஐ.எச். சீலாவதிக்குச் சொந்தமான இக்காணியின் பகுதியையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. விஜித்த K பிரியரத்ன தயாரித்த 313B என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B) ஆர்.கே. துமிந்த ராமநாயக்கவுக்குச் சொந்தமான இக்காணியின் பகுதியையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. விஜித்த K பிரியரத்ன தயாரித்த 313B என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A) எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 1399ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று ரூட்கள் முப்பத்தெட்டுத் தசம் ஒரு பேர்ச்சுகள் (ஏ0- ரூ3- பே38.1) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அட்டன்கல காணிப் பதிவகத்தில் H 36/30 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த 1399ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

“குக்குருமனெக்கெலே” என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் E.V. சிறிசுமண தயாரித்த 2003.12.17ஆம் திகதிய 4566ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு மினீஒலுவ மற்றும் ஹெனேகம கிராமங்களில் அமைந்துள்ளதோடு வடக்கில் பீற்றர் ரணசிங்கவால் உரிமை கோரப்படும் காணியையும் கிராம சபை பாதையையும் கிழக்கில் எச்.ஏ. சரடியல் அப்புஹாமியால் உரிமை கோரப்படும் காணியையும் தெற்கில் அரச மயானத்தையும் மேற்கில் கே.பி. கேமலாதா காரியவசம் என்பவரால் உரிமை கோரப்படும் இதே காணியின் பகுதியையும் (3242 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B) எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 4566ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் இரண்டு பேர்ச்சுகள் (ஏ1- ரூ0- பே2) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் F290/273 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த 4566ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

“குக்குருமனெக்கெலே” என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் K.A.G அமரசிங்க தயாரித்த 1979.05.19ஆம் திகதிய 3242ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு மினீஒலுவ மற்றும் ஹெனேகம கிராமங்களில் அமைந்துள்ளதோடு வடக்கில் பீற்றர் ரணசிங்கவின் வாரிசுகளின் காணியையும் கிராம சபை பாதையையும் கிழக்கில் எச்.ஏ. சரடியல் அப்புஹாமியின் காணியையும் தெற்கில் அரசுக்குச் சொந்தமான மயானத்தையும் மேற்கில் காணித்துண்டு 2ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 3242ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் இரண்டு பேர்ச்சுகள் (ஏ1-ரூ0-பே2) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் F290/273 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**இலங்கை வங்கி**
**மீரிகம கிளை**

**திருமதி கே.பி.கே.ரி.என். அமரசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பொது மக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு

1. குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் செப்பு அலொய் மற்றும் துருப்பிடிக்காத உலோக பந்து வால்வுகளுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் விபரக்குறிப்புக்கள்.
   SLS XXXX: 2023
2. திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுவிற்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் விபரக்குறிப்புக்கள் (இரண்டாம் மீள்பதிப்பு)
   SLS 712:2021 (இரண்டாம் மீள்பதிப்பு) இற்கான திருத்த வரைவு

மேலேயுள்ள வரைவு தரநிருணய கட்டளைகளுக்கான கருத்துரைகளை பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்து இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனமானது கோருகின்றது.

இந்த வரைவு இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னராக இலங்கை தரநிருணய கட்டளைகள்

நிறுவனத்தின் உரித்தான குழுக்களினால் பெற்றுக் கொண்ட கருத்துரைகள் பரிசீலனை

செய்யப்படும்.

மேலேயுள்ள திருத்த தரநிருணய கட்டளைகளின் பிரதிகளை இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவன ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

2023.12.11 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் பணிப்பாளர் நாயகத்தை வந்தடைதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா இடம், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08.**
**தொலைபேசி: 011-2671567-72**
**மின்னஞ்சல்: dg@slsi.lk**
**இணையம்: www.slsi.lk**

**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்**
**தொழில்நுட்பவியல் அமைச்சு**

it's what you want www.adz.lk

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை**
கைத்தொழில் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**விலைக்கோரலின் பெயர்: இரத்தினக்கல் சுரங்கக் குழியை மூடுதல்**

**விலைக்கோரல் இல. NGJA/18/23/2023**

இரத்தினபுரியில் அமைந்துள்ள ‘‘பிஸ்ஸிகேவத்த வத்த’’ தெல என்றழைக்கப்படும் காணியிலுள்ள இரத்தினக்கல் சுரங்கக் குழியை மூடுவற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் சார்பாக கேள்விக் குழுவின் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | பணம் / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 1,000.00 + SSCL 2.5% + VAT 15% மொத்தம் ரூபா 1,178.75 |
| விலைக்கோரல் காப்பு / பிணை முறி | ரூபா 40,000.00 |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் /நேரம் | 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.05 மணி |

| | |
|---|---|
| சுரங்கக் குழியின் அண்ணளவான பரப்பளவு | 700 $m^2$ (சதுர மீற்றர்கள்) |
| குழியின் ஆழம் (அண்ணளவாக) | 06 மீற்றர்கள் |
| கொள்ளளவு (பரும அளவு) | 4200 $m^3$ (கன மீற்றர்) |
| குழியை மூடுவதற்குத் தேவையான மண அளவு | 5460 $m^3$ (கன மீற்றர்) (1930 கியூப்கள்) |
| தற்போது குழியைச் சுற்றியுள்ள மண அளவு | 965 கியூப்கள் (அண்ணளவாக) |

**நிபந்தனைகள்:**

(I) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB)

(II) மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 + 2.5% (ரூபா 25.00) SSCL + 15% VAT (ரூபா 1,53.75) தொகையை (ரூபா 1,178.75) தொகையை 2023-10-11ஆம் திகதி முதல் 2023-10-31ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் செலுத்தியதன் பின் கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ‘‘மெக்சன்ஸ் டவர்’’, 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(iii) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், கேள்விக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இல. 12, மெக்சன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘இரத்தினக்கல் சுரங்கக் குழியை மூடுதல் **- 2023”** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு குறைந்தபட்சம் 119 நாட்கள் வரையில் செல்லுடிபடியாகும் காலம் சகிதம் வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதம் / வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2023-11-01 முதல் 2024-02-28ஆம் திகதி வரை)

(V) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் 2023-11-01ஆம் திகதி பி.ப. 02.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும். இந்த விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071 5362536 /011 2332197**

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ‘‘மெக்சன்ஸ் டவர்’’, அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி (0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல் (0112320758, 011-2332197)**
**இணையதளம் (www.ngja.gov.lk)**

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

# கல்வி அமைச்சு
# இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, VTA

## விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடத்தின் மறுசீரமைப்புப் மற்றும் உள்கட்டமைப்புப் பணி

| இல. | மாவட்டம் | விபரம் (தலைப்பு) | ஒப்பந்த இலக்கம் | பொறியியலாளார் களின் மதிப்பீட்டுத்தொகை (தற்செயலான செலவு மற்றும் வட் உள்ளடங்காத) ரூ. மில்லியன் | மீள்ச்செலுத்தப்படாத மனுப் பாதுகாப்புத் தொகை | தேவையான CIDA (ICTAD) தர பதிவுகள் (கட்டிடம்) | மீள்ச் செலுத்தப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நுவரெலியா | நுவரேலியா மாவட்டம் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தில் தற்போதுள்ள சுவர் மற்றும் சுற்றுவேலியை மறுசீரமைத்தல் | VTA/PROC/ Works/TF/NCB/ 2023/23/ Renovation and Improvements of Existing Retaining wall, Nuwara Eliya, Nuwara Eliya District | 3.7 | பணமாக ரூ.18,500.00 இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் தலைவர் இலங்கை தொழிற்கல்வி பயிற்சி அதிகாரசபையின் பெயருக்கு பெற்றுக்கொண்ட ரூ.37,000.00 மதிப்பான வங்கி உத்தரவாதம் | C 08 அல்லது C 07 | 1,500.00 |
| 2 | நுவரெலியா | நுவரேலியா மாவட்டம் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தில் ஒருபகுதியினை மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சுகாதாரம் பிரிவினை கட்டுமானம் செய்தல் | VTA/PROC/ Works/TF/ NCB/ 2023/24 Construction of Balance Student & Staff Sanitary Block Nuwara Eliya,Nuwara Eliya District | 4.90 | பணமாக ரூ.24,500.00 இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் தலைவர் இலங்கை தொழிற்கல்வி பயிற்சி அதிகாரசபையின் பெயருக்கு பெற்றுக்கொண்ட ரூ.49,000.00 மதிப்பான வங்கி உத்தரவாதம் | C 08 அல்லது C 07 | 1,500.00 |
| 3 | காலி | எல்பிட்டிய மாவட்டம் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தில் 02 கட்டிடங்களின் கூரைப்பகுதியினை புதுப்பித்தல் மற்றும் நவீனமாக்குதல் | VTA/PROC/ Works/TF/ NCB/ 2023/27 Renovation and Improvements of Existing Roof,Elpitiya, Galle District | 6.1 | பணமாக ரூ.30,500.00 இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் தலைவர் இலங்கை தொழிற்கல்வி பயிற்சி அதிகாரசபையின் பெயருக்கு பெற்றுக்கொண்ட ரூ.61,000.00 மதிப்பான வங்கி உத்தரவாதம் | C 06 அல்லது C 07 | 1,500.00 |

1. இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வழங்கல் குழு தலைவரினால் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான மேற் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. மனுக்கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேற்கொள்ளப்படும்.(**NCB**)
3. மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் 4வது பிரிவில் கூறப்பட்டுள்ள தரத்தில் நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் தேவைப்படும் மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவணங்கள் பரீட்சிப்பு **2023.10.11** ஆம் திகதி முதல் **2023.10.24** ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.3.00** மணி வரை இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளரைத் (கொள்முதல்) தொடர்புக்கொள்வதன் மூலம் அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு நேரடியாக வருகைத்தருவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**உதவிப் பணிப்பாளர் (கொள்முதல்),**
**கொள்முதல் பிரிவு,**
**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை,**
**நான்காம் மாடி, இல - 354/2 "நிபுணதா பியச", எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.**
**தொ.பே: 011-2596516**
**தொ.ந : 011-2352150**

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலே இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு **CIDA ICTAD)** பதிவின் நகல் பிரதியுடன் எழுத்துப்பூர்வ கோரிக்கையொன்றினை சமர்ப்பிப்பதன் மூலமாக **2023.10.11** ஆம் திகதி முதல் **2023.10.24** ஆம் திகதி வரை **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.3.00** மணி வரையான காலப்பகுதியினுள் ஒரு மனு ஆவணத்திற்கான மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் காசாளரிடம் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
6. இதுதொடர்பான **முன்மனுக் கூட்டம்** 2023.10.18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, ஐந்தாம் மாடி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள கட்டுமானப்பிரிவில் இடம்பெறும்.
7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை அதன் **அசல் மற்றும் நகல்** பிரதிகளை வெவ்வேராக கடித உறையிலிட்டு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அதிகாரசபையின் கொள்முதல்பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் (Bid Box) **2023.10.25 ஆம் திகதி பி.ப.02.00** மணிக்கு முன்னர் கிடைக்குமாறு இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. ஒரு மனுதாரருக்கு மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு வெவ்வேரான மனுக்களை சமர்ப்பிக்கலாம். அனைத்து மனுக்களுடனும் மேலே உள்ள அட்டவணையில் தனித் தனிப் பெறுகைக்காக விவரிக்கப்பட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மனுக்கள் இடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டத்தின் பெயர் மற்றும் கொள்முதல் இலக்கத்தினை தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை,**
**நான்காம் மாடி, இல - 354/2 "நிபுணதா பியச",**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.**

# UNIVERSITY OF VAVUNIYA

## VACANCIES

### WALK-IN INTERVIEW

Walk-in interview for the following posts will be held on **18th October 2023** at the Board Room of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya as follows:

Candidates who have the required qualifications are invited for this interview with **relevant certificates, NIC, Curriculum Vitae** along with the **Application form** downloadable from the University website.

1. Faculty of Applied Science (FAS)
   Department of Physical Science
   i. Temporary Demonstrator in Information Technology (9.00 a.m.)
   ii. Temporary Demonstrator in Applied Mathematics & Computing (9.00 a.m.)
2. Faculty of Technological Studies (FTS)
   Department of Information & Communication Technology
   i. Temporary Assistant Lecturer in Information Communication Technology (10.00 a.m.)
   ii. Temporary Demonstrator in Information Communication Technology (10.00 a.m.)

**Qualifications:**
A Degree with specialization in the relevant subject. - Ref. UGC Commission Circular No.721.

**Salary:**
Temporary Assistant Lecturer - Rs. 49,860/- (Fixed)
Temporary Demonstrator - Rs. 40,920/- (Fixed)

**Note:** In addition to the salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

**Registrar**
**09.10.2023**

# கேள்வி அழைப்பு

## வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
## உணவு ஆணையாளர் திணைக்களம்

## பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுகோரல் – 2023

உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வாகன இலக்கம் | வகை மற்றும் மொடல் | எரிபொருள் வகை | உற்பத்தி ஆண்டு | வாகனங்களை பரீட்சித்துப் பார்த்தல் |
|---|---|---|---|---|
| 51-8911 | மிட்சுபிஷி | டீசல் | 1991 | திணைக்கள வளாகத்தில் |
| 58-0776 | மிட்சுபிஷி | டீசல் | 1995 | திணைக்கள வளாகத்தில் |

மேற்படி வாகனங்களை 2023.10.24 வரை வாரத்தில் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை திணைக்கள வளாகத்தில் பரீட்சிக்கலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் விபரப் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளல் ஒரு வாகனத்திற்கு மீளளிக்கப்படாத ரூ. 1000.00 மாதிரிப் பத்திர கட்டணத்தை மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 10,000.00 கேள்வி வைப்புத் தொகையை உணவுத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023.10.25 பி.ப. 3.00 வரை கணக்குக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றே பி.ப. 3.15 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மூலையில் 'பாவணையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனு கோரல் 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**உணவு ஆணையாளர்,**
**உணவு ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு -02.**

NSB

# NATIONAL SAVINGS BANK

## TENDER NOTICE

## JANITORIAL SERVICES AT HEAD OFFICE BUILDINGS AND OFFICIAL BUNGALOWS 2024

The Chairman, Corporate Procurement Committee (Minor), National Savings Bank will receive sealed tenders for Janitorial Services of the National Savings Bank.

**Minimum Eligibility Requirements**

(a) Minimum of 3-year experience in Janitorial Services of similar nature in Government or reputed private sector institutions.

(b) The daily capacity of janitors employed in one building premises belongs to Government or reputed private sector institution should be at least 40 during the last three (03) year period, and another two-building premises with at least 35 janitors per day (each) during the same period.

(c) Minimum credit facility of Rs. 2,000,000/- from a reputed bank approved by the National Savings Bank.

Specifications and Tender Documents will be issued by the AGM (Engineering) of the Bank on receiving of non-refundable document fee of Rs. 5,000/-.

Tender Documents can be examined free of charge and could be obtained from the AGM (Engineering) of the National Savings Bank at his office from 11.10.2023 to 31.10.2023 during the working days up to 3.00 p.m. making a non-refundable payment as indicated above, in cash to the Head Office Branch of National Savings Bank.

Sealed Tenders should be sent by registered post addressed to Chairman (Corporate Procurement Committee - Minor), C/o AGM (Engineering), National Savings Bank, 255, Galle Road, Colombo 03 or hand delivered to the AGM (Engineering), Premises Division of National Savings Bank to reach him at or before 2.30 p.m. on 01.11.2023.

Tenders will be opened immediately after the closing of tenders and an authorized representative is allowed to participate in the event. For any clarification, please contact AGM (Engineering) of the Bank on Tel: 2573928.

**Chairman**
**Corporate Procurement Committee - Minor**
**National Savings Bank**
**255, Galle Road,**
**Colombo 03**


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## இங்கிலாந்து இலகு வெற்றி



பங்களாதேஷுக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

தர்மசாலாவில் நேற்று (10) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி 50 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 364 ஓட்டங்களை விளாசியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் மாலன் 107 பந்துகளில் 16 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் 140 ஓட்டங்களைபெற்றார். அதேபோன்று ஜோ ரூட் 68 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசினார்.

பதிலெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் அணி 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது. தொடர்ந்து ஓட்ட வேகத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாத பங்களாதேஷ் அணி 48.2 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. ஆரம்ப வீரர் லிட்டோன் தாஸ் அதிகபட்சமாக 76 ஓட்டங்களை பெற்றார்.

முதல் போட்டியில் நியூசிலாந்திடம் தோல்வியை சந்தித்த நடப்புச் சம்பியன் இங்கிலாந்து 2 புள்ளிகளைப் பெற்று புள்ளிப் பட்டியலில் 5ஆவது இடத்திற்கு முன்னேறியது.

# உலகக் கிண்ணத்தில் அதிவேக சதம் பெற்று குசல் சாதனை

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று (10) நடைபெற்ற உலகக் கிண்ணத்தின் எட்டாவது போட்டியில் குசல் மெண்டிஸ் 65 பந்துகளில் சதம் பெற்று உலகக் கிண்ணத்தில் அதிவேக சதம் பெற்ற இலங்கை வீரராக சாதனை படைத்தார்.

ஹைதராபாத், ராஜிவ் காந்தி சர்வதேச அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன அணிக்குத் திரும்பிய நிலையில் வேகப்பந்து வீச்சாளர் கசுன் ராஜித்த நீக்கப்பட்டார்.

இந்நிலையில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணியின் ஆரம்ப வீரர் குசல் பெரேரா டக் அவுட் ஆனபோதும் அடுத்து வந்த குசல் மெண்டிஸ் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

இதன்போது அவர் 65 பந்துகளில் 13 பௌண்டரிகள் மற்றும் நான்கு சிக்ஸர்களுடன் சதம் பெற்றார்.

இதன்மூலம் 2015 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக குமார் சங்கக்கார 70 பந்துகளில் சதம் பெற்று உலகக் கிண்ணத்தில் அதிவேக சதம் பெற்ற இலங்கை வீரர் என்ற சாதனையையே குசல் மெண்டிஸ் முறியடித்தார்.

மெண்டில் 77 பந்துகளில் 122 ஓட்டங்களை பெற்றார்.

அதேபோன்று அபாரமாக துடுப்பெடுத்தாடிய சதீர சமரவிக்ரம ஒருநாள் போட்டியில் தனது கன்னி சதத்தை பெற்றார். 89 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 108 ஓட்டங்களை பெற்றார். ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க அரைச் சதம் ஒன்றை பெற்றிருந்தார். இதன் மூலம் இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 344 ஓட்டங்களை பெற்றது.



## ஒலிம்பிக்கில் கிரிக்கெட்



2028 லொஸ் ஏஞ்சல் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட்டை இணைப்பதற்கு ஏற்பட்டாளர்கள் பரிந்துரைத்திருக்கும் நிலையில் 128 ஆண்டுகளின் பின் முதல் முறை ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ள நிலையில் டி20 கிரிக்கெட்டை இடம்பெறச் செய்ய சர்வதேச ஒலிம்பிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

பிளாக் புட்போல் மற்றும் ஸ்குவஷ் விளையாட்டுகள் 2028 ஒலிம்பிக் போட்டியில் முதல் முறை இடம்பிடிக்கவுள்ளன. தவிர பேஸ்போல் அல்லது சொப்ட்போல் மற்றும் லக்ரோஸ் விளையாட்டுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினர்கள் அடுத்த வாரம் மும்பையில் கூடி இது தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவுள்ளனர். லொஸ் ஏஞ்சல் ஒலிம்பிக்கில் ஆடவர் மற்றும் மகளிர் டி20 கிரிக்கெட் போட்டி இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஐ.சி.சி தரவரிசையில் முதல் ஆறு இடங்களைப் பிடிக்கும் அணிகள் ஒலிம்பிக் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு நேரடியாக தகுதி பெறும் என ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் இதற்கு முன்னர் ஒரே ஒரு முறை 1900 பாரிஸ் ஒலிம்பிக்கில் இடம்பெற்றிருந்தது. அப்போது 18 ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒன்றாக கிரிக்கெட் இருந்தது. எனினும் நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் போட்டியில் இருந்து விலகியதை அடுத்து ஒரே ஆட்டமாக நடைபெற்ற போட்டியில் பிரான்ஸை பிரிட்டன் வீழ்த்தியது.

## சர்வதேச செய்திகள்

# காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்கிறது: பணயக்கைதிகளுக்கு எதிராக ஹமாஸ் எச்சரிக்கை

### உயிரிழப்பு இஸ்ரேலில் 900, காசாவில் 700 ஆக உயர்வு



காசாவில் இதுவரை இல்லாத உயிரிழப்புகளை ஏற்படுத்தி வரும் இஸ்ரேலின் உக்கிர வான் தாக்குதல்கள் தொடர்ந்து வரும் நிலையில் முன்னெச்சரிக்கை இன்றி வான் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டால் தமது பிடியில் உள்ள சுமார் 150 இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் படுகொலை செய்வதாக பலஸ்தீன போராளிகள் எச்சரித்துள்ளனர்.

இஸ்ரேல் ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை (09) தொடக்கம் காசா மீது முழுமையான முற்றுகையை செயற்படுத்தியுள்ளது. இதனால் அங்கு உணவு, நீர் மற்றும் மின்சார விநியோகங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. இது ஏற்கனவே மனிதாபிமான நெருக்கடியை சந்தித்து வரும் காசாவின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்வதாக உள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் வான், தரை மற்றும் கடல் வழியாக நடத்திய தாக்குதல் இஸ்ரேலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதோடு இது அமெரிக்கா மீதான செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த எதிர்பாராத தாக்குதலினால் கொல்லப்பட்ட இஸ்ரேலியர் எண்ணிக்கை 900ஐ தாண்டியுள்ளது. இதற்கு பதிலடியாக காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் வான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 700 ஆக உயர்ந்துள்ளது. இதில் சுமார் 140 சிறுவர்கள் அடங்கும்.

பெரும் எண்ணிக்கையான பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவிய நிலையில் கடந்த இரண்டு நாட்களாக இஸ்ரேலுக்குள் தொடர்ந்து மோதல் நீடித்து வந்தது. இந்நிலையில் இஸ்ரேலிய எல்லைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று தெரிவித்தது.

இந்நிலையில் இஸ்ரேலுக்குள் இருந்து சுமார் 1,500 ஹமாஸ் போராளிகளின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அது குறிப்பிட்டது. இது கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் அளவை காண்பிப்பதாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா எல்லையை ஒட்டி இருக்கும் இஸ்ரேலிய சமூகங்கள் கிட்டத்தட்ட முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு விட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று சூரியோதயத்திற்கு முன்னரும் காசாவில் தொடர்ச்சியான வெடிப்புகள், தீப்பிழம்புகள் தெரிந்த வண்ணம் இருந்ததோடு சைரன் ஒலிகளும் கேட்ட வண்ணம் இருந்தது.

இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் கடந்த திங்கட்கிழமை நான்கு பணயக் கைதிகள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் தெரிவித்தது. மற்ற பணயக்கைதிகளை தாமே படுகொலை செய்ய ஆரம்பிக்கப் போவதாக அந்த அமைப்பு பின்னர் எச்சரிக்கை விடுத்தது.

"முன்னெச்சரிக்கை இன்றி எமது மக்கள் மீதான ஒவ்வொரு இலக்கிற்காகவும் பணயக்கைதியாக இருக்கும் சிவிலியன் ஒருவர் கொல்லப்படுவார்" என்று ஹமாஸின் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கசாம் படை தெரிவித்தது.

கடந்த திங்கட்கிழமை இரவு தொலைக்காட்சியில் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஹமாஸ் அமைப்பை இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழுவுடன் ஒப்பிட்டுக் கூறியதோடு இஸ்ரேல் முன்னெப்போதும் இல்லாத வகையில் படைகளை நிலைநிறுத்தத் திட்டமிட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

"ஹமாஸ் பயங்கரவாதிகள் சிறுவர்களை எரித்துக் கொன்றனர். அவர்கள் காட்டுமிராண்டிகள். ஹமாஸ் என்பது ஐ.எஸ் தான்" என்று நெதன்யாகு தெரிவித்தார்.

"ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வடக்கில் மற்ற முனையையும் பலப்படுத்தப்போவதாக" நெதன்யாகு குறிப்பிட்டார். ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகள் இடையே நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் மோதல் இடம்பெற்றது.

ஹமாஸ் தொலைவில் இருக்கும் டெல் அவிவ் மற்றும் ஜெரூசலம் மீது ரொக்கெட் குண்டுகளை வீசிய நிலையில் அங்குள்ள ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு செயற்பட்டதோடு வான் தாக்குதலுக்கான சைரன் ஒலியும் எழுப்பப்பட்டது.

இஸ்ரேல் தனது படை நடவடிக்கைக்காக 300,000 மேலதிக துருப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2.3 மில்லியன் மக்கள் வாழும் குறுகிய நிலப் பகுதியான காசா நீண்ட காலமாக முற்றுகையில் உள்ள நிலையில் அந்தப் பகுதி மீது "முழுமையான முற்றுகை" அமுல்படுத்தப்படுவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் தெரிவித்துள்ளார். அந்தப் பகுதியில் மின்சாரம், உணவு, நீர், எரிவாயு இல்லை. அனைத்தும் மூடப்படுகின்றன என்றும் குறிப்பிட்டிருந்தார்.



மறுபுறம் காசாவுக்காக எகிப்து எல்லையான ரபா எல்லையில் தற்காலிகமாக மூடப்படுவதாக எகிப்து குறிப்பிட்டுள்ளது.

இந்த முற்றுகை அறிவித்தல் குறித்து ஐக்கிய நாடுகள் தலைவர் அன்டோனியோ குட்டரஸ் தனது கவலையை வெளியிட்டுள்ளார். ஏற்கனவே மோசமான மனிதாபிமான நிலைக்கு முகம்கொடுத்திருக்கும் காசாவில், நிலைமை மேலும் தீவிரம் அடையும் என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் ஹமாஸை தோற்கடிப்பது மற்றும் பணயக்கைதிகளை விடுப்பதற்கு காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதல்களை நடத்தும் வாய்ப்பு அதிகரித்திருக்கும் சூழலில் காசாவின் நிலைமை மேலும் மோசமடையக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

**லெபனான் எல்லையில் மோதல்**

ஹமாஸின் தாக்குதலை இஸ்ரேலிய எதிரி நாடான ஈரான் வரவேற்றிருப்பது மத்திய கிழக்கில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. எனினும் இந்தத் தாக்குதலுடன் நேரடி தொடர்பு இல்லை என்று ஈரான் மறுத்துள்ளது.

ஹமாஸ் தனது நடவடிக்கையை "அல் அக்ஸா வெள்ளம்" என்று அழைத்து வருகிறது. இந்த நடவடிக்கைக்கு மேற்குக் கரை மற்றும் அரபு, இஸ்லாமிய நாடுகளின் போராளிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

"படை நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது" என்று ஹமாஸ் அதிகாரி ஹொசம் பத்ரான் டோஹாவில் இருந்து ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார். "கைதிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு தற்போது எந்த வாய்ப்பும் இல்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் கண்ட மற்றும் சக்திவாய்ந்த இராணுவம் என்று அழைக்கப்படும் இஸ்ரேலிய இராணுவம் ஹமாஸின் எதிர்பாராத தாக்குதலால் பெரும் அதிர்ச்சியை சந்தித்துள்ளது. தற்போது அந்த இராணுவம் பல முனைகளிலும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. லெபனானில் இருந்து எல்லை கடந்து வந்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் தமது படையினர் கொல்லப்பட்டதாகவும் அந்தப் பகுதியில் இலக்குகள் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் திங்கட்கிழமை குறிப்பிட்டது.

இந்தத் தாக்குதலுக்கு பலஸ்தீன ஜிஹாத் அமைப்பு பின்னர் பொறுப்பேற்றது.

மறுபுறம் இஸ்ரேலிய தாக்குதலில் தமது மூன்று உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக ஈரான் ஆதரவு லெபனான் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் அந்த அமைப்பு ஏவுகணைகள் மற்றும் ஷெல் குண்டுகளை பயன்படுத்தி நடத்திய தாக்குதலில் இரு இஸ்ரேல் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டாவது தினமாகவே கடந்த திங்கட்கிழமை ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இராணுவத்திற்கு இடையே மோதல் ஏற்பட்டது. முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹமாஸ் தாக்குதலுக்கு ஆதரவு அளித்து ஹிஸ்புல்ல இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகளை வீசியது.

"இந்த மோதலில் ஹிஸ்புல்லா இரண்டாவது முனை ஒன்றை ஏற்படுத்தும் தவறான முடிவொன்றை எடுக்க வாய்ப்பு இருப்பது பற்றி நாம் அதிகம் கவலை அடைந்துள்ளோம்" என்று அமெரிக்காவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆதரவை வழங்கும் வகையில் அமெரிக்கா தனது மிகப்பெரிய விமானதாங்கிக் கப்பல் மற்றும் ஏனைய போர் கப்பல்களை இஸ்ரேலுக்கு நெருக்கமாக நகர்த்தியுள்ளது. எனினும் அமெரிக்கப் படைகளை அங்கு அனுப்ப திட்டமில்லை என்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேலின் முயற்சிக்கு உதவப் போவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**"பொறுக்கமுடியவில்லை"**

காசாவை சுற்றி இஸ்ரேல் போட்டிருக்கும் எல்லை வேலி, கண்காணிப்பு கெமராக்கல், ஆளில்லா விமானங்கள், ரோந்து கண்காணிப்பு என அதிக பாதுகாப்புக் கொண்டதாக கருதப்பட்ட நிலையிலேயே ஹமாஸ் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தியது.

ஹமாஸ் தாக்குதலை அடுத்து நெகேவ் பாலைவனத்தில் இசை நிகழ்ச்சி இடம்பெற்ற பகுதியில் பெரும்பாலும் இளைஞர்களை கொண்ட 270க்கும் அதிகமான சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும் பலர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

ஹமாஸ் தாக்குதல்தாரிகள் கூட்டத்தின் மீது ஆர்.பீ.ஜி. ஏவுகணைகளை வீசியதை கண்டதாக இஸ்ரேலிய வீரர் எப்ரையிம் மோர்டசேவ் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மறுபுறம் காசா வான் தாக்குதல்களில் ஜபலியா அகதி முகாமில் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. அங்குள்ள இடிபாடுகளுக்குள் இருந்து தீயில் கருகிய சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இந்த மோதல்களில் மூன்று பலஸ்தீன ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை தொடக்கம் இரு படப்பிடிப்பாளர்களும் காணாமல்போயிருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு காசாவில் ஹமாஸ் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் அந்தப் பகுதியை முடக்கியுள்ள இஸ்ரேல் இதற்கு முன்னர் நான்கு போர்களை நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய வான் தாக்குதல்களால் குடியிருப்பு கோபுரங்கள், மிகப் பெரிய பள்ளிவாசல் ஒன்று மற்றும் அந்தப் பகுதிக்கான பிரதான வங்கிக் கட்டடம் ஆகியன தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

காசாவில் பாடாசாலைகளில் 137,000க்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிவாரண மற்றும் பணிகள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

"நிலைமை பொறுக்க முடியாதுள்ளது" என்று வகுப்பறை ஒன்றில் பயத்தில் உள்ள தமது மாணவர்களுடன் இருக்கும் 37 வயதான அமல் அல் சர்சாவி தெரிவித்துள்ளார்.

மேற்குக் கரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கு இடையிலான மோதல்களில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் 17 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

**உலகளாவிய அதிர்ச்சி அலை**

மத்திய கிழக்கில் மோதல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்திருப்பதோடு தங்கத்தின் மதிப்பும் உயர்ந்துள்ளது.

சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மான, பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை தொலைபேசியில் அழைத்து பேசியுள்ளார். இதன்போது இந்த மோதல் பிராந்தியத்தில் பரவுவதை தடுக்க பணியாற்றி வருவதாக முஹமது பின் சல்மான் கூறியதாக சவூதி அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனர்களுக்கு வழங்கப்படும் அபிவிருத்தி உதவிகளை மீளாய்வு செய்யவிருப்பதாக ஐரோப்பிய ஆணையம் தெரிவித்துள்ளது. எனினும் உதவிகள் இன்னும் நிறுத்தப்படவில்லை என்று அது தெளிவுபடுத்தியது. பிரிட்டனும் இதேபோன்ற அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஹமாஸ் அமைப்பை ஒரு பயங்கரவாதக் குழுவாகவே கருதுகின்றன.

ஹமாஸின் எதிர்பாராத தாக்குதலின் தீவிரத்தை கருதும்போது எந்த ஒரு இராஜதந்திர முயற்சியும் தற்போதைய சூழலில் வெற்றி அளிக்கும் சாத்தியம் குறைவாக இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவானும் இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். அவர் அவசர தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

பொதுமக்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் குறித்து எர்தவான் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதேபோன்று ஹமாஸ் மீது விமர்சனத்தை வெளியிட்ட அவர், இரு தரப்பும் போரின் "ஒழுக்கங்களை" மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 11ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2023.10-11

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | வாரியபொல நீர் வழங்கல் திட்டம் - கனேவத்த வீதி நெடுகில் uPVC/DI விநியோகக் குழாய்களைப் பதித்தல் ஒப்பந்த இல:**RSC(NW)/M-Kuru/PL/NRW/ Wari/2023/56** | 12,500/- + VAT ** | ரூபா 154,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.4 மில்லியன் | பிஔநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 குருநாகல், முகாமையாளர் (O&M) அலுவலகத்தில் 2023-10-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| 02 | கம்பஹா, அத்தனல்ல மற்றும் மினுவாங்கொட ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - மகல்கந்தயில் பாதிக்கப்பட்ட மீள் குடியேற்றக் குடும்பங்களுக்கான காணி அபிவிருத்தி - கட்டம் II ஒப்பந்த இல: **RSC(SAB)/GAMIWSS/CIVIL/ LOAN/ RUWAN/2023/23R** | 6,000/- + VAT ** | ரூபா 128,475/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 8.56 மில்லியன் | பிஔநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| 03 | தெஹியோவிட்ட நீர் வழங்கல் திட்டத்தின் சேதமடைந்துள்ள தடுப்புச் சுவரை சீர்திருத்துதல் மற்றும் கழுவிச் சென்றுள்ள பகுதிகளுக்கு கொங்கிறீட்டை நிரப்புதல் ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/CEDE/ DEHIOWITA/CIVIL/2023/112** | 4,000/- + VAT | ரூபா 25,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 2.3 மில்லியன் | பிஔநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| 04 | ஊர்காவற்றுறை நீர் வழங்கல் திட்டம் - நாரந்தனையிலுள்ள கோபுர வேலைத் தளத்திற்கு பீவீசீ முலாமிடப்பட்ட கம்பி வலை வேலியை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/SUPPLY AND DELIVERY OF NARANTHANAI FENCING-KAYTS/2023/070** | 12,500/- + VAT ** | ரூபா 134,750/- | நிர்மாண வேலைகள் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.25 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 01/11/2023 பி.ப. 2.00 மணி |
| 05 | ஒட்டுசுட்டான் நீர் வழங்கல் திட்டத்திற்கான உள்ளீர்ப்பு கட்டமைப்பை நிர்மாணித்தல் ஒப்பந்த இல: **RSC/N/DGM/CEDE-RH/ CONSTRUCTION OF INTAKE STRUCTURE/2023/036** | 12,500/- + VAT ** | ரூபா 111,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.05 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 கிளிநொச்சி, கண்டி வீதி, 155ஆம் மைல்கல், பிஔநி (வடக்கு) தேநீவவச உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 01/11/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | வவுனியா பிராந்தியத்திலுள்ள விநியோக குழாய் வழிகளை நிரப்புவதற்காக (ஓமந்தை) HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல் - கட்டம் II ஒப்பந்த இல: **RSC/N/DGM/CEDE/RH/LAYING OF HDPE/DI PIPE/OMANTHAI-PH-II/2023/076** | 12,500/- + VAT ** | ரூபா 151,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.1 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| 07 | மன்னார் நீர் வழங்கல் திட்டம் - மன்னார் முருங்கன் பிரதான விநியோகத்தின் குறுக்கு மதகிற்கு ஆதரவு தூனை நிர்மாணித்தல் ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/ON COLUMN SUPPORT MANNAR- KARICHCHADIPALA BRIDGE/2023/063** | 4,000/- + VAT | ரூபா 30,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 2.83 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 08 | வவுனியா பிராந்திய முகாமையாளர் மற்றும் உபொமு அலுவலகத்திற்கு உள்ளூர் பிரதேச வலையமைப்பை வழங்குதல் மற்றும் நிறுவுதல். ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/NETWORK/2023/073** | 4,000/- + VAT | ரூபா 100,000/- | வலையமைப்பு முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 5.00 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| 09 | வவுனியா, (வடக்கு) பி ஔ நிலையத்திற்கு 03 எண்ணிக்கையான Hydraulic Butt Fusion Welding இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்துதல் ஒப்பந்த இல:**RSC/N/DGM/NRW/Supply Delivery of 03 Hydrauilc Butt Fusion Welding Machines/2023/068** | 6,000/- + VAT ** | ரூபா 65,000/- | பி ஔ நிலையத்திற்கு (வடக்கு) Butt Fusion Welding இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 6.50 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 25/10/2023 பி.ப. 2.00 மணி |
| | 2023-09-20ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது: Woltman (Turbine Type) Bulk நீர் மானிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் (வெளிநாட்டு நாணயம்) ஒப்பந்த இல: **ADDL.GM/CAM/NRW/RH/2023/09 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | 2023-09-20ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது: இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் துப்புரவேற்பாட்டிற்கான விசேடத்துவ நிலையத்தில் மாநாடுகள் மற்றும் உற்சவ வேளைகளுக்கான சேவைகளை வழங்குவதற்கு ஹோட்டல் / உணவு வழங்குநரைப் பதிவு செய்தல். ஒப்பந்த இல. **CONTRACT NO: NWSDB/CEWAS/REG/FOOD/2023/03 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-11-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 10 | யாழ்ப்பாணம் - வலிபுரம் பம்பி இல்லத்திற்கு காஸ் குளோரினேட்டர்கள், பூஸ்டர் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல். ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/Supply Delivery – Valipuram Pump House/2023/042** | 12,500/- + VAT ** | ரூபா 144,000/- | பி ஔ நிலையத்திற்கு (வடக்கு) காஸ் குளோரினேட்டர்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 10.56 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதி, தேநீவவச யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் 2023-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 01/11/2023 பி.ப. 2.00 மணி |
| 11 | ஊர்காவற்றுறை நீர்த் தாங்கிக் கோபுரத்திற்கு இரண்டு எண்ணிக்கையான Chlorine Dosing பம்பித் தொகுதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தல். ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/SUPPLY,DELIVERY INSTALLATION DOSING PUMP/KAYTS/2023/030** | 6,000/- + VAT ** | ரூபா 85,000/- | இரண்டு எண்ணிக்கையான Chlorine Dosing பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கி நிறுவுவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 5.68 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/024-2225719/ 024-2227340 Fax:024-2225088/024-2227341 | 01/11/2023 பி.ப. 2.00 மணி |
| | 2023-08-23ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது: KRB II இல் On – Grid Solar முறைமை மற்றும் துணைப்பாகங்களை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் . ஒப்பந்த இல: **DGM/M&E/SOLAR/2023/01 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-10-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
